உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்:28

சுபர் 33 கதிர் 40 மார்கழி 21ஆம் நாள் வெள்ளிக்கிழமை 05 ஜனவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2048

வடக்கு முதலீட்டு வாய்ப்புக்களை ஆராய வருகிறது பிரிட்டன் குழு

யாழ்ப்பாணம், ஜனவரி 5

வடக்கு மாகாணத்தில் எவ்வாறான முதலீடுகளை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பில் ஆராய்வதற்காக பிரிட்டன் நாடாளுமன்ற சர்வகட்சிக் குழு இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

பிரிட்டன் நாடாளுமன்ற சர்வகட்சிக் குழுவின் 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை வந்துள்ளனர். அவர்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்றுச்சந்தித்துக் கலந்துரையாடினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக்கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரனையும் அவர்கள் நேற்றுச்சந்தித்தனர்.

"இங்குள்ள நிலமைகள் தொடர்பில் >> 06

தமிழ் சம உரிமை இயக்கம்

ஆலயத்தில் அறிக்கை வெளியீட்டால் சிக்கல்

பொலிஸிடம் அறிக்கை கோர தேர்தல்கள் திணைக்களம் முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 5

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் சின்னத்தில் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் போட்டியிடும் தமிழ் சம உரிமை இயக்கத் தினர் மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலயத்தில் வைத்து தேர்தல் அறிக்கை வெளியிட்டமை தொடர்பாகத் தேர்தல்கள் ஆணைக்குழு பொலிஸாரிடம் >> 06

அரச ஊழியர்கள்

பரப்புரையில் ஈடுபட்டால் தேர்தல் கடமைக்குத் தடை

தேர்தல்கள் திணைக்களம் திட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 5

அரச ஊழியர்கள் முகநூல் ஊடாகவோ அல்லது வேறு வழியிலோ பொதுவெளியில் அரசியல்கட்சிக்குச் சார்பாகப் பரப்புரைகளில் ஈடுபடுவது அவர்களின் நடுநிலைமைத்தன்மை >> 06

யானைக்கு எதிராக முறையிடவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 5

கோண்டாவிலில் உள்ள ஆலயத்துக்கு யானை கொண்டு வரப்பட்டமை தொடர்பில் ஈ.பி.டி.பி. எந்த வொரு முறைப் >> 06

பேருந்துச் சேவைகள் வழமைக்குத் திரும்பின

இ.போ.ச. ஊழியர்கள் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது

யாழ்ப்பாணம், ஜன.5

கடந்த 4 நாள்களாக வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் மேற்கொண்டபணிப் புறக்கணிப்புப் போராட்டம் நேற்றுப் பிற்பகல் 3 மணியுடன் முடிவுக்கு வந்தது.

நேற்றுமுன்தினம் முதலமைச்சருக்கும், இலங்கைப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே நடந்த சந்திப்பில் >> 06

வவுனியா இ.போ.சவினர் மீளப் பணிப்புறக்கணிப்பு

சாரதி மீது தாக்குதல் எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.5

இ.போ.சபை ஊழியர்களின் போராட்டம் நேற்றுப் பிற்பகல் முடிவுக்கு வந்து சேவைகள் நடைபெற ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே வவுனியா சாலையின் மீண்டும் சேவைப் புறக்கணிப்பில் குதித்தனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சாரதி ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகினார் என்று >> 06

புதுக்குடியிருப்பில் தேர்தல் நடக்குமா? நடக்காதா?

ஆணைக்குழுவின் முடிவு இன்று வெளியாகும்

யாழ்ப்பாணம், ஜன. 5

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கான தேர்தல் தொடர்பான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு இன்று வெளியிடும் என்று தெரியவருகின்றது. புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்கான >> 06

கட்சி ஒன்றின் தலைவர் கொள்ளைவழக்கில் குற்றவாளி

இனங்கண்டது யாழ். நீதிவான் நீதிமன்று

(விரிவு பக்கம் 11இல்)

பயங்கரவாதச் சட்டம் மூலம் மனித உரிமைக்குப் பாதிப்பு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 5

பயங்கரவாத தடைச் சட்டம் நாட்டில் தொடர்ந்தும் இருப்பது ஒட்டு மொத்த சமூகத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது என்று சுட்டிக் காட்டியுள்ளார் >> 06

விமர்சித்தவரை அச்சுறுத்திய விவகாரம்

வேட்பாளரும் பொலிஸாரும் முரண்பட்ட கருத்து

யாழ்ப்பாணம், ஜன. 5

முகநூலில் விமர்சித்த வரது வீட்டுக்கு வேட்பாளர் ஒருவர் பொலிஸாருடன் சென்ற சம்பவம் தொடர்பில், வேட்பாளரும், பொலிஸாரும் ஒன்றுக்கு ஒன்று முரணான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

முகநூலில் விமர்சித்தவரின் வீட்டாரை மிரட்டிய வேட்பாளர் என்ற தலைப்பில்உதயனில் நேற்று வெளியான செய்தி தொடர்பில்வேட்பாளரான மதுசுதன் உத >> 06

பிணைமுறி விவகாரத்தால் சபாநாயகருக்கு அழுத்தம்

நாடாளுமன்றைக் கூட்டுமாறு கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, ஜன. 5

நாடாளுமன்றத்தை அவசரமாகக் கூட்ட வேண்டும் என்று சபாநாயகர் கருஜயசூரியவிடம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, >> 06

பிணைமுறி மோசடி விவகாரம்

சட்டமா அதிபர் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்கும்

தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 5

மத்திய வங்கியில் இடம்பெற்றது என்று கூறப்படும் பிணை முறி மோசடியை விசாரணை செய்த அரச தலைவர் ஆணைக்குழுமைத் >> 06

சங்குவேலி வீதியிலுள்ள வய்யற் கிணற்றில் இருந்து இளைஞனின் சடலம் மீட்பு

உடலில் அடிகாயங்கள் காணப்படுவதால் சந்தேகம் >> 06

தமிழ்க் கூட்டமைப்பின் நகர்வுக்கு ஆணை வழங்க வேண்டும் மக்கள்

கோவிந்தன் கருணாகரம் தெரிவிப்பு

மட்டக்களப்பு. ஜன.5
இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்னெடுத்துவரும் நகர்வுகளுக்கு தமிழ் மக்கள் வழங்கும் ஆணையாக தேர்தல் முடிவுகள் அமைய வேண்டும் என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெவித்தார்.
உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்தாவது:
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளும் தேர்தல் மாத்திரம் அல்லாமல் அரசியல் ரீதியாக தமிழ் மக்களை ஒரு நிலைக்கு கொண்டு செல்லக்கூடிய ஒரு தேர்தலாக இருக்கின்றது. எமது மக்களின் பிரதேசங்களை திட்டமிட்டு அபிவிருத்தி செய்வதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு மக்கள் ஆணை வழங்க வேண்டும். தீர்வுத் திட்டங்களை பெற்றுக்கொள்ள நாடாளுமன்றத்தை ஒரு அரசியல் சாசன சபையாக மாற்றுவதிலே முக்கிய பங்கு வகித்துக்கொண்டிருக்கும் நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் தமிழ் மக்கள் உள்ளார்கள் என்பதை நிருபிக்கும் தேர்தலாக இது அமையவேண்டும்.
தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியாக பலமாக இருந்த காலத்தில் அரசியல் ரீதியான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்பும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறை வேற்றுவதற்காக பல வழிகளிலும் போராடிக்கொண்டிருக்கிறது. தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்புடன் ஒன்று சேர்ந்து தலைமையைப் பலப்படுத்த வேண்டும். என்றார். (ற-ரி4)

கூட்டமைப்பின் காலத்தில் அபிவிருத்தி ஏதுமில்லை

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேட்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி. ஜன.5
கூட்டமைப்புக்கு ஆதரவளித்தால் இடைக்கால அறிக்கையை நாமும் ஆதரிப்பதாக அமைந்துவிடும் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கிளிநொச்சி அமைப்பாளரும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பாளருமான தங்கவேல் ஜெகதீஸ்வரன். கிளிநொச்சியில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்தாவது
அரசியல் சீரமைப்புக் கொண்டுவரப்பட இருக்கின்றது. இப்பொழுது வந்துள்ள இடைக்கால அறிக்கையின் அங்கீகாரமாக தேர்தல் வெற்றி பார்க்கப்படப் போகின்றது. நீங்கள் தமிழ்தேசியக் கூட்டமைப்பை ஆதரித்தால் இடைகால வரைபை மக்களும் ஆதரிக்கின்றார்கள் என்று கூறப்போகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் 2010 பின்னர் நடந்த தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பு மூன்று சபைகளையும் கைப்பற்றி அரசியல் செய்கின்றார்கள்.
குறிப்பிட்டு சொல்லக் கூடிய அந்தவித அபிவிருத்தியையும் செய்யவில்லை.உள்ளூராட்சியில் ஊழல் அற்ற, அதிகார துஷ்பிரயோகம் அற்றை.உள்ளூர் அபிவிருத்திகளுடன் கூடிய ஒரு மக்கள் நேய நிர்வாகத்தை அமைப்போம். எமது வெற்றி மக்களின் வெற்றி. என்றார். (ற-35)

திடீரெனப் பரவிய தீயால் தற்காலிக வீடு சாம்பரானது

முல்லைத்தீவு.ஜன.5
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதி வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 15 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய பொருள்கள் எரிந்து சாம்பராகியுள்ளன. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது.

புதுக்குடியிருப்பு, 1 ஆம் வட்டாரத்தில் உள்ள ரகுநாதன் சுவீஸ்கரன் என்பவரின் தற்காலிக வீட்டிலேயே தீவிபத்து நடந்துள்ளது.
அருகில் இருந்தவர்கள் தீயினை அணைக்க முற்பட்டும் கட்டுப்படுத்த முடிய வில்லை வீட்டில் இருந்த அனைத்து பொருள்களும் எரிந்து சாம்பராகின எனத் தெரிவிக்கப்பட்டது.
சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், படையினர், மற்றும் கிராம மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து மின்சாரத்தை துண்டித்து எரிந்த வீட்டில் பற்றிய தீயைக் கட்டுப்படுத்தினர்.
பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உடனடியாக வீட்டு வசதியினை ஏற்படுத்திகொடுக்க புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் விரைந்து நடவடிக்கை எடுத்தார். தற்காலிக வீடு கட்டுவதற்கான பொருள்களை நிறுவளை ஒன்று உடனடியான வழங்கியுள்ளது.
கைவேலி கிராம மக்களால் 7 ஆயிரம் ரூபாவும், கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக 10 ஆயிரம் ரூபா பணமும். வன்னிக்குறோஸ் நிறுவனம் ஊடாக 10 ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. இவற்றை விட சில சமூக ஆர்வலர்கள் முன்வந்து 10 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்கள். குடும்பத்திற்கான தற்காலிக வீட்டைக்கட்டிக்கொடுக்க புதுக்குடியிருப்பில் நிலை கொண்டுள்ள படையினர் முன்வந்துள்ளனர் என்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்தார். (ற-ரி2,ரி3)

அதிகாரப் பகிர்வின் மூலமே சமூகங்களை இணைக்கலாம்

கிழக்கு முன்னாள் முதலமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன.5
அரசியல் அதிகாரப் பகிர்வின் மூலமே நாட்டில் வாழும் பல்லின சமூகங்கள் இணைய வழிவகை செய்யப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார். சமகால அரசியல் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது
இலங்கையில் இன மத நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப வேண்டுமாயின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள், மலையகத் தமிழர்கள், மலாயர்கள், வேடுவ சமூகத்தினர் உட்பட அனைத்து சிறுபான்மைச் சமூக மக்களின் நம்பிக்கையையும் நல்லாட்சி அரசு பெற்றாக வேண்டும். அரசியல் அதிகாரங்கள் சிறுபான்மைச் சமூகங்கள் மீது ஆதிக்கம் செலுத்தியதால் உண்டான அழிவு தரும் விளைவுகளை நாடு அனுபவித்திருக்கின்றது. இந்த நிலைமை இனியும் தொடரக் கூடாது. சிறுபான்மையினர் மனங்களில் அச்சமும், நிம்மதியற்ற சூழ்நிலையும் ஏற்படாவண்ணம் புதிய அரசமைப்பின் அதிகாரப் பகிர்வின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.
நாட்டில் சிறுபான்மை மக்களான முஸ்லிம், தமிழ் சமூகங்கள் ஒரு போதும் நல்லிணக்கத்துக்குத் தடையானவர்களாக இருந்ததில்லை. இனிவரும் காலங்களில் இருக்கப் போவதுமில்லை. மக்கள் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்த வேண்டிய சூழ்நிலைகளை உருவாக்காத வண்ணம் சமத்துவமான பாரபட்சமற்ற பகிர்ந்தளிக்கப்பட்ட அரசியல் அதிகார அரசாட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டும். என்றார். (ற-ரி4,46)

ஈ.பி.டி.பியின் கொள்கைகளில் மாற்றங்கள் இல்லை

டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

அம்பாறை. ஜன.5
மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி, எக்காலத்திலும் பிரிக்கப்பட முடியாத வடக்கு கிழக்கு ஓர் தனி அலகு என்ற எமது கட்சியின் நிலைப்பாட்டில் ஒரு விதமான மாற்றமும் இல்லை. அதன்படியே நாம் எமது செயற்றிட்டங்களை இன்றுவரைமுன்னெடுத்துவருகின்றோம்.
இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். உள்ளூராட்சி மன்ற தேர்தலை தொடர்பாக அம்பாறை திருக்கோயிலில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் எமது செயற்றிட்டங்கள் அல்லது கட்சியினது வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் நாம் பல சிரமங்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.
நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்கள் எமக்கான ஆதரவைத் தருவார்களேயானால் நாம் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் எமது வேலைத்திட்டங்களை முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றோம்.
கடந்தகால தவறுகளை எண்ணிக்கொண்டிருக்காது எதிர்காலத்தை வளப்படுத்தும் எமது செயற்பாடுகளுக்கு மக்கள் முழுமையான அரசியல் பலத்தைத் தரவேண்டும். தனிநபர்களது பிரச்சினைகள் என்றில்லாது பொதுமக்கள் சார்ந்த பொது அமைப்புகளது பிரச்சினைகளுக்கதக தீர்வு காணவே நாம் விரும்பு கின்றோம் என்றார்.
(ற-ரி4)

முன்னாள் உறுப்பினர்களுக்கு இடமில்லை

வடமராட்சி. ஜன.5
பருத்தித்துறை பிரதேச சபைக்கான மிழ்த் தேசியக் மப்பு வேட்பா பலில் முன்னாள் உறுப்பினர்களுள் சி.தீபானந் என்ற உறுப்பினர் ஒருவர் மட்டுமே இடம்பெற்றுள்ளார்.
முன்னாள் உறுப்பினர்களில் தமிழரசுக் கட்சியின் பருத்தித்துறைத் தொகுதிக் கிளைத் தலைவரும், முன்னாள் சபைத் தவிசாளருமான சபா.ரவீந்திரன் உட்பட ஏனைய 6 உறுப்பினர்கள் தேர்தல் பட்டியலில் இடம்பெறவில்லை.
மொத்தமாக உள்ள 9 வட்டாரத் தொகுதிகளில் 8 வட்டாரத் தொகுதிகளுக்கு புதிய வேட்பாளர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். முதலாம் வட்டாரத் தொகுதிக்கு சட்டதரணி யோ.குகதாசும், இரண்டாம் வட்டாரத் தொகுதிக்கும் சீ.புவேந்திரனும், மூன்றாம் வட்டாரத் தொகுதிக்கு அ.இமானுவேல் யோசவ்வும், நான்காம் வட்டாரத்துக்கு யோ.இருதயராஜாவும், ஐந்தாம் வட்டாரத்துக்கு லே.நவரத்தினராசாவும், ஆறாம் வட்டார தொகுதிக்கு சி.தயாபரனும், ஏழாம் வட்டாரத் தொகுதிக்கு நே.குமுதினியும், எட்டாம் வட்டாரத் தொகுதிக்கு சொ.ஜெயராஜாவும், ஒன்பதாம் வட்டாரத் தொகுதிக்கு முன்னாள் உறுப்பினரான சி.தீபானந்தும் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.
இந்தச் சபைக்கான விகிதாசாரப் பிரநிதித்துவத்துக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்காக நெ.மதினி, சோ.சாயினி, க.பாமதி, தங்கராசா தமிழரசி, செ.கேதீஸ்வரன், ச.பத்மநாதன், அ.பிரதாபன், சி.ரவீந்திரன் ஆகிய 8 பேர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கால பருத்தித்துறை பிரதேச சபைக்கான 9 உறுப்பினர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் 7 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். (ற-173)

செட்டிக்குளத்தில் வேட்பாளர் அறிமுகம்

வவுனியா, ஜன.5

வவுனியா வெண்கலச்செட்டிக்குளத்தில் வேட்பாளர் அறிமுக நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை முதலியார் குளத்தில் இடம்பெற்றது.

அதில் 2018 உள்ளூராட்சித் தேர்தலில் வவுனியா செட்டிகுளம் தொகுதியில் போட்டியிடவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்கள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர். சிறிரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. வெண்கலச்செட்டிகுளம் பிரதேசசபைத் தேர்தலுக்கான சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்கள் சிறிரெலோகட்சியின்சார்பிலேயேதெரிவுசெய்யப்பட்டனர் எனக் கூறப்படுகின்றது. (ய)



கொழும்புத்துறை அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஜன.5

கொழும்புத்துறைப் பகுதிக்கு கடந்த திங்கட்கிழமை சென்ற தமிழ்த் தேசியப் பேரவையினர் துறைமுகப் பகுதியில் மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். அங்கு மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும் கள ஆய்வில் ஈடுபட்டனர், என அவர்கள் அனுப்பிய ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் சைக்கிள் சின்னத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியப் பேரவை போட்டியிடுகின்றது.

'தூய கரங்கள் தூய நகரம்' எனும் கோஷத்தை முன்னெடுத்து தனது தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டுவரும் தமிழ்த் தேசியப் பேரவையினர் கொழும்புத்துறை முகப் பகுதியைத் தூய்மைப்படுத்துதல் மற்றும் மீனவர்களுக்கான இறங்குதுறையின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் பகுதி மக்களுடன் கலந்துரையாடினர். (எ-4)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்ட வலி. கிழக்கு பிரதேச சபைப் பிரிவில் போட்டியிடுகின்ற கா.கதிர்காமநாதன் (செல்வம்) சுயேட்சைக் குழுவினது தேர்தல் முன்மொழிவு புத்தூரில் கடந்த திங்கட்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது. (எ-4)

மக்கள் ஆதரவளிப்பர்

றிசாத் நம்பிக்கை

முல்லைத்தீவு, ஜன.5

முல்லைத்தீவு மாவட்டத்தை மீண்டும் கட்டியெழுப்பியுள்ளோம். போரால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்தினோம். அவர்களின் பல்வேறு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்றோம். அதனால் யானைச்சின்னத்தில் போட்டியிடும் எமது வேட்பாளர்களை மக்கள் வெற்றிபெறச் செய்வார்கள் இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும், கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சருமான ரிசாத் பதியுதீன் நம்பிக்கை வெளியிட்டார்.

ஜக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் முல்லைத்தீவுநகரில் நடைபெற்றது. கடற்கரைப்பகுதி விடுதி ஒன்றில் மாலை 3 மணியளவில் நிகழ்வு நடைபெற்றது. அமைச்சர் ரிசாத் தலைமைதாங்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியானது ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைந்து உள்ளுராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்றது. மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரையும் அமைச்சர் றிசாத் பதியுதீன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெனோபர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட இணைப்பாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

வேட்பாளர் சந்திப்பை அடுத்து அமைச்சர் றிசாத் பதியுதீன் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரால் இடம் பெயர்ந்த மக்கள் அனைவரையும் சொந்த மண்ணில் குடியமர்த்தும் நடவடிக்கைகள் அனைத்தையும் நிறைவுசெய்துள்ளோம். அழிந்துபோயுள்ள அனைத்துக் கட்டங்களையும் மீண்டும் கட்டியெழுப்பினோம். மக்கள் மீள வாழ்வதற்கான 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளை அமைத்தோம். அரசகட்டடங்களையும்பொதுக்கட்டங்களையும் நிர்மாணரித்தோம் மக்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தினோம். பல தொழில் வாய்ப்புகளையும் இந்த மாவட்டத்திற்கு நாங்கள் செய்துள்ளோம்.

எனவே, இந்த உள்ளூராட்சி தேர்தலில் கிராமங்களின் அபிவிருத்தியை முன்னிட்டு யானைச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை மக்கள் வெற்றிபெறசெய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது என்றார். (ய-ரி3)

மறுக்கப்பட்ட உரிமைக்காகவே சம்மந்தன் செயற்படுகிறார்

கூட்டமைப்பு வேட்பாளர் நகுலேஸ்வரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.5

கடந்தகாலங்களில் எமது உரிமை மறுக்கப்பட்டு கிட்டத்தட்ட ஏழு தசாப்த காலமாக நாம் இன்னல் வாழ்கைக்கையை வாழுகின்றோம் அந்த இன்னல்கள் களைந்து நல்வாழ்வு வேண்டும்என்பதற்காகவே தமிழ்தேசியகூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் இதய சுத்தியுடன் செயல்படுகிறார்.

இவ்வாறு மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச சபை தேர்தலில் தமிழ்தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் செல்லையா நகுலேஸ்ரவன் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது தெரிவித்தார்.அவர் தெரிவித்ததாவது மண்முனை தென்மேற்கு பிரதேசசபை மட்டுமின்றி மட்டக்களப்பு மாநகரசபை உட்பட ஒன்பது சபைகளையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் தேசியகூட்டமைப்பு இந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் கைப்பற்றும். தமிழர்கள் தமிழ்தேசியக் கூட்டமைப்புக்கு மட்டுமே வாக்களிப்பது எமது தனித்துவ அடையாளங்களை எமது மண்ணில் பாதுக்க முடியும்.என்றார். (ற-ரி4,46)

மக்கள் முன்னணியில் மதவாதத்துக்கு இடமில்லை

கூறுகிறார் தமிழ் தேசியப் பேரவையின் யாழ். மாநகர முதன்மை வேட்பாளர் மணிவண்ணன்

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக மதவாதத்தைக் கிளப்புகின்ற செயற்பாடு ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் மதவாதத்துக்கு இடமில்லை என தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ்ப்பாண மாநகர முதன்மை வேட்பாளர் வி.மணிவண்ணன் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என அவர் அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது:

எங்களுடைய கட்சி என்பது தமச் சார்புக் கொள்கை எதனையும் ஏற்றுக் கொள்ளாத கட்சி. நாங்கள் எல்லா மதங்களும் சமமாக மதிக்கப்படவேண்டும் அவர்களுக்குரிய மதிப்பு வழங்கப்படவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் செயற்படுகின்ற கட்சி. மதவாதம் பேசுபவர்களை மக்கள் அடையாளம் கண்டு நிராகரிக்க வேண்டும்.

இந்தத் தேர்தலை வெறுமனே அபிவிருத்திக்கான தேர்தலாக விட்டுச் சென்றுவிட முடியாது.

இந்த ஒற்றையாட்சி இடைக்கால வரைபினை நிராகரிக்கின்ற ஒரு மக்கள் ஆணையாகவும் இந்தத் தேர்தலை அணுக வேண்டும். நாம் அவ்வாறே செயற்படுகின்றோம்.

இடைக்கால அறிக்கையை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறுகின்ற தரப்பு இரண்டு விடயங்களை முன்னிலைப்படுத்தி வருகின்றது. அதில் ஒன்று நடை முறைச் சாத்தியமானதையே பெறவேண்டும் என்பது. மற்றையது இடைக்கால அறிக்கையில் தமிழ் மக்கள்எதிர்பார்க்கின்ற அனைத்து விடயங்களும் உள்ளடங்கியிருக்கின்றது என்பது.

ஆனால் இந்த இடைக்கால அறிக்கையில் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற எந்த அரசியல் தீர்வும் இல்லை என்பது வெளிப்படையான உண்மை. இந்த அறிக்கையில் ஒற்றையாட்சியே வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனை சிங்களத் தலைவர்கள் தென்னிலங்கை மக்களிடம் தெளிவாகக் கூறிவருகின்றனர்.

அத்தடன் இவர்கள் கூறுகின்ற நடைமுறைச் சாத்தியம் என்பதற்கு அடிமட்டவரையறை எதுவும் இல்லை. நாம் இதுதான் வேண்டும் எனக் கேட்காமல் அவர்கள் தருவதை வாங்கிக்கொண்டு பேசாமல் இருப்பதுதான் இவர்கள் கூறுகின்ற நடைமுறைச் சாத்தியமான தீர்வு. இது புற்றுநோய்க்கு பனடோலைக் கொடுத்து கட்டுப்படுத்தி வைத்திருக்கலாம் என எண்ணுகின்ற மனநிலையே ஆகும்.

இது நோயாளியின் உயிருக்கு ஆபத்தையே உண்டுபண்ணும். பேரம்பேசுவதற்கு கிடைத்த சந்தர்ப்பங்கள் அனைத்தையும்கைநழுவவிட்டுவிட்டு நடைமுறைச் சாத்தியம் எனப் பேசுவது வேடிக்கையானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். என்றுள்ளது. (எ-21)

பில்டர் ரங்கா கொழும்பில் கைது

கொழும்பு, ஜன.5

போதைப் பொருள் வர்த்தகரும், பாதாள குழுத் தலைவருமான வெல்லே சுரங்கவுக்கு மிகவும் நெருக்கமான நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு வடக்கு பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வெல்லே சுரங்க தனது சட்டவிரோத செயற்பாடுகளுக்காக முகத்துவாரம் கடற்கரைக்கு அருகில் அமைத்திருந்த இரகசிய இடத்தில் வைத்தே சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று கூறப்பட்டது.

"பில்டர் ரங்கா" என்றழைக்கபடும் ருஷான் ராஜபக்ச என்ற இவரிடம் இருந்து உள்நாட்டு தயாரிப்பான கைக்குண்டு ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்பது ஆரம்பக் கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை முகத்துவார பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி2)

முச்சக்கரவண்டி சாரதிகளுக்கான

முதலுதவி செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.5

இலங்கை செஞ்சிலுலைச்சங்க முச்சக்கர வண்டிச்சாரதிகளுக்கான முதலுதவி செயலமர்வு சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணக் கிளை, சுன்னாகம் பொலிஸ் நிலையப் பிரிவுக்கு உட்பட்ட ஆட்டோ சாரதிகளுக்காக நடைபெற்ற முதலுதவி தொடர்பான செயலமர்வில் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி செல்வகுமார், முதலுதவி போதனாசிரியர் இலங்கேஸ்வரன் மற்றும் யாழ் கிளையின் நிறை வேற்று உத்தியோகத்தர் பிரகாஸ் ஆகியோரும் ஆட்டோ சாரதிகளும் கலந்துகொண்டனர். (எ-ற-ரி4)

கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு

வவுனியா,ஜன.5

வவுனியா மண்ணின் பெண் கவிஞர் லியோனி ஷாவின் 'தாயுமானவன்' என்ற கவிதை நூல்வெளியீட்டுநிகழ்வு தமிழ்மணி மேழிக்குமரன் தலைமையில் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருத்தினராக கலையருவி இயக்குனர் ஆசிரியர் அருட்தந்தை தழிழ் நேசன் அடிகளார் கலந்துகொள்ளவுள்ளார். நூலுக்கான வெளியீட்டுரையை பாலச்சந்திரன் சந்திராவும், நூல் நயப்புரையை இரா.இராஜேஸ்வரனும் நிகழ்த்தவுள்ளது. (எ-23)

தையல் நிலையத்துக்கு விசமிகளால் தீ வைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்ப்பாணம் நல்லூர் கோவில் வீதியில் தையல் நிலையம் விசமிகளால் தீ வைத்து எரியூட்டப்பட்டது என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்றது.



நல்லூரில் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலரைக் சுட்டுக்கொன்ற வழக்கின் சந்தேகநபரின் குடும்பமே இந்தச் செயலை செய்தது என தையலகத்தின் உரிமையாளர் குற்றஞ்சாட்டினார். தொடர்பில் உரிமையாளர் தெரிவித்ததாவது:

2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இருந்து நல்லூர் கோவில் வீதியில் தையல் நிலையம் வைத்துள்ளேன். என்னை அந்த இடத்திலிருந்து அகற்ற அயலவர்கள் பல தடவைகள் முயற்சிகளை முன்னெடுத்தனர்.

மின்சார சபைக்கு முறைப்பாடு செய்து எனது கடைக்கான மின் இணைப்பையே துண்டித்தனர். பின்னர் உரிய காரணங்களைக் கூறி மீளவும் மின் இணைப்பு வழங்கப்பட்டது. மேலும் எனது கடையின் பூட்டை உடைத்த அயலவர் ஒருவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு உள்ளது. இந்த நிலையிலேயே அவர்கள் இந்த இழிசெயலை நேற்றிரவு (நேற்றுமுன்தினம்) செய்துள்ளனர் -என்றார். (எ-37)

கடலுணவு கொள்வனவில் ஈடுபடும்

வாகனங்களை பதிவு செய்யவும்

யாழ்ப்பாணம்,ஜன.5

ஊர்காவற்றுறை பிரதேசசபையில், கடலுணவு கொள்வனவில் ஈடுபடும் வாகனங்களைப் பதிவு செய்யுமாறு கோரிடப்பட்டுள்ளது. பிரதேசசபையின் எல்லைக்குள் பொதுச்சந்தைகளை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், நிர்வகித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் நடவடிக்கையின் ஓர் அங்கமாக பிரதேசத்தில் வெளியிடங்களில் இருந்து வந்து கடலுணவு மொத்த கொள்வனவில் ஈடுபடும் வாகனங்களைப் பதிவுசெய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே கடலுணவு மொத்தக் கொள்வனவில் ஈடுபடும் வாகனங்களின் உரிமையாளர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது வாகனங்களைப் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு பிரதேசசபை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-21)

ஆண்டு நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.5

யோகாசனப் பயிற்சிவகுப்பின் 10ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு கந்தர்மடத்திலுள்ள ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்தமடத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஸ்ரீமத் வேதவித்தியாசாகர சுவாமிகள் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக இந்திய துணைத்தூதர் ஆ.நடராஜன் கலந்து கலந்துகொள்ளவுள்ளார்.

அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-4)

ஆயுதங்கள் வந்தமை தொடர்பில் புலனாய்வினரே விசாரிக்கட்டுமாம்

யாழ்ப்பாணம், ஜன. 5

புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் தங்கியிருந்த வீட்டில் எவ்வாறு ஆயுதங்கள் வந்தன என்பது தொடர்பில் சந்தேக நபருக்கு தெரியாது. அது தொடர்பில் தேசிய புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று சந்தேகநபரின் சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினரான மானிப்பாயை சேர்ந்த சிவகுமார் (வயது-55) யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அண்மையில் அடாத்தாகத் தங்கியிருந்த வீட்டில் இருந்து துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் கடந்த மாதம் மீட்கப்பட்டிருந்தன. அவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார். இந்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை நீதிவான் சி.சதிஸ்தரன் முன்னிலையில் விசாரைணைக்கு வந்தது. சந்தேகநபர் மன்றில் முற்படுத்தப்பட்டார். அவர் சார்பில் மன்றில் முற்பட்ட சட்டத்தரணி , குறித்த வீட்டில் சந்தேகநபர் தங்கியிருந்தது உண்மை. ஆனால் எவ்வாறு அந்த வீட்டுக்குள் ஆயுதங்கள் வந்தன என்பது பற்றி சந்தேகநபருக்கு எதுவும் தெரியாது. ஆயுதங்கள் எங்கே இருந்து வந்தன என்பது தொடர்பில் தேசிய புலனாய்வு பிரிவினர் விசாரணை நடத்தி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார். வழக்கு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. (4-37)

ஜி.சி.ஈ உயர்தரப் பெறுபேறுகள் 2017

யாழ். இந்து மகளிர் கல்லூரி
உயிரியல் விஞ்ஞானப் பிரிவு

ஸ்ரீ.ஜானுகா 2ஏசி, ஞா.தர்ஷி ஏபிசி, வி.ஜிந்துஜா 2பிசி, அ.மயூரி 2பிசி, ர.சுதர்ஜினி 2பிசி, ஞா.கஜவாணி 2பிசி, ர.பவதாரணி பி2சி.

இ.டொறின் தர்சனா பி2சி, நி.சாளிகா பிசிஎஸ், சு.ஜீவித்தா பி2எஸ், ச.துவாரகா 3சி, ச.ஜெதுசா 2சிஎஸ், இ.டயானி 2சிஎஸ், ப.ஹயாசா 2சிஎஸ், ச.ஜன்சிகா 2சிஎஸ், மு.சுபேஸ்திகா 2சிஎஸ், சி.துர்க்கா 2சிஎஸ், தூ.கார்த்திகா 2சிஎஸ், க.சங்கவி 2சிஎஸ்

கணிதப் பிரிவு

ஜெ.நித்தியா ஏ2பி, கே.சுபகரி ஏபிசி, தி.மிதுலாயினி ஏ2சி, இ.சாரங்கா ஏ2சி, சி.சியாமினி ஏ2சி, பா.பேளினி ஏ2சி, பா.சரங்கியா ஏசிஎஸ்,

க.சதுர்சனா 2பிசி, வி.இளவேணி ஏ2எஸ், ச.கம்சிகா ஏ2எஸ், பு.கிருஷாந்தி பி2சி, க.கம்சிகா பி.சிஎஸ், கு.கோபிகா பிசிஎஸ், சி.துசந்திகா பிசிஎஸ், ம.நிதர்சனா பி2எஸ், க.சுலக்சனா பி2எஸ், சீ.கிருஷிகா 2சிஎஸ், த.கஜீந்தா 2சிஎஸ்

வர்த்தகப் பிரிவு

சி.பானுசா 3ஏ, ஞா.நிலக்சினி 3ஏ, யோ.சுலோஜனா 3ஏ, ஜெ.ஜெகாஜினி 3ஏ, த.திருமகள் 3ஏ, த.லக்சனா 2ஏபி, ப.ஜெனனி 2ஏபி, ஜெ.பிந்துஜா 2ஏபி, கு.ஜெகாசினி 2ஏபி, உ.கபீசா 2ஏபி, வே.சஞ்சிதா 2ஏசி

கலைப்பிரிவு

ப.நவன்யா 3ஏ, சி.சுகிர்தா 3ஏ, அ.டிலக்சிகா 3ஏ, கா.விஜயநிலா 3ஏ, செ.கார்த்திகாயினி 3ஏ, த.தேனுகா 3ஏ, தி.டிலீசியா 2ஏபி, வி.விஷ்ணு 2ஏசி, செ.புஸ்கரணி ஏ2பி, ஸ்ரீ.பிரபாளினி ஏ2பி, வி.ஜர்மிலா ஏ2பி, சு.திலக்ஷி ஏ2பி,

இ.இபுசணா ஏ2பி, கி.சிந்துஜா ஏபிசி, க.திருமகள் ஏபிசி, பி.கம்சாயினி ஏபிசி, கு.ரேவதி ஏபிசி, ஜீ.சஜீரா ஏபிசி, வி.உகண்ஜா ஏபிஎஸ், அ.கஸ்தூரி ஏசிஎஸ், இ.கேதுசா ஏசிசி, வி.மிதுனா ஏசிஎஸ், பா.கீர்த்திகா ஏ2சி, உ.சுமித்திரா தேவகி 3பி, ம.மயூரி சுஜாந்தினி 2ஏபி

அச்சுவேலி பொதுச்சந்தையில் வரி 50 வீதத்தால் குறைப்பு

வியாபாரிகள் மகிழ்ச்சி

அச்சுவேலி ஜன.4

அச்சுவேலி பொதுச் சந்தையின் நிர்மாணம் வலி.கிழக்கு பிரதேச சபையின் நேரடி நிர்மாணத்தின் கீழ் நடைபெறுகின்றது.

சந்தையில் மேற்கொள்ளப்படும் வரி அறவீடுகள் 50 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. வரி அறவீடுகள் குறைக்கப்பட்டது தொடர்பில் சந்தையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் மற்றும் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் சந்தையில் தங்கி இருந்து வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கான இட வாடகை நாள் ஒன்றுக்கு 300 ரூபா வீதம் அறவீடுசெய்யப்பட்டுவந்தது. அது 160 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. தற்காலிகக் கடைகளை அமைத்து வியாபாரம் செய்யும் நடைபாதை வியாபாரிகளிடம் தினம் ஒன்றுக்கு 400 ரூபா வீதம் அறிவிடப்பட்டு வந்தது. அது 200 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சந்தையில் மொத்தமாக விற்பனை செய்யும் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கான வரிகளும் நூறு ரூபாவுக்கு நான்கு ரூபா என்ற வகையில் அறவீடு செய்யப்படுகின்றது.

இந்த வரி அறவீடு நான்கு வீதத்துக்கு மேற்பட்ட அளவில் அறவீடு செய்யப்பட்டது என கடந்த காலங்களில் விவசாயிகள் தரப்பில் புகார் செய்யப்பட்டு வந்தன.

அச்சுவேலி பொதுச்சந்தை கடந்த வருடம் 2017 வருடாந்தக் குத்தகை ஒரு கோடி 16 லட்சம் ரூபாவுக்கு பெறப்பட்டிருந்தது.

இந்த வருடம் 2018 குத்தகைக்கான கேள்வி கோரப்பட்டிருந்தபோது யாரும் விண்ணப்பிக்காமையால் மூன்று தடவைகளுக்கு மேல் மீள் கேள்வி கோரப்பட்டதோடு பகிரங்க ஏலமும் விடப்பட்டது. ஆனால் யாரும் சந்தைக் குத்தகையை பெற்றுக்கொள்ள முன்வரவில்லை எனக் கூறப்படுகின்றது.

பொதுச்சந்தையை 2018ஆண்டுக் குத்தகைக்கு வழங்க முடியாத நிலையில் நேரடியாக வலி.கிழக்கு பிரதேச சபை நிர்வகித்து வருகின்றது.

வரிக்குறைப்புத் தொடர்பில் சந்தை வியாபாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:

கடந்த காலங்களில் நாள் ஒன்றுக்கு 300 ரூபா வீதம் மாதம் 9ஆயிரம் ரூபா இட வாடகை செலுத்தி வந்தோம். அது தற்போது நாள் ஒன்றுக்கு 160 ரூபா வீதம் 4ஆயிரத்து 800 ரூபாவாக குறைக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. அத்துடன் சந்தையில் நிலவிய கெடுபிடி நிலையும் ஒழிக்கப்பட்டு ஆரோக்கியமான நிலையில் செயற்படுகின்றது. எனத் தெரிவித்தார். (எ-11)

கால்கோள் விழா

தென்மராட்சி,ஜன.5

நாட்டில் உள்ள பாடசாலைகளில் தரம் ஒன்றில் மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழா எதிர்வரும் 15ஆம் திகதி காலை 7.30 மணிக்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களின் தலைமையில் கால்கோள் விழா நடைபெறும்எனவும்வலயநிகழ்வாக வரணி கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-9)

செஞ்சலணை ஞான வைரவர் ஆலய பொதுக்கூட்ட அறிவித்தல்

தெல்லிப்பழை,ஜன.5
தெல்லிப்பழை செஞ்சலணை ஞானவைரவர் கோயில் வருடாந்த பொதுக்கூட்டம் ஆலய முன்றலில் எதிர்வரும் சனிக்கிழமை பி.ப.4 மணிக்கு நடைபெறவுள்ளது.
கூட்டத்தில் 2018ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபைத் தெரிவு, 2017ஆம் ஆண்டின் நிர்வாக சபையின் ஆவணங்கள் கையளிப்பு, கலந்துரையாடல் என்பன நடைபெறவுள்ளன. கூட்டத்தில் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ-21)

இலவச மருத்துவ முகாம்

சாவகச்சேரி,ஜன.5
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இந்திய மருத்துவ நிபுணர்களின் இலவச மருத்துவ முகாம் சங்கத்தானை உப அஞ்சல் அலுவலகத்துக்கு அருகில் உள்ள கழக அலுவலகத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளது.
புற்று நரம்பு எலும்பு, கர்ப்பைப் பை கோளாறு உள்ளிட்ட நோய்களுக்கு சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் வருகை தந்து சிகிச்சை பெறுமாறு கழகத் தலைவர் லயன் உ.சிசில் றெமிண்டஸ் அறிவித்துள்ளார்.
மேலதிக தகவல்களை நேரிலோ அல்லது 021 720 0989 இலக்க தொலைபேசியிலோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் இருந்து பெற்ற

காணிகளின் பதிவுகளை புதுப்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.5

காணிசீர்திருத்த ஆணைக்குழுவிடம் இருந்து காணிகளைப் பெற்றவர்கள் பதிவுகளை புதுப்பிக்குமாறு வடக்கு வலயப் பணிப்பாளர் தி.விமலன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:
காணிசீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகள் உரிய முறையில் வழங்கப்பட்டு குடியிருப்பவர்கள் மற்றும் பயிர்செய்கையில் ஈடுபட்டு வருவோர் 2018ஆம் ஆண்டுக்கான தமது பதிவுகளை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள வடக்கு வலய காணிசீர்திருத்த அலுவலகத்தில் புதுப்பிக்கவும்.
எமது அனுமதியின்றி காணி ஆணைக்குழுவின் காணிகளில் குடியிருப்பவர்கள், பயிர்செய்கையில் ஈடுபடுவோரின் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் அவர்கள் வெளியேற்றப்படுவார்கள். அவர்கள் காணிசீர்திருத்த ஆணைக்குழுவிலிருந்து எந்தவித இழப்பீடுகளையும் கோரமுடியாது.
அத்துடன் காணிசீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் மணல் அகழ்தல், மரம் தறித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டால் அவர்கள் மீதும் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
1972ஆம் ஆண்டுக்கான முதலாம் இலக்க காணிஉச்ச வரம்பு சட்டத்தின் பிரகாரம் ஒரு நபர் வைத்திருக்கக் கூடிய காணியின் உச்ச அளவு 50ஏக்கர் வயல் நிலப்பரப்பு அதாவது 25ஏக்கர் ஆகும். அதற்கு மேல் வைத்திருந்தால் காணிசீர்திருத்த ஆணைக்குழுவால் எடுத்துக்கொள்ள முடியும். எனவே வடக்கு வலய அலுவலகத்தடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளவும் என வடக்கு மாகாண காணி சீர்திருத்த ஆணைக்குழு பணிப்பாளர் தெரிவித்துள்ளார்- என்றுள்ளது. (எ-4)

சத்திய பிரமாணம்.....



வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் புத்தாண்டு கடமைகளை ஆரம்பிப்பதற்கு முன்னராக பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் சத்திய பிரமாண நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
செயலக உத்தியோகத்தர்கள் சத்திய பிரமாணம் செய்வதைப் படங்களில் காணலாம். (எ-173)

காணி நடுவர்களுக்கு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.5
யாழ்ப்பாண மாவட்ட காணி நடுவர்களுக்கான அடையாள அட்டை மற்றும் இலட்சனை என்பனவற்றை வழங்குவதற்கு கொழும்பு நடுவர் சபை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகின்றது.
கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட யாழ்ப்பாண காணி நடுவர் சபை கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இயங்கி வருகின்றது.
இந்த சபையின் உறுப்பினர்களுக்கே சிறப்பு அடையாள அட்டை நடுவர் குழாத்தின் இலட்சனை என்பன விரைவில் வழங்கப்படவுள்ளன.
காணி நடுவர்களின் பெயர், விலாசம், பதவி என்பன குறித்த வர்த்தமானி பத்திரம் வெளியிடப்படவுள்ளது என நடுவர் சபை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-50)

சட்டத்தரணி சர்மினி பிணையில் விடுவிப்பு

மல்லாகம் நீதிமன்றில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களைக் கடமை செய்யவிடாது தடுத்ததோடு அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் உள்ள சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன், மல்லாகம் நீதிமன்றினால் நேற்றுமுன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
மல்லாகம் நீதிமன்றப் பதிவாளரை சட்டத்தரணி சர்மினி அலைபேசியில் அச்சுறுத்திய குற்றச்சாட்டு வழக்கு மல்லாகம் நீதிமன்றில் ஏற்கனவே இடம்பெற்றுவரும் நிலையில், சிறைச்சாலை உத்தியோகத்தர்களது வழக்கில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
வாள்வெட்டுக் குழுவின் முக்கிய நபர் என்று கூறப்படுபவர் மல்லாகம் நீதிமன்றிலிருந்து தப்பியோடிப் பின்னர் பிடிக்கப்பட்டிருந்தார். சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடத்தி அவரைப் பிடித்திருந்தனர். இந்த நிலையிலேயே சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து, கடமைக்கு இடையூறு புரிந்தார் என்று சட்டத்தரணி சர்மினிக்கு எதிராகச் சிறைச்சாலை உத்தியோத்தர்கள் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.
அந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. குற்றஞ்சாட்டப்படும் சட்டத்தரணியை மன்றில் முற்படுமாறு நீதிமன்று முன்னர் உத்தரவிட்டிருந்தது. நேற்றுமுன்தினம் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் இந்த வழக்கு விசரணைக்கு எடுக்கப்பட்டது. அதன்போது சட்டத்தரணி சர்மினி மன்றில் முற்பட்டார். அவர் சார்பில் இரண்டு சட்டத்தரணிகள் மன்றில் முற்பட்டிருந்தனர். அவர்கள், சந்தேகநபரான சர்மினியை சொந்த ஆள்பிணையில் விடுவிக்குமாறு கோரி சமர்ப்பணம் செய்திருந்தனர். அதனைப் பரிசீலித்த நீதிவான் அவரை 75ஆயிரம் ரூபா பெறுமதியான ஓர் ஆள் பிணையில் விடுவித்தார். இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.
இதுதவிர, இதே நீதிமன்றில் பதிவாளரை அச்சுறுத்திய வழக்கிலும் சட்டத்தரணி சர்மினி சந்தேகநபராக உள்ளார். இந்த வழக்கு இணக்க சபைக்குச் சென்றுவந்தது. இது நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்வரும் 24 ஆம் திகதி இந்த வழக்கு விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (4)

மெய்வன்மைப் போட்டி நடவடிக்கைகள் ஆரம்பம்

தென்மராட்சி,ஜன.5
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இந்த வருடத்துக்கான இல்ல மெய்வன்மைப் போட்டிக்கான தெரிவுப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.
இந்த வருடத்துக்கான மெய்வன்மைப் போட்டிகளை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்கவேண்டும்எனவலயக் கல்விப் பணிப்பாளரால்அறிவிக்கப்பட்டதையடுத்து பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளுக்கான பயிற்சிகள்நடைபெற்று வருகின்றன.
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இல்லங்களுக்கிடையிலான குழு நிலைப் போட்டிகள் இன்று தொடக்கம்ஆரம்பமாகும்எனவும் இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறும்எனவும் அதிபர் ந.ஜெயகுமாரன் தெரிவித்தார்.
குழுநிலைப் போட்டிகளில் இன்று ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டிகளும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 8ஆம் திகதி துடுப்பாட்டம் மற்றும் கூடைப்பந்தாட்டம் ஆகியவையும் 9ஆம் திகதி மரதன் ஓட்டப் போட்டிகளும் இடம்பெறும் எனவும் அதில் ஆண்களுக்கான போட்டிகள் கொடிகாமம் அரசினர் வித்தியாலத்திலிருந்தும் பெண்களுக்கான போட்டிகள் மீசாலை வீர சிங்கம் மத்திய கல்லூரி முன்றலிலிருந்தும் ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 10ஆம் திகதி பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

ஆசிரியர்களுக்கான தரவட்டமும் செயலமர்வும்

சாவகச்சேரி,ஜன.5
தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 3 வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்த தரவட்டமும் செயலமர்வும் வரணி ஆசிரிய வள நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார்.
இன்று பி.ப.2.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை கணித பாட ஆசிரியர்களுக்கான தரவட்டமும் நாளை மு.ப.8.30 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை தமிழ், சுற்றாடல் செயற்பாடுகள் தொடர்பான செயலமர்வும் நடைபெறும்.
செயலமர்வுக்கும், தரவட்டத்துக்கும் பாடசாலைகளில் தரம் 3 வகுப்புகளில் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களையும் கலந்து கொள்ளச் செய்யுமாறு பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (எ-9)

பரு. நீதிமன்றக் காணியை ராணுவம் விடுவிக்கவேண்டும்

கட்டளைத் தளபதியிடம் மேல்நீதிமன்ற நீதிபதி கோரிக்கை

பருத்தித்துறையில் மாகாண மேல் நீதிமன்றம் அமைக்க இராணுவத்தினர் வசமுள்ள நீதிமன்றக் காணியை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதியிடம் கேட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியை அவரது சமாதான அறையில் நேற்று சந்தித்த மேஜர் ஜெனரல் டர்சன ஹெட்டியாராச்சி, புத்தாண்டு வாழ்த்தைத் தெரிவித்தார்.
கட்டளைத் தளபதியுடன் யாழ்பாணம் நகரத் தளபதி பிரிகேடியர் சரத்திசாநாயக்கவும் ராணுவ சட்ட ஆலோசகரும் சென்றிருந்தனர்.
"பருத்தித்துறையில் 2 ஏக்கர் 10 நிலப்பரப்புமுடைய காணி நீதிமன்றுக்கு உள்ளது. அந்தக் காணியில் பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்திருந்தது. அதனைப் போர்க்காலத்தில் கையகப்படுத்திய இராணுவத்தினர், அங்கு 551ஆவது படைத்தளத்தை அமைத்துக்கொண்டனர். அதனை படையினர் விடுவிக்க நடவடிக்கைக்கு வலியுறுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்ற சட்டத்தரணிகள் என்னிடம் கோரியுள்ளனர்.
அந்தக் காணி விடுவிக்கப்பட்டால் பருத்தித்துறையிலும் மாகாண மேல் நீதிமன்றம் ஒன்றை அமைக்க வழிவகுக்கும்" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், தளபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். மேஜர் ஜெனரல் ஹெட்டியாராச்சி, தன்னால் முடிந்தளவு உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக நீதிபதியிடம் உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (4-37)

வடக்கு...

அறிவதற்கு வந்துள்ளார்கள். அவர்கள் வடக்கு-கிழக்கு நிலமை தொடர்பில் அறிவதிலேயே ஆர்வமாகவுள்ளார்கள். வடக்கு மாகாணத்தில் எவ்வாறான முதலீடுகளை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பில் அறிவதற்காக இன்று யாழ்ப்பாணம் செல்லவுள்ளனர். அரசமைப்பு உருவாக்கம் தொடர்பிலும் அவர்கள் கலந்துரையாடினர். புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பிலும் அவர்கள் கவனம் செலுத்தினர். இரண்டு கட்சிகளும் இணைந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று அவர்கள் கூறினர்." என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறினார். (ற-5,31)

ஆலயத்தில்...

இருந்து அறிக்கை கோரியுள்ளது என்றுதெரிய வருகின்றது.

மதத் தலங்களை தேர்தல் பரப்புரைக்குப் பயன் படுத்த முடியாது. அதையும் மீறிப்பயன்படுத்துப வர்களுக்கு எதிராக நீதிமன்றத் தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் பரப்பு ரைக்கு மதத் தலங்களைப் பயன்படுத்தியமை உறுதி செய்யப்பட்டு குற்றவாளியாக இனங்கா ணப்பட்டால் சம்பந்தப்பட்ட நபரின்அரசியல் உரிமை 4 ஆண்டுகளுக்கு பறிக்கப்படலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தி ருந்தது. தமிழ் சம உரிமை இயக்கத்தினர் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் வைத்துதேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாடு தொடர்பில் தேர்தல் கள்ஆணைக்குழு நேற்று நீண்ட நேரம் ஆராய்ந்தது. முறைப்பாட் டுக்கு ஆதரமாக ஒளிப்படங்களும் இணைக்கப்பட்டிருந்ததை தேர்தல் கள் ஆணைக்குழு கவனத்தில் எடுத்துள்ளது.

அடுத்தகட்ட நடவடிக்கைக்காக மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் அமைந்துள்ளபிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸாரிடமிருந்து அறிக்கை கோர ஆணைக்குழு முடிவு செய்துள்ளது. பொலிஸ் அறிக்கை கிடைத்த பின்னர் ஆணைக்குழு ஆராய்ந்துநடவ டிக்கை எடுக்கும் என்று அறியமுடி கின்றது. (ற-5)

பரப்புரையில்...

யைப் பாதிக்கும். அவர்கள் பரப்புரை நடவடிக் கைகளில் ஈடுபட்டால் அவர்களது தேர்தல் கட மையை இல்லாமல் செய்யவேண்டும் என்று தேர்தல்கள்ஆணைக்குழு முடிவெடுத்துள்ளது என்று அறிய முடிகின்றது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டம் நேற்று நடைபெற்றது. ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாடுகள் அதில் ஆராயப்பட்டன. அரச ஊழியர்கள் முகநூல் ஊடாக அரசியல் கட்சி சார்பாக தேர்தல் பரப்புரையில்ஈடுபடுகின்ற விடயமும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவ னத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இது தொடர் பில் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவுறுத் துவதற்கு ஆணைக்குழு முடிவு செய்தது.

அரச ஊழியர்கள் நடுநிலமையானவர்கள் என்ற அடிப்படையிலேயே தேர்தல் கடமைக ளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஒரு கட்சி சார்ந்து பரப்புரை முன்னெடுக்கும்போதுஅவர்களின் நடுநிலமை கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது. அரச ஊழியர்கள்கட்சி சார்பான பரப்புரையில் ஈடுபடாமல் இருப்பதை திணைக்களத் தலைவர் கள்உறுதிப்படுத்த வேண்டும். அதை மீறி அரச ஊழியர்கள் செயற்பட்டால், அவர்களுக்கு தேர் தல் கடமை இல்லாமல்

செய்யப்படும். அல்லது தேர் ல் முடியும் வரை யில் சம்பளமற்ற விடுமுறையில்அனுப்பப்படு வார்கள் என்பன போன்ற முடிவுகளை தேர்தல் கள் ஆணைக்குழுஎடுத்துள்ளது என்று அறிய முடிகின்றது. (ற-5)

பயங்கரவாத...

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வின் தலைவி கலாநிதி தீபிகா உடகம. கொழும் பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக 5 ஆயிரத்து 614 முறைப்பாடுகள் கடந்த ஆண்டு கிடைத்துள்ளன. ஆயிரத்து 174 முறைப்பாடு கள் பொலிஸாருக்கு எதிரானவையாகக் காணப்படுகின்றன. சட்டவிரோதமான கைது கள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பிலேயே அதிகளவு முறைப்பாடுகள் உள்ளன.

நிர்வாகப் பொறுப்புக்களை மீறுதல் தொடர்பில் 770 முறைப்பாடுகளும் அரச உத்தியோகத்தர் களுக்கு எதிரான அநீதிகள் தொடர்பில் ஆயி ரத்து 2முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. 83 முறைப்பாடுகளுக்கு பரிந்துரைகள்செய்யப்பட் டுள்ளன. 145 முறைப்பாடுகள் தொடர்பில் வழக்கு விசாரணைகள்முன்னெடுக்கப்படு கின்றன. ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள், மாணவர்களுக்கு எதிராக முன்னெடுத்த உரிமை மீறல்கள் தொடர்பாகவும் முறைப்பாடுகள் பதி வாகியுள்ளன. எவ்வாறாயினும்போதிய வளங் கள் காணப்படாமையால் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்குத் தாமதம் ஏற்படுகின்றது. கொட்டதெனியாவ பகுதியில் சித்திரவதைக் கூடமொன்று காணப்படுகின்றது என்று சத்தியக் கடதாசியுடனான முறைப்பா டொன்று எமக்குக் கிடைத்துள்ளது. அது தொடர் பாக எமது அவதானத்தைச் செலுத்தியுள்ளோம். இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டமானது நடைமுறையில் உள்ளமை பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதாகவே உள்ளது. இந்தப்பயங்கர வாத தடைச்சட்டம் மனித உரிமைகளை நிலை நிறுத்துகின்ற பாதுகாப்புச்சட்டமாக மாற்றிய மைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டி லேயே நாம் உள்ளோம்- என்றார். (ற-5,61)

வவுனியா...

தெரிவித்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

"பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தாக்கினார்

என்று கூறப்படுகின்றது. அவர்ஏன் தாக்கப்பட் டார் என்பன போன்ற விடயங்கள் தெரிய வில்லை. வவுனியா சாலையினர் மட்டும் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். ஏனைய இடங் களில் சேவை நடைபெறும். மேலதிக விசார ணைகள் நாளை (இன்று) காலை நடைபெ றும். அதன் பின்னரே விவரம் தெரியவரும்." என்று இலங்கைப் போக்குவரத்துச் சபை இணைந்த தொழிற்சங்களின் செயலாளர் அ.அருட்பிரகாசம் தெரிவித்தார்.

சாரதியைத் தாக்கியது பொலிஸ் உத்தியோகத் தர் ஒருவரே என்று குற்றஞ்சாட்டப்பட்டதால் வவுனியா பொலிஸ் உயர் அதிகாரிகள் அது பற்றிய விசாரணைகளை நேற்று முன்னெடுத் தனர். மேலதிக விசாரணை மற்றும் தகவல்க ளுக்காக பொலிஸ் உயர் அதிகாரிகள் வவு னியா டிப்போவுக்கு நேற்றுச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் சாலை யிலிருந்து வெளியேறிவிட்டதால்பொலிஸாரின் நடவடிக்கைகள் எதுவும் கைகூடவில்லை. இன்று பொலிஸார் உரிய நடவடிக்கையில் ஈடு படுவர் என்று கூறப்பட்டது. (ற-4)

பேருந்துச்...

இலங்கைப் போக்குவரத்துச்சபை தொழிற்சங் கத்தினரின் கோரிக்கை ஏற்கப்பட்டது. அது தொடர்பான அறிவித்த வழங்கப்பட்டதை அடுத்து நேற்றுப் போராட்டம் கைவிடப்பட்டது. பணிப் புறக்கணிப்பு போராட்டம் நடத்திவந்த இ.போ.ச. ஊழியர்கள் நேற்று யாழ்ப்பாணம் மையப் பேருந்து நிலையத்தில் உணவு ஒறுப் புப் போராட்டத்தையும்ஆரம்பித்தனர். காலை யில் ஆரம்பித்த போராட்டம் கோரிக்கைகள் ஏற்கப்பட்டதால் மதியத்துடன் நிறுத்தப்பட்டது.

"வவுனியாவிலுள்ள புதிய பேருந்து நிலையம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு தனியார் பேருந்துத் தரப்பினருக்கும், இலங்கைப் போக் குவரத்துச் சபையினருக்கும் வழங்கப்படுவதில் இருந்த தாமதமே போராட்டம் தொடரக் கார ணம். இன்று (நேற்று) பிற்பகல் 3 மணியளவில் தான் அந்தப் பகுதி சீர்செய்யப்பட்டு அறிவிக்கப் பட்டது. 3 மணியுடன் போராட்டத்தைக் கைவிட்டு பணியாளர்கள் பணியில் ஈடுபட்டனர். வடக்கி லுள்ள வவுனியா தவிர்ந்த ஏனைய 6சாலைக ளின் பேருந்துகளின் இன்று (நேற்று) தொடக் கம் பணியில் ஈடுபட்டுள்ளன. இனி வழமை போன்று பேருந்துகளும் பணியில் ஈடுபடும். தற்போது புதிய பேருந்து நிலையத்தி லிந்தே எமது பேருந்துகளும் சேவையில் ஈடுபடு கின்றன"என்று இலங்கைப் போக்குவரத்துச் சபை யின் சாலைகளின் தொழிற்சங்கங்களின் செயலாளர்அ.அருட்பிரகாஸ் தெரிவித்தார்.

(ற-4)

யானைக்கு...

பாட்டையும் கோப்பாய் பொலிஸில் மேற்கொள் ளவில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு வுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யானை வந்ததற்காக ஈ.பி.டி.பி. முறைப்பாடு என்ற தலைப்பில் உதயனில் கடந்த28ஆம் திகதி செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. யானை கொண்டு வந்தமைக்காக தமது கட்சி கோப்பாய் பொலிஸில் எந்தமுறைப்பாட்டையும் செய்ய வில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு வின் தலைவர் மகிந்த தேசப்பிரியவுக்கு கடிதம் மூலம் அந்தக் கட்சி அறிவித்துள்ளது. (ற-5)

புதுக்குடியிருப்பில்...

தேர்தலில் போட்டியிடச் சென்ற பெண் ஒருவ ரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினரின்ஆதரவாளர்கள் தடுத்து, மிரட்டி, அடைத்து வைத்து அவரை வேட்புமனு வில் கையெழுத்திடவிடாது திருப்பி அனுப்பினர் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குமுறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாடு தொடர்பில் தேர் தல்கள் ஆணைக்குழு நேற்று முன்தினம் ஆராய்ந்தது. இந் தப் பிரச்சினை தொடர்பில் சரி யான தீர்வு எட்டப்படாத நிலை யில் புதுக்குடியிருப்பு சபைக் கான தேர்தல் நடைபெறுவது கேள்விக்குறியாகி உள்ளது.

தேர்தலை இடைநிறுத்தலாமா என்பது தொடர்பிலும் தேர்தல் கள் ஆணைக்குழு ஆராய்ந்தி ருந்தது. நேற்றைய தினமும் ஆராயப்பட்டது. இது தொடர் பில் தேர்தல்கள் ஆணைக்குழு தனது அறிவிப்பை இன்று நடைபெறும் செய்தியாளர் கள்சந்திப்பில் அறிவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-5)

சட்டமா...

தரியிடம் கையளித்த அறிக்கை மற்றும்பரிந்து ரைகளுக்கமைய சட்டமா அதிபர் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

இவ்வாறு தலைமை அமைச்சரும் ஜக்கிய தேசி யக் கட்சியின் தலைவருமான ரணில்விக்கிரம சிங்க நேற்று பகிரங்கமாக அறிவித்தார். பிணைமுறி தொடர்பில் அரச தலைவர் மைத் திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் விடுத்த அறிவிப்புக்கு பதிலளிக்கும் வகையில் வெளி யிட்ட அறிக்கையில் தலைமைஅமைச்சர் இவ் வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

பிணைமுறிஆணைக்குழுகுறிப்பிட்டுள்ளதைப் போன்று 2008ஆம் ஆண்டு தொடக்கம் இடம் பெற்ற ஊழல் மற்றும் மோசடி தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு சட்டநடவடிக் கைகளை மேற்கொள்வதே நல்லாட்சியின் எதிர்பார்ப்பாகும். பிணைமுறி மோசடி தொடர் பான அறிக்கை தற்போது அரச தலைவரால் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது. பிணைமுறி தொடர்பில் விசாரணைசெய்த ஆணைக்குழுவுக்கு நன்றிகளைத் தெரிவிக் கின்றேன்.

2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31ஆம் திகதி கையளிக்கப்பட்ட சுனில் ஹந்துன்நெத்தி தலை மையிலான கோப் குழுவின் அறிக்கையும், எனது பணிப்புரைக்கமைய சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நல்லாட்சி அர சின் ஜனநாயக மற்றும்சட்டத்தை மதிக்கும் செயற்பாடுகளை இதன் மூலம் மீண்டும் உறுதி செய்ய எம்மால் முடிந்துள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப் படும் - என்றார். (ற-5,31)

பிணைமுறி...

மக்கள் விடுதலை முன்னணி, கூட்டு எதிரணி ஆகியன கோரிக்கை விடுத்துள்ளன. இது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்என் றும் சபாநாயகருக்கு மக்கள் விடுதலை முன் னணியின் தலைவர் அநுரகுமாரதிசாநாயக்க நேற்றுக் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி, பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்திய அரசதலைவர் ஆணைக்குழுமுன்வைத்துள்ள பரிந்துரைகள், அரச தலைவரின்அறிவிப்பு ஆகியன தொடர்பில் ஆராய்வதற்காகவே அவ சர நாடாளுமன்ற அமர்வுக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட் டுள்ளது.

"மத்திய வங்கியைப் பலப்படுத்துவதற்காக சட்ட திருத்தம் செய்யவேண்டியுள்ளது.

பிணைமுறி மோசடியால் ஏற்பட்டுள்ள இழப்பை ஈடுசெய்வதற்காக சட்டதிருத்தம்செய்யவேண்டி யுள்ளது" என்று அரச தலைவர் தனது சிறப்பு அறிவிப்பில் கூறியிருந்தார்.

அரசமைப்பின் 148ஆம் சரத்தின் பிரகாரம் நாடாளுமன்றத்துக்கே நிதி அதிகாரம்இருக்கின் றது. சட்டவாக்கச் சபையாகவும் அது காணப்ப டுகின்றது. அதற்கமையமேற்படி கோரிக்கை அரசியல் கட்சிகளால் விடுக்கப்பட்டுள்ளது. வரவு - செலவு விவாதத்துக்குப் பின்னர் ஜன வரி 23ஆம் திகதிவரை நாடாளுமன்றம்ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. பிரதான அரசியல் கட்சி கள் இவ்வாறு கோரிக்கைவிடுத்திருப்பதால் எதிர்வரும் திங்களன்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தைசபாநாயகர் கூட்டுவார் என்றும், அந்த வாரத்துக்குள் சிறப்பு சபை அமர்வுஇடம் பெறும் என்றும் அறியமுடிகின்றது. (ற-5,61)

வேட்பாளரும்...

யன்அலுவலகத்துக்கு நேற்று வந்து தனது விளக்கத்தை தெரிவித்தார்.

"நான் யாரையும் மிரட்டவில்லை. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பேன் என்று கூறவில்லை. எனது முகநூல் இரு மின் னஞ்சல்கள் அதி தொழில்நுட்பம் கொண்டு முடக்கப்பட்டுள்ளது. அதி தொழில்நுட்பம் கொண்டுஉண்மைக்கு புறம்பான செய்திகளும் சமூகவலைத் தளங்களில் பரப்பப்படுகின்றன." என்று குறிப்பிட்டார்.

"முகநூல் விமர்சனம் தொடர்பில் கடந்த 29 ஆம் திகதி கோப்பாய் பொலிஸில்முறைப்பாடு செய்திருந்தேன். 31ஆம் திகதி கோப்பாய் பொலிஸார் என்னுடன்தொடர்பு கொண்டனர். கோப்பாய் பொலிஸார் நான் முறைப்பாடு செய் தவரின் வீட்டைஇனம்கண்டு நான் வழங்கிய முறைப்பாடு தொடர்பில் வீட்டாருக்குத்தெரியப்ப டுத்தினர். அவர்கள் மன்னிப்புக் கோரினர். பொலிஸாருடன் நான்நிற்கும்போதே, முகநூ லில் விமர்சனம் செய்தவரிடமிருந்து அலை பேசி அழைப்புவந்தது." என்றும் மதுசுதன் குறிப்பிட்டார்.

"விசாரணைக்காக எந்தவொரு பொலிஸாரும் செல்லவில்லை. விசாரணையின் முன்னேற் றம் தொடர்பில் இன்று மாலை (நேற்று) முறைப் பாடு செய்தவர் வந்துவிசாரித்துவிட்டுச் சென் றார். முறைப்பாடு செய்தவரை அழைத்துக் கொண்டுபொலிஸார் செல்வது தவறு"என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தினர் நேற்றி ரவு'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

(ற-5)

வயற்...

யாழ்ப்பாணம், ஜன.5

இரு நாள்களாகக் காணாமல்போயிருந்த இளைஞர் ஒருவர் சங்குவேலி வீதியிலுள்ள வயல் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட் டார். அவரின் உடலில் பலத்த அடிகாயங்கள் காணப்பட்டன.

சீரணி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த முருகானந்த மூர்த்தி ஆனந்தபாபு (வயது-20)என்பவரே சடலமாக மீட்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை கடைக்குச் சென்று வருகிறேன் என்று கூறி இரவு 8.45மணிக்கு வெளியே சென்றார். வீடு திரும்பவில்லை. நேற் றுமுன்தினம்புதன்கிழமை வழக்கு ஒன்று இருந் தது. அதனால் அவர் வேறெங்காவது சென்றி ருப்பார் என்று நினைத்துத் தேடவில்லை என்று அவரது பெற்றோர் கூறினர்.

நேற்றுசண்டிலிப்பாய், சங்குவேலி வீதியிலுள்ள வயல் கிணறு ஒன்றிலிருந்துசடலம் கண்டுபி டிக்கப்பட்டது. பலத்த அடிகாயங்களுடன் கை, கால், கண்சிதைவடைந்த நிலையில் சடலம் காணப்பட்டது. கிணற்றுக்கு அருகில் உள்ள வயலில்பலரது கால் தடங்கள் காணப்பட்டன. இது தொடர்பான விசாரணைகளை மானிப் பாய் பொலிஸார் மேற்கொண்டுவருகின்ற னர்.

(ற-8,29,37,35)

மைத்திரிபாலவின் வாள் ரணிலை வெட்டாதது ஏன்?

மக்கள் கோரியது அறிக்கை அல்ல தண்டனையைத்தான் என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன. 5

சர்ச்சைக்குரிய மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரத்தில் மோசடி அறிக்கையை மக்கள் கோரவில்லை. மாறாக, மோசடிக்காரர்களுக்குத் தண்டனை வழங்கவேண்டும் என்றே கோருகின்றார்கள். பிணைமுறி மோசடி விவகாரம் குறித்து மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க காப்பாற்றப்பட்டுள்ளார். அவரின் கழுத்தில் அரச தலைவரின் வாள்வீச்சு படவில்லை. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்று கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 70 ஆண்டுகளில் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் நாட்டில் முன்னெடுத்த மோசடிகள் குறித்த தகவல்கள் மைத்திரியின் அறிவிப்பில் வெளிப்படுத்தப்பட்டன.

இருகட்சிகளும் ஒன்று மாறி ஒன்றாக மக்கள் பணத்தை சூறையாடியுள்ளது என்பதே உண்மையாகும். மோசடிகளை ஒழிப்பதாகக் கூறிய அரசுதான் ஆட்சிக்கு வந்த முதல் மாதத்திலேயே மிகப்பெரியளவில் வங்கிக் கொள்ளையொன்றை முன்னெடுத்தது. எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி அதன் தெளிவுபடுத்தல்களை மக்களுக்கு வழங்கியிருந்தார்.

சம்பவம் இடம்பெற்ற 10 நாள்களிலேயே மக்களுக்கு இது குறித்து தகவலை வெளிப்படுத்தினோம். 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நாடாளுமன்றத்தில் சிறப்பு கேள்விகளை எழுப்பினார். அப்போது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை பாதுகாக்கும் வகையில் உரையாற்றினார்.

இந்த உரையில் அர்ஜுன மகேந்திரனுக்கு பூரண பாதுகாப்பு வழங்கப்பட்டது. அன்றே தலைமை அமைச்சர் உண்மைகளை மறைத்துக்கொண்டிருந்தால் காலம் கடந்தாலும் உண்மையை தெரிந்துகொண்டிருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. எவ்வாறாயினும் அன்னார் கோப் குழு விசாரணைகளும் இடம்பெற்றன. அதில் எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இந்த விவகாரத்தை முழுமையாக ஆய்வு செய்தார்.

அதன் பின்னர் கோப் குழுவின் ஆய்வு தொடர்பில் அறிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, மத்திய வங்கியின் ஆளுநர் அநாவசியமான தலையீடுகளை பிணைமுறி விநியோகத்தின்போது மேற்கொண்டுள்ளார் என்று நாடாளுமன்றத்துக்கு அறிவித்திருந்தார். அதனுடன் இதனால் ஏற்பட்ட இழப்புக்களை மீளப் பெறவேண்டும் என்றும் கோப் குழு பரிந்துரை செய்திருந்தது. அந்த அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டு 15 மாதங்கள் ஆகியும் இன்று வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதேநேரம், கோப் குழுவில் இருந்த வேலுகுமாரை நீக்கிவிட்டு அவரின் வெற்றிடத்துக்கு சுஜீவ சேனசிங்கவை அமர்த்தி இந்த மோசடி செயற்பாடுகளை மறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அரச தலைவர் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்படுகின்ற சட்டநடவடிக்கைகளை நாம் முன்பே அறிவுறுத்தியிருந்தோம். அது குறித்து கண்டுகொள்ளப்படவில்லை.

எவ்வாறாயினும் அரச தலைவர் ஆணைக்குழு அதற்கும் அப்பாற்பட்ட பல விடயங்களை வெளிப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும் காலம்தாழ்த்தி உண்மைகள் வெளிவந்துள்ளன. முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக தண்டனை சட்டக்கோவையின் கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசை வலியுறுத்துகின்றோம்.

தற்போது முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் மத்திய வங்கி ஊழியர்களின் செயற்பாடுகளை முடக்கும் வகையில் தனது அதிகாரங்களைப் பிரயோகித்துள்ளார் எனவும் தகவல் வெளிவந்துள்ளது. 2008ஆம் ஆண்டிலிருந்தே மத்திய வங்கியில் இதுபோன்ற செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. ராஜபக்ச ஆட்சியிலும் கூட ஊழியர் சேமலாப நிதியத்தின் பணத்தில் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

2008ஆம் ஆண்டில் மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த அஜித் நிவாட் கப்ரால்தொடர்பிலும்விசாரணைகளை முன்னெடுக்கவேண்டியது அவசியமாகும். எவ்வாறாயினும் மக்களுக்கு அறிக்கை அவசியமில்லை. குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கவேண்டியதே அவசியம். அதனையே மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அதனால் சிறந்த அறிக்கையொன்றையே ஏற்றுகொள்ள முடிகின்றது. அதற்குரிய சட்டநடவடிக்கைகளை எடுக்கின்ற போதுதான் மக்களின் எதிர்பார்ப்புக்கு விருந்தளிக்கும் சிறந்த அறிக்கையென அதனை ஏற்றுகொள்ளமுடியும்.

மைத்திரிபால சிறிசேன உரிய நடவடிக்கை எடுப்பேன் என்று கூறினார். ஆனால், அவர்மீது எமக்கு நம்பிக்கையில்லை. தனது வாள்வீச்சில் பலர் வெட்டுப்படுவார்கள் என்று சவால் விடுத்தார். இன்றுவரையில் அவ்வாறான எந்தவொரு செயற்பாடும் இடம் பெறவில்லை. குறிப்பாக, பிணைமுறி அறிக்கையிலும் அவர் ரணில் விக்கிரமசிங்கவை காப்பாற்றியுள்ளார். பிரதான சூத்திரதாரி ரணில் என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறவில்லை. மாறாக, அவர் முன்னாள் மத்திய வங்கி ஆளுநரை நம்பிக்கை வைத்து நியமித்தது தவறு என்று மாத்திரமே கூறியுள்ளார். எவ்வாறாயினும் பிரதான சூத்திரதாரியான ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் - என்றார்.

(5,71)

இனந்தெரியாதவர்களால் முச்சக்கரவண்டி தீக்கிரை

திருகோணமலை, ஜன.
கிண்ணியா முனைச்சேனைப் பகுதியில் முச்சக்கர வண்டியொன்று அடையாளம் தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என்று கிண்ணியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் நிறுத்தப்பட்ட முச்சக்கரவண்டியே தீக்கிரையாக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

முச்சக்கரவண்டியுடன் சேர்ந்து தளபாடங்கள் மற்றும் பிள்ளைகளின் பாட்சாலை உபகரணங்களும் எரிந்து நாசமாகியுள்ளன என்று முச்சக்கரவண்டி உரிமையாளரால் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-ரி4)

கிளிநொச்சியில் விபத்து; இருவர் மருத்துவனையில்

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சி ஏ-9 முதன்மைச் சாலையில் நேற்றுப் பகல் நடந்த விபத்தில் இருவர் காயமடைந்தனர். கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றது.

கிளிநொச்சியிலிருந்து பரந்தன் நோக்கி ஒரே திசையில் பயணித்த இரு மோட்டார் சைக்கிள்களே விபத்துக்குள்ளாகின. இளைஞர் ஒருவரும், முதியவர் ஒருவரும் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ய)

ஊழல்வாதிகளை தண்டிக்க ஒத்துழைப்பு வழங்குவோம்

இராஜாங்க அமைச்சர் ருவான் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 5

பிணைமுறி குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும் விடயத்தில் அரச தலைவருடன் இணைந்து செயற்படுவோம். நல்லாட்சி அரசில் ஊழல்வாதிகளுக்கு இடமளித்தால், நல்லாட்சி அரசை அமைத்ததில் எந்தவித அர்த்தமும் இல்லை. இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

பியகம பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிணைமுறி விசாரணைக்கு எம்மாலான ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளோம். குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் என்று அரச தலைவர் மைத்திரி தெரிவித்துள்ளார். அரச தலைவர் அடுத்த கட்டமாக செய்யவேண்டிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளார். அரச தலைவர் மைத்திரி முன்னெடுத்துள்ள சகல நகர்வுகளும் சரியானதே. நாங்களும் இவ்வாறான ஒன்றையே எதிர்பார்த்தோம்.

இந்த நாட்டின் ஊழல் மோசடிகள் அனைத்தையும் இல்லாதொழித்து தூய்மையான நாட்டை உருவாக்கவேண்டும் என்பதற்காகவே மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்பினர். மக்கள் எமக்கு ஆதரவையும் அதிகாரத்தையும் வழங்கியுள்ளனர். அவ்வாறு இருக்கையில் இந்த அரசும் ஊழல் மோசடிக்காரர்களுக்குத் துணை போகுமாயின் மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை நாமே அழிப்பதாகிவிடும்.

சட்டமா அதிபர் திணைக்களத்திடம் அறிக்கையை மைத்திரி ஒப்படைத்துள்ளார். அவர்கள் அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுப்பார்கள். அதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஊழல் மோசடிகளை துடைத்தெறியும் அரச தலைவரின் போராட்டத்தில் நாம் எப்போதும் கைகொடுப்போம் - என்றார். (5,61)

பிணைமுறி விவகாரம்

மைத்திரியே முழுப்பொறுப்பு

சாடுகிறார் பீரிஸ்

மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்து உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதாகக் கூறி சட்டத்தையும் நீதி துறையையும் முழுமையாக சாட்டி விட்டு பொறுப்பிலிருந்து அரச தலைவர் தப்பித்துக் கொள்ள முடியாது. இவ்வாறு முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

இந்த மோசடிகள் தொடர்பில் முன்னரே நாம் தெரிவித்தோம். அவ்வேளையில் இதனை கண்டுகொள்ளாத அரச தலைவர் தற்போது தெரிவித்திருக்கும் கருத்தான நகைப்புக்குரியது. மோசடிக்காரன் என்று அடையாளப்படுத்தப்பட்ட அர்ஜுன மகேந்திரன் நாட்டிலேயே இல்லை. இதில் எவ்வாறு இவர்களை கைது செய்வது. மோசடிக்காரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அரச தலைவரின் கூற்று நகைச்சுவையானது.

அனைத்து விவகாரங்களினும் மூலகர்த்தா தலைமை அமைச்சர் ரணில் விக்கரசிங்கவே என்பது அனைவரும் அறிந்தவொன்று. வெத்து வேட்டு கருத்துகளை வெளியிடாமல் தலைமை அமைச்சரை உடனடியாக பதவி விலக்கி நீதித்துறை செயற்பாடுகளை துரிதப்படுத்தி, குற்றவாளிகளாக இனங்காணப்பட்டோரை கைது செய்யவேண்டும். இது தொடர்பாக விவாதிக்க உடனடியாக நாடாளுமன்றம் கூட்டப்படல் வேண்டும் - என்றார். (5,31)

திருமண வீட்டில் கைகலப்பு

கொழும்பு, ஜன. 5

தங்காலைப் பகுதியில் திருமண விருந்துபசார நிகழ்வில் இரு குழுவினருக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பு தொடர்பில் 15 பேரை தங்காலைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மோதலுடன் தொடர்புபட்டவர்கள் அவ்விடத்துக்கு வருகை தர பயன்படுத்திய முச்சக்கர வண்டி, நான்கு மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

முஸ்லிம் திருமண வைபவமொன்று நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது. இதன்போது பழைய பகைமை ஒன்றை முன்னிறுத்தி இரு குழுக்களுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கை கலப்பாக மாறியுள்ளது. இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (5,71)

வெள்ளையர்களின் பொங்கல்

சென்னை, ஜன. 5

தூத்துக்குடியில் வெளிநாட்டினர் தமிழர் பாரம்பரிய முறைப்படி வேட்டி, சேலை அணிந்து மண்பானையில் சர்க்கரைப் பொங்கல் பொங்கி பொங்கல் பண்டிகையைக் கொண்டாடியுள்ளனர்.

தூத்துக்குடியில் உள்ள தனியார் தோட்டத்தில் பொங்கல் கொண்டாடுவதற்காக 17 வெளிநாட்டு தம்பதிகள் வந்தனர். தோட்டம் முழுவதும் கரும்பு, மஞ்சள் குலை, வாழை, தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.

17 அணிகளுக்கும் அடுப்பு மூட்டி தனித்தனியாக பொங்கல் பானை, பச்சரிசி, நாட்டுச்சர்க்கரை ஆகியவை வழங்கப்பட்டன. ஒவ்வொரு அணியும் தனித்தனியாகப் பொங்கல் வைத்தனர். பானையில் பொங்கல்-பொங்கி வரும்போது, தோட்டத்தில் பணிபுரிபவர்கள் செய்துகாட்ட, 'பொங்கலோ பொங்கல்' என்று கோசமிட்டு குலவைச் சத்தமும் எழுப்பி அசத்தினர்.

பொங்கல் வைத்து முடிக்கப்பட்டதும், அந்தந்த அணியினர் வைத்த பொங்கலை வரிசையாகத் தட்டில் வைத்தனர். வெளிநாட்டினர் வைத்த பொங்கலைச் சுவைத்துப் பார்த்த நடுவர்கள் முதல் மூன்று அணியை தேர்வு செய்தனர். முதல் பரிசாக செவ்வாழை, இரண்டாம் பரிசாக மலை ஏத்தன், மூன்றாம் பரிசாக பச்சை வாழைக் குலைகள் வழங்கப்பட்டன. (5)

நாடாளுமன்றைக் கலையுங்கள் புதிய பிரதமரைத் தெரியுங்கள்

பிணைமுறி விவகாரத்தில் மகிந்த அணி மைத்திரியிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 5

நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தலைமை அமைச்சரைத் தெரிவு செய்யுங்கள். இனியும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றித்து கூட்டு அரசாகப் பயணிப்பது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு அவமானமாகும். அரச தலைவர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு மகிந்த அணி வலியுறுத்தியுள்ளது.

இவர்களைப் பதவி விலக்க வேண்டும். இதுவே ஜனவரி எட்டாம் திகதி உதயமாகிய நல்லாட்சியின் வெற்றியாகும்.

ஆசியாவின் சிறந்த நிதியமைச்சர் என்று கூறப்பட்ட நிதியமைச்சர் தற்போது என்னவானார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தனியார் வர்த்தக வியாபாரி என்பதை அறிந்தே தனது தனிப்பட்ட அதிகாரித்தில் பாரம்எடுத்து மகேந்திரனுக்குப் பதவி வழங்கினார்.

லம்போகினி விவகாரம், பெருந்தெருக்கள் விவகாரம் என்று பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முன்னைய அரசின் பெயரை நாறடித்தது தற்போதைய ஆட்சியாளர்களே இன்று பெரிய நிதி மோசடி குற்றவாளிகளாக சட்டத்தால் இனங்காட்டப்பட்டுள்ளார்கள். இந்த வங்குரோத்து கூட்டு அரசு முற்றாக கலைக்கப்பட்டு தனியான தூய்மையான ஆட்சியாளர்களை ஆட்சிக்கதிரையில் அமர்த்த அரச தலைவர் தமது அதிகாரத்தைப் பயன்படுத்த முன்வர வேண்டும் - என்றார். (5,61)

பிணைமுறி விவகாரம் தொடர்பில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தாவது:

சிறிகொத்தாவின் மின்சார கட்டணம் கட்ட முடியாமல் தடுமாறிய கட்சியே ஐக்கிய தேசிய கட்சி. இப்படியான ஒரு பொருளாதார வங்குரோத்து கொண்ட கட்சியின் மூலம் நாடாளுமன்றம் வந்திருக்கும் தலைமை அமைச்சர் உட்பட அக்கட்சியின் அமைச்சர்கள் அனைவரும் உடனடியாக நாடாளுமன்றத்தில் இருந்து விலக்கப்படல் வேண்டும்.

இல்லையேல் மத்திய வங்கியைக் கொள்ளையிட்டது போக எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் ஆதிக்கம் செலுத்தி உள்ளூராட்சி சபைகளின் நிதியில் மற்றும் கிராம விகாரை உண்டியல்களில் தமது கைவண்ணத்தைக் காட்ட ஆரம்பித்துவிடுவார்கள். உடனடியாக அரச தலைவர்

இரு அறிக்கைகள் தொடர்பிலும் நாடாளுமன்றில் விவாதம் வேண்டும்

சுதந்திரக் கட்சி கோரிக்கை

கொழும்பு, ஜன. 5

மத்திய வங்கி பிணைமுறி தொடர்பான விசாரணை அறிக்கை, மகிந்த காலத்து பெரு ஊழல் தொடர்பான அறிக்கை என்பன தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி கோரியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினரும், அமைச்சருமான மகிந்த அமரவீர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிணைமுறி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் எங்களிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

மத்திய வங்கி பிணைமுறி தொடர்பாக மாத்திரம் விவாதிப்பதற்கு நாடாளுமன்றத்தை கூட்டுமாறு நாங்கள் தெரிவிக்கமாட்டோம். இதற்கு முன்னர் பெரிய நிதி மோசடி தொடர்பாக விசாரணை நடத்திய அரச தலைவர் ஆணைக்குழுவின் அறிக்கையும் கையளிக்கப்பட்டிருக்கின்றது. அது தொடர்பாகவும் விவாதிக்கவுள்ளோம்.

மத்திய வங்கி பிணைமுறி தொடர்பான விசாரணை அறிக்கையை மறைக்கவே பெரிய நிதி மோசடி தொடர்பான அறிக்கை அவசரமாக கையளிக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்திருந்தார். ஆனால் அவ்வாறு இல்லாமல் பெரிய நிதி மோசடி விசாரணை அறிக்கைக்கு முன்னரே இந்த அறிக்கை வெளிவந்துள்ளது. பிணைமுறி அறிக்கையை மறைப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்திருந்தால் ஆரம்பமாக பெரிய நிதி மோசடி அறிக்கையையே கொண்டுவந்திருக்க வேண்டும்.

நிதி மோசடி தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழு கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டதாகும். இந்த மோசடியில் சிறிலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் பலருக்குத் தொடர்பு இருப்பதாகக் குற்றச்சாட்டு இருக்கின்றது. அதனால் தான் இந்த இரண்டு மோசடிகளிலும் பிரதான கட்சி உறுப்பினர்களுக்குத் தொடர்பு இருப்பதாக அரச தலைவர் தெரிவித்திருந்தார். கடந்த அரசில் இடம்பெற்ற மோசடிகளை மறைக்க எங்களுக்கு எந்தத் தேவையும் இல்லை. இரண்டு ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் தொடர்பாக விவாதம் நடத்தப்படவேண்டும் - என்றார். (5,31)

விசாரணையின் பரிந்துரைகளை உடன் நடைமுறைப்படுத்துக

சம்பந்தன் கோரிக்கை

பிணைமுறி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உரிய அதிகார பீடங்களுக்கு அனுப்பி துரித நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். உரிய அதிகார பீடங்களுக்கு அவை அனுப்பப்பட்டுதாமதமின்றி துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது நாம் மேற்பார்வையாளர்களாக இருப்போம். நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

இந்த நாட்டில் பொதுச்சொத்துக்கள் முறையற்ற வகையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. நாட்டின் பொதுச்சொத்துக்களை துஷ்பிரயோகமாக பயன்படுத்துவதற்கு எவ்விதமான அனுமதியும் யாருக்கும் கிடையாது.

கடந்த காலங்களில் இவ்விதமான விடயங்கள் பல இடம்பெற்றிருக்கின்றன. அதேபோன்றுதான் ஊழல் மோசடிகள் தொடர்பான விடயங்களும் இடம் பெற்றுள்ளன. இவ்விதமான செயற்பாடுகள் அனைத்துக்கும் எதிரான நிலைப்பாட்டையே நாம் கொண்டிருக்கின்றோம். கடந்த காலங்களில் இடம் பெற்றுள்ள பொதுச் சொத்து துஷ்பிரயோகங்கள், ஊழல்மோசடிகள் உள்ளிட்ட அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். அவை பகிரங்கப்படுத்தப்பட்டு சட்டத்தின் முன் பாரப்படுத்தப்படவேண்டும். நாம் எப்போதும் உண்மையின் பக்கமே இருப்போம் - என்றார். (5,31)

விஜயதாசவின் இடத்துக்கு யார்?

ரணில் ஆலோசனை

கொழும்பு, ஜன. 5

அரசமைப்புச் சபை உறுப்பினர் பதவியிலிருந்து முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச விலகியுள்ள நிலையில், அந்த இடத்துக்குத் தனது பிரதிநிதியாக எவரை நியமிப்பது என்பது தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்திவருகிறார் எனத் தெரியவருகின்றது.

அரசமைப்புச் சபையிலிருந்து விஜயதாச ராஜபக்சவை நீக்கும் முடிவை தலைமை அமைச்சர் எடுத்திருந்தார். இதைப் பகிரங்கமாக அறிவிப்பதற்கிடையில் விஜயதாச தாமாகவே முன்வந்து பதவியைத் துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

விஜயதாசவின் இடத்துக்குப் பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா, ஜயம்பதி விக்கிரமரத்ன உள்ளிட்டவர்களின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அந்த பரிந்துரைப் பட்டியலில் அஜித் பி. பெரேராவின் பெயரே முன்னிலையில் இருக்கின்றது எனத் தெரியவருகின்றது.

உயர் பதவி நியமனங்களை அங்கீகரிப்பதற்குரியீ அரசமைப்புச் சபையில் முன்னர் 7 உறுப்பினர்களே அங்கம் வகித்தனர். பின்னர் 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக அந்த எண்ணிக்கை 10ஆக உயர்த்தப்பட்டது.

இதன்படி சபாநாயகர், தலைமை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பதவி அடிப்படையில் இதற்குத் தெரிவாவார்கள். இது தவிர, அரச தலைவரின் பிரதிநிதி, தலைமை அமைச்சரின் பிரதிநிதி, எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதி, சிறுகட்சிகளின் பிரதிநிதி என்று 4 பேர் தெரிவாவார்கள். அதன்பின்னர் சிவில் அமைப்புகளின் சார்பில் மூவர் தெரிவுசெய்யப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது. (5,61)

ஐ.தே.க. பரப்புரை கூட்டம்

கொழும்பு, ஜன. 5

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பிரதான தேர்தல் பரப்புரையின் முதல் கட்டக் கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகின்றது.

பொரளை, கெம்பல் பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் தலைமை அமைச்சர் ரணிலின் அழைப்பின் பிரகாரம் பங்கேற்கவுள்ளனர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலர் சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர்.

ஐ.தே.கவில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர். இதன்போது கொள்கைப் பிரகடனமும் வெளியிடப்படவுள்ளது. (5,31)

தைப்பொங்கலுக்கு நியாய விலையில் தேங்காய் விற்பனை

கொழும்பு, ஜன. 5

தைப்பொங்கலை முன்னிட்டு இரண்டு பெருந் தோட்ட நிறுவனங்கள் 2 லட்சத்துக்கு மேற்பட்ட தேங்காய்களை நியாய விலையில் விற்பனை செய்வதற்கு சதொச நிறுவனத்திடம் வழங்கியுள் ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் கபிர் ஹசீம் ஆகியோரது அறிவுறுத்தலுக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குருநாகல் பொருந்தோட்ட நிறுவனம் கடந்த 31ஆம் திகதி 2 லட்சம் தேங்காய்களை சதொச நிறுவனத் துக்கு வழங்கியுள்ளது. எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம் 50 ஆயிரம் தேங்காய்களை சதொச நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது.

நாட்டில் தேங்காய்க்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளது. அரசு கட்டுப்பாட்டு விலையில் சதொச நிறுவனத்தின் ஊடாக தேங்காய்களை விற்பனை செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (5)

தபால் ஊழியர்கள் 10ஆம் திகதி முதல் தொடர் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜன. 5

எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாவிட்டால் எதிர் வரும் 10ஆம் திகதி முதல் தொடர் வேலைநிறுத்தப் போராட் டத்தை நடத்தவுள்ளோம் என்று ஒன்றிணைந்த தபால் ஊழியர்கள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

சம்பள உயர்வு மற்றும் இடமாற்ற விடயங்களில் ஊழியர் களுக்குள் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினை தொடர்பில் அரசுக்கு தெளிவுபடுத்தியுள்ள போதிலும் அரசு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை.

நாம் விடுத்துள்ள மேற்படி கோரிக்கைகள் தொடர்பில் தொடர்ச்சியாக அரசு பாராமுகமாக இருந்து வருகின்றமை யாலேயே ஊழியர்கள் இத்தகைய தீர்மானத்தை எடுக்க வேண்டிய நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர் என்று சங்கத்தினர் குறிப்பிட்டனர்.

இதேவேளை, தபால் ஊழியர்களின் பிரச்சினை தொடர்பில் இன்றையதினம் கலந்துரையாடவுள்ளதாக தபால் மா அதி பர் ரோஹண அபேரத்ன குறிப்பிட்டுள்ளார். இன்றைய தினம் நடைபெறும் பேச்சு மூலம் இந்தப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வை எட்ட முடியும் என்ற நம்பிக்கை உள்ள தாக அவர் மேலும் தெரிவித்தார். (5,31)

தமிழர்களை காட்டிக் கொடுத்தவர்கள் இன்று வாக்குக் கேட்டு வருகிறார்கள்

அவதானமாக இருக்குமாறு வியாழேந்திரன் எம்.பி. வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஜன. 5

மட்டக்களப்பில் எழுக தமிழ் பேரணியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் படங்களை ஏந்தி வந்தபோது அதனை வீடியோ எடுத்து புலனாய்வுத்துறைக்கு கொடுத்தவர்கள் இந்தத் தேர்தலிலே வாக்குக் கேட்டு வருகி றார்கள்.

தமிழ் மக்களின் காணிகளை விற்றுப் பிழைத்தவர்கள் வேட்பாளர்களாக உள் ளார்கள். இருப்புக்களை காப்பாற்ற வேண்டுமானால் எமது மக்கள் அணி திரண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பைப் பலப்படுத்த வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக் களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் சதாசிவம் வியாழேந்திரன் தெரி வித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேசத்தில் கூட்டமைப்பின் உள்ளூ ராட்சித் தேர்தல் அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையி லேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

30 ஆண்டுகள் ஈழ விடுதலைப் போராட்டத்தில் எமது சமூகம் இருந்தது. சகோதர சமூகம் அந்தக் காலப் பகுதி யில் எந்த அரசு வந்தாலும் அவர்களு டன் இணைந்து அவர்களது பகுதிகளை அபிவிருத்தி செய்துள்ளார்கள். நாங்கள் நிரந்தரத் தீர்வை நோக்கி செல்லும் போது அரசுடன் இணைந்து செல்லும் வாய்ப்பு இருக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவருட னும் சோரம் போகாமல் தமிழ்த் தேசி யத்தில் உறுதியாக மக்களுக்காக குரல் கொடுப்பதன் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளைக் கொண்டு உருவாக் கப்பட்ட ஜனநாயக போராளிகள் கட்சி எங்களுடன் இணைந்துள்ளது.

மகிந்த ஆட்சிக் காலத்தில் வெருகல் முதல் துறைநீலாவணை வரை ஏக்கர் கணக்கான நிலத்தை விற்றவர்கள் தமிழ் மக்களின் நிலங்களை, மக்க ளைப் பாதுகாப்போம் எனக் கூறுவது வேடிக்கையாக உள்ளது. அரசின் முக வராக இருந்து வெள்ளை வானில் பல இளைஞர்களைக் கடத்தி கொலை செய்தவர்கள், காணாமல் ஆக்கியவர் கள், ஊடகவியாலர்களை, புத்தி ஜீவி களை சுட்டுக்கொன்றவர்கள், பல்லைக் கழக மாணவர்களை காணாமல் ஆக் கியவர்கள் தற்போது தமிழ் மக்களைப் பாதுகாக்கப் போகிறார்களாம்.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் வரை காட்டிக் கொடுத்தவர்கள் இன்று தமிழ் மக்களின் பாதுகாவலர்களாம். இவர்கள் தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் - என்றார். (5,46)

வடக்கு கிழக்கு இணைப்பில் கூட்டமைப்பு இம்மியும் விலகவில்லை

தமிழ் அரசுவின் செயலர் தெரிவிப்பு

அம்பாறை, ஜன. 5

வடக்கு - கிழக்கு இணைப்பு விடயத் தில் நாம் இம்மியும் விலகி நிற்க வில்லை. வடக்கு-கிழக்கு இணைப்பை கைவிட்டு விட்டதாக எவர் எழுதினா லும் மக்கள் நம்பி விடக் கூடாது. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் கி. துரை ராஜசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் இலக்கிலிருந்து தவறிவிட்ட தாக பொய்ப் பரப்புரை முன்னெடுக் கப்பட்டு வருகின்றது. இத்தகைய விசமப் பரப்புரைகளை மக்கள் கருத்தில் எடுக்கக் கூடாது.

தமிழர்களின் நியாயமான உரிமை கள் வழங்கப்படுவதை சலசலப் பின்றி அர்த்தமுள்ளதாகவும் அதனை வென்றெடுக்கவும் நாம் செயற்படுகின்றோம். கூட்டாட்சி கட் டமைப்பு என்ற அதிகாரத்தையே நாம் வேண்டி நிற்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் வந்து ஆசனங்களைப் பெறவும், பதவிகளைப் பெறவும் முனைந்த சிலர் தற்போது அவசரக் குடுக்கை களாக மாறியுள்ளனர். இவர்கள் தமது வயிற்றெரிச்சலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகக் கொட்டித் தீர்க்கின்றனர்.

புதிய அரசமைப்புக்கான இடைக் கால அறிக்கை சம்பந்தமாகவும் சிலர் குழப்பத்திலுள்ளனர். அப்படி குழப்பமடையத் தேவையில்லை. காலாகாலமாக ஏமாற்றப்பட்டு வந் துள்ளோம் என்ற அச்சமிருக்கலாம். ஆனாலும் பலவித முன்னேற்றங் கள் இடைக்கால அறிக்கையிலுள் ளன. முன்பை விடவும் வித்தியாச மானது. ஒற்றையாட்சி தத்துவம் இல்லாமல் போகின்றது. திருப்பி எடுக்க முடியாதவாறு அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன - என்றார். (5,30)

38 லட்சம் விழுங்கிய சங்ககார



இலங்கை கிரிக்கெட் அணியின் முன் னாள் தலைவர் குமார் சங்ககார வுக்கு வழங்கப்பட்ட விருந்துபசாரம் குறித்து தற்போது பரபரப்பாக பேசப் படுகின்றது.

குமார் சங்ககாரவுக்கு வழங்கப்பட்ட உணவின் விலை 38 லட்சம் ரூபா என்று தகவல்கள் வெளிவந்துள் ளன. நுவரெலியாவில் உள்ள நட்சத் திர உணவகத்திலேயே குமார் சங்க காரவுக்கு அண்மையில் சிறப்பு விருந்துபசாரம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் குமார் சங்ககாரவின் மனைவியும் கலந்து கொண்டிருந் தார்.

அந்த நட்சத்திர உணவகத்தில் தயா ரிக்கப்பட்ட 38 லட்சம் ரூபா பெறுமதி யான இனிப்பு உணவு வழங்கப்பட் டுள்ளது. தாமரைக் கோபுரத்துடன் அமைக்கப்பட்ட இனிப்பு வகையை, நால்வர் பல்லக்கில் வைத்து சுமந்து வந்துள்ளனர்.

உணவகத்தின் வளாகத்தில் சிறப் பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விருந்துபசாரத்தில் குமார் சங்கார வுக்கும், அவரது மனைவிக்கும் 38 இலட்சம் ரூபா பெறுமதியான உணவு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக் கையை அதிகரிக்கும் நோக்கில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

மருத்துவர்களுக்கு இடமாற்றம்

ராஜித சேனாரத்ன தகவல்

கொழும்பு, ஜன. 5

மருத்துவர்களின் இடமாற்றம் தொடர்பில் நிலவும் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும். தொடர்ச்சியாக நீண்ட கால மாக ஒரே பிரதேசத்தில் கடமையாற்றும் மருத்துவர்கள் விரைவாக இடமாற்றம் செய் யப்படுவார்கள். இவ்வாறு சுகாதார அமைச் சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பு தேசிய குருதி வங்கியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து' கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மருத்துவர்களின் இடமாற்றம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மூலம் விரை வில் தீர்வுகாணப்படும். இது நாட்டின் சுகா தரத் துறையை பின்னடையச் செய் கின்றது.

பன்னாட்டு ரீதியில் பல்வேறு நோய்களுக்கு இன்றுவரை மருந்து கண்டுபிடிக்கப்பட வில்லை. இன்று மருத்துவர்களால் கண்ட

மருத்துவர்களின் இடமாற்றம் தொடர் பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மூலம் விரைவில் தீர்வுகாணப்படும். இது நாட்டின் சுகாதரத் துறையை பின் னடைய செய்கின்றது.

றியப்படும் புதிய வகையான மருந்துகள் நமது அடுத்த தலைமுறையினருக்குப் பய னுள்ளதாக அமையும்.

1977ஆம் ஆண்டளவில் நமது நாட்டில் ஆயுள்வேத மருத்துவம் சிறப்பாக மேற் கொள்ளப்பட்டு வந்தது. ஆனால் இன்று ஆயுள்வேத மருத்துவம் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இதனைச் சீர்செய்யும் நடவ டிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் -என்றார். (5,31)

வேலைவாய்ப்பு



யாழ் நகரில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

1) வரவேற்பாளர்கள்
(ஆண் / பெண் இருபாலாரும்.
தமிழ், சிங்களம், ஆங்கிலம் மொழி தேர்ச்சி விரும்பத்தக்கது.)

2) சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்
(முன் அனுபவம் விரும்பத்தக்கது.
பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.)

3) முகாமைத்துவ உதவியாளர்கள்
(ஆண் / பெண் இருபாலாரும். கணினி துறையில் அனுபவம்)

ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 10.01.2018 புதன்கிழமை சுயவிவரக் கோவையுடன் நேரில் சமூகம் தரவும்.

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

சொக்கலிங்கம் சண்முகலிங்கம்

(சட்டத்தரணி)

பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் சண்முகலிங்கம் நேற்று (04.01.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் - காமாட்சிபிள்ளை தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான நாகநாதர் - செல்லமுத்து தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற புனிதவதியின் அன்புக் கணவரும் சஜீவன் (முன்னாள் உப தவிசாளர், வலி. வடக்கு, பிரதேச சபை). சஜீலன், அனோஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் நகுலேஸ்வரியின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2017) வெள்ளிக்கிழமை பன்னாலை இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பன்னாலை,
தெல்லிப்பழை. 077 929 9059 (c/12597)(8) **குடும்பத்தினர்.**

மரண அறிவித்தல்

திருமதி கனகம்மா (வள்ளி மாமி) சிற்றம்பலம்

சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி கனகம்மா (வள்ளிமாமி) சிற்றம்பலம் நேற்று (04.01.2018) வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு அழகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற சிற்றம்பலத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, நடராசா, நாகராசா ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், ஆனந்தம்மா ஆகியோரின் அன்புமைத்துனியும் நிர்மலன் (ஆனந்தன் நோர்வே), சகுந்தலாதேவி (ஓய்வு நிலை அதிபர், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்), சறோஜாதேவி (கொழும்பு), விஜயகுமாரி (நோர்வே), தவபாலன் (சங்கர், நோர்வே) ஆகியோரின் அன்புத்தாயாரும் தர்மினியின் (பொறுப்பாசிரியர், நாமகள் பாலர் பாடசாலை) சிறிய தாயாரும் கிருஷ்ண வேணி (நோர்வே), தர்மகுலசிங்கம் (வதனி ஜுவல்லறி), கிருஷ்ணசாமி (கட்டார்), தவலிங்கம் (நோர்வே), கோகிலா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜன், றினோஜா (நோர்வே), வினுஷா (இந்து மருத்துவ அலகு, கைதடி), தனோஜா (கொழும்பு), கர்ஜின், ஜம்யா, ஷியானா (நோர்வே) ஆகியோரின் அன்புப்பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சங்கத்தானை,
சாவகச்சேரி.

(c/5360)(8)

தகவல்: பிள்ளைகள். 021 227 1015
ஆனந்தன் 047 95432934, 047 6790 4694
சங்கர் 46851593 - (047)

யாழ்ப்பாண

முஸ்லிம்களின் அடையாளம் அடகுவைக்கப்பட்டு விட்டது

வட. மாகாணசபை உறுப்பினர் அ.அஸ்மின் ஆதங்கம்

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்ப்பாண முஸ்லிம்களின் வாக்குகளைக்கொள்ளையிடும் அவசரத்தில் யாழ்ப்பாண முஸ்லிம்களின் அடிப்படை இருப்பையும் அடையாளத்தையும் முஸ்லிம் தலைவர்கள் அடகுவைத்துவிட்டார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாணசபை உறுப்பினர் அ.அஸ்மின்.

யாழ்ப்பாண முஸ்லிம் வட்டாரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற யாழ்ப்பாண முஸ்லிம் பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

1978ஆம் ஆண்டுக்கு முன்னர் வட்டாரமுறைமைத் தேர்தல் இருந்தது. அப்போது முஸ்லிம் பிரதேசங்கள் வடக்குச் சோனகர்தெரு, தெற்குச் சோனகர்தெரு என இரண்டு வட்டாரங்களாகக் காணப்பட்டன. அதன் பின்னர் வட்டார முறைமை இல்லாமல்போனது. இப்போது மீண்டும் வட்டார முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது.

2015 வரைபிலே கிராம அலுவலர் பிரிவு ஜே.86 ஒரு வட்டாரமாகவும், ஜே.87 பிரிவு இன்னுமொரு வட்டாரமாகவும் பிரிவுகள் ஜே.85, ஜே.88 ஆகியன இணைக்கப்பட்டு இரு அங்கத்தவர் வட்டாரமாக இருந்தன. இதன்மூலம் 3 முஸ்லிம் உறுப்பினர்கள் வட்டாரரீதியாகப் போட்டியிடும் வாய்ப்புக் காணப்பட்டது. அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் விளைவாக ஜே.86, ஜே.87 ஆகியன இணைக்கப்பட்டு பழைய சோனகர்தெரு வட்டாரமாகவும் ஜே.88 புதிய சோனகர்தெரு வட்டாரமாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதன்மூலம் இரண்டு வட்டாரங்களில் போட்டியிடும் சந்தர்ப்பம் முஸ்லிம் வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அதேபோன்று ஏனைய பிரதேசங்களில் வசிக்கின்ற சிறு அளவிலான முஸ்லிம் மக்களை மையப்படுத்தி விகிதாசாரப் பட்டியல் வேட்பாளர்களையும் களமிறக்க முடியும். இவ்வாறான சூழ்நிலையில் முஸ்லிம்களின் உரிமைக்காகக் குரல்கொடுக்கின்றோம் என்று மார்தட்டிக்கொள்ளும் அரசியல் தலைவர்கள் இந்த விடயத்தில் கோட்டை விட்டுள்ளார்கள்.

அவர்கள் எவருமே பழைய சோனகர் தெரு வட்டாரத்தைப்போல புதிய சோனகர்தெரு வட்டாரத்துக்கு முஸ்லிம் வேட்பாளர்களை நிறுத்தவில்லை.

ஆனால் இலங்கைத் தமிழரசுக் கட்சி மாத்திரம் யாழ்ப்பாண முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகளை மதித்து பழையசோனகர்தெரு வட்டாரத்துக்கும், புதிய சோனகர்தெரு வட்டாரத்துக்கும் இரண்டு முஸ்லிம் வேட்பாளர்களை நிறுத்தியது மாத்திரமன்றி ஜே.86 மற்றும் ஜே.87 பிரிவுகளை மையப்படுத்தி விகிதாசாரப்பட்டியல் வேட்பாளர்களையும் களமிறக்கி அவர்களுடைய அங்கத்துவத்தை உறுதியும் செய்திருக்கின்றது.

இன நல்லுறவைப் பற்றிப் பேசுகின்ற அமைச்சர் றிசாத் பதியுதீன் போன்றவர்கள் இனமுரண்பாட்டினாலேயே தம்முடைய அரசியலைத் தக்கவைத்திருக்கின்றார்கள் என்ற உண்மையை மறைக்க முயல்கின்றார்கள். இனமுரண்பாடு இல்லாவிட்டால் அவர்களால் அரசியல் செய்யவே முடியாது. என்றார்.

(எ-21)

அரசியல்கட்சியின் தலைவர் கொள்ளைக் குற்றவாளி

யாழ்ப்பாணம்.ஜன.5

கடந்த 2013ஆம் ஆண்டு கோப்பாய்பகுதிகொள்ளைக்குற்றச்சாட்டு வழக்கில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் முற்போக்கு தமிழ் தேசிய கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந்த் உள்ளிட்ட நால்வரை குற்றவாளிகளாக கண்டது யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்று.

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வங்கி உத்தியோகஸ்தர் ஒருவரின் வீடொன்றில் கடந்த 2013ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

குறித்த கொள்ளை சம்பவம் இடம் பெற்று சில தினங்களுக்கு பின்னர், கொள்ளையிட்ட நகைகளை குறித்த வங்கி உத்தியோகஸ்தர் பணிபுரியும் வங்கியில் அடகு வைப்பதற்கு முயற்சித்துள்ளனர். அதன்போது குறித்த நகைகளை அடையாளம் கண்டு கொண்ட வங்கி உத்தியோகஸ்தர் அது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். அதனைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட பொலிஸார் நகைகளை அடகு வைக்க வந்தவர்களை கைதுசெய்து கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அதனைத் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் விஜயகாந்த் உள்ளிட்ட நால்வரைக் கைது செய்தனர். அவர்கள் நால்வர் மீதும் நகைகளைக் கொள்ளையடித்தமை, கொள்ளையடித்த நகைகளை உடமையில் வைத்திருந்தமை, அவற்றை அடகு வைக்க முற்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து குற்றப் பத்திரிக்கையை யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் தாக்கல் செய்தனர்.

அதனைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டு நீதிமன்றில் விசாரணைகள் நடைபெற்று வந்தன. பின்னர் நால்வரும் ஆள்பிணையில் செல்ல நீதிமன்று அனுமதி வழங்கியது.

அந்தநிலையில் குறித்த வழக்கு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நீதிவான் சி.சதிஸ்தரன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது நீதிபதி தெரிவித்ததாவது:

குறித்த நால்வர் மீதான கொள்ளைக் குற்றச்சாட்டை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்க முடியவில்லை. ஆனால் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை உடமையில் வைத்து இருந்தமை மற்றும் அவற்றை அடகுவைக்க முற்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

அதனால் குறித்த நால்வரையும் நீதிமன்று குற்றவாளியாக காண்கின்றது. குற்றவாளிகளுக்கு எதிரான தண்டனை தீர்ப்பு எதிர்வரும் முதலாம் திகதி வழங்கப்படும்' என்றார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சுதர்சிங் விஜயகாந்த் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினராக இருந்த அந்தக் காலப் பகுதியிலேயே கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 'பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டத்தையடுத்து ஈழமக்கள் ஜனநாயக கட்சி விஜயகாந்தை உறுப்பினரில் இருந்து நீக்கியது. அதன் பின்னர் முற்போக்கு தமிழ் தேசிய கட்சியை உருவாக்கி அதன் செயலாளர் நாயகமாக தற்போது உள்ளார். குறித்த முற்போக்கு தமிழ் தேசிய கட்சி இந்தமுறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-37)

உயர்தரப் பரீட்சை வெளிவாரியாக முதலாவது தடவையாக தோற்றுவோர்

கல்வித் திணைக்களத்தில் பதிவுகள் மேற்கொள்ள தேவையில்லை

யாழ்ப்பாணம் ஜன 5

ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்கு முதற்தடவையாக வெளிவாரி விண்ணப்பதாரிகளாக தோற்றும் மாணவர்கள் இந்த ஆண்டிலிருந்து மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பதிவுகளை மேற்கொள்ளத் தேவையில்லை என வடக்கு மாகாண கல்வித் திணைக்கள மேலதிக கல்விப் பணிப்பாளர் பி.செலவின் இரேனியஸ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

செயற்றிட்டங்கள் மற்றும் மதிப்பீட்டிற்காக ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்கு முதற்தடவையாக வெளிவாரி விண்ணப்பதாரிகளாக தோற்றும் 21 வயதுக்கு குறைந்த விண்ணப்பதாரிகளைப் பதிவு செய்யும் வேலைத்திட்டம் கடந்த வருடம் வரை மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஆயினும் மேற்படி விடயம் தொடர்பாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரின் ஈடி.01.12.12.05.08,ஐ. என்ற இலக்க கடிதம் மூலம் அத்தகைய வெளிவாரி பரீட்சார்த்திகளைப் பதிவு செய்யும் வேலைத்திட்டம் இந்த வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது என அறியத் தரப்பட்டுள்ளது.

எனவே அவர்கள் இனி பதிவு செய்யத் தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-8)

தலைமறைவாகியிருந்த குற்றவாளி கைதானார்

யாழ்ப்பாணம்.ஜன.5

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் 2014ஆம் ஆண்டு குற்றவாளியாகதீர்ப்பளிக்கப்பட்டவர் தலைமறைவாகி இருந்த நிலையில் 3 ஆண்டுகளின்பின் கடந்த 27ஆம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவருக்கான தண்டனைத் தீர்ப்பு எதிர்வரும் 9ஆம் திகதி வழங்கப்படும் எனவும் அதுவரை குற்றவாளியை யாழ்ப்பாணம் சிறையில் தடுத்துவைக்குமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்று உத்தரவிட்டார்.

சாவகச்சேரியில் கடந்த 2007ஆம் ஆண்டு 16 வயதுக் குட்பட்ட சிறுமி ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டார். பாதிக்கப்பட்ட சிறுமியின் முறைப்பாட்டையடுத்து சந்தேகநபரும் அவருக்கு உதவிய ஒருவரும் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றில்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைகள் சாவகச்சேரி நீதிவான் மன்றில் இடம்பெற்றன. சந்தேகநபர்கள் இருவரையும் எதிரியாகக் கண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தால் இருவருக்கும் எதிராக யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேல் நீதிமன்றில் நடைபெற்ற விசாரணைகளின் நிறைவில் 2014ஆம் ஆண்டு ஓகஸ்ட் 7ஆம் எதிரிகள் இருவரும் நீதிமன்றால் குற்றவாளிகளாக காணப்பட்டனர்.

சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திய குற்றத்துக்கு முதலாவது எதிரிக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையையும் அவருக்கு உதவிய குற்றத்துக்கு இரண்டாவது எதிரிக்கு 5 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் வழங்கி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றின் அப்போதைய நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் தீர்ப்பளித்தார்.

தீர்ப்பு வழங்கப்படும் காலப் பகுதியில் இரண்டாவது எதிரி தலைமறைவாகியதால் அவரைக் கைது செய்ய பொலிஸாருக்கு மேல் நீதிமன்று கட்டளை வழங்கியது.

இந்த நிலையில் 3 ஆண்டுகளின் பின் இரண்டாவது எதிரி கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை நேற்று வியாழக்கிழமை வரையில் விளக்கமறியலில் வைத்திருந்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் முற்படுத்துமாறு சிறைச்சாலை உத்தியோகஸ்தர்களுக்கு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதனடிப்படையில் குற்றவாளி நேற்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். "அவருக்குத்தண்டனைத் தீர்ப்பு வாசித்துக் காண்பிக்கப்பட வேண்டும். அதன் பின்னரே தண்டனைக் காலம் ஆரம்பிக்கப்படும். தற்போது மேல் நீதிமன்று பருவகால விடுமுறை நடைமுறையில் உள்ளதால் குற்றவாளியை எதிர்வரும் 9ஆம் திகதி மன்றில் முற்படுத்துமாறு" யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டார். (எ-37)

இறுதிப்போரின் போது இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட

எழிலன் உள்ளிட்ட 12 பேர் தொடர்பான வழக்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, ஜன.5

இறுதிக்கட்டப் போரின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் போகச்செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் எனப்படும் சின்னத்துரை சசிதரன் மற்றும் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் உள்ளிட்ட பன்னிரண்டு பேரின் ஆட்கொணர்வு மனு மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் 19ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட புதிய நீதிவான் எஸ்.லெலின்குமார் முன்னிலையில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டே ஒத்திவைக்கப்பட்டது. குறித்த வழக்கில் அறுவரினதுவழக்கு நேற்றுமுல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ஏனைய வழக்குகள் வவுனியா மேல் நீதிமன்றுக்கு ஏற்கனவே மாற்றப்பட்டு அங்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. நேற்றைய தினம் அரச சட்டத் தரணிகள் வழக்குக்கு சமூகமளிக்காததால்வழக்கை விசாரித்த நீதிபதி எஸ். லெலின்குமார் வழக்கை ஒத்தி வைத்தார். வழக்குத் தாக்கல் செய்தவர்கள் சார்பாக சட்டத்தரணி டொமினிக் முன்னிலையாகியிருந்தார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் சார்பில் அவரது மனைவியான வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி, கிருஷ்ணகுமார் ஜெயகுமாரி, விஸ்வநாதன் பாலநந்தினி, கந்தசாமி காந்தி, கந்தசாமி பொன்னம்மா உள்ளிட்ட பன்னிரண்டு பேர் இந்த ஆள் கொணர்வு மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். அந்த வழக்கு விசாரணைகளே நேற்று நடைபெற்று ஒத்திவைக்கப்பட்டன. (எ-21-ரி2)



போரால் பாதித்த வடபகுதி மாணவர்களுக்கு கற்பிப்பது எப்படி

அதிபர், ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்.ஜன.5

போரால் பாதிக்கப்பட்ட வடபகுதி மாணவர்களுக்கு எப்படி கல்வி புகட்ட வேண்டும் என்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று புதிய வெளிச்சம் செயற்பாட்டு மையத்தின் ஊடாக ஆறுதல் நிறுவனத்தால் முல்லைத்தீவில் இடம் பெற்றது.

தமிழகத்திலிருந்து வருகை தந்த வளவாளர்களால் வடபகுதி பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்களுக்கே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்று வருகிறது.

வடக்கில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் ஆசிரியர்கள் அதிபர்களுக்கான கருத்தரங்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வலயத் திணைக்களங்களில் நேற்று முன்தினம் மூன்றாவது நாளாக நடை பெற்றது.

கருத்தரங்குகள் கிளிநொச்சி வலயக்கல்வி பணிமனையிலும், முல்லைத்தீவு வலயக்கல்வி பணிமனையிலும், யாழ்ப்பாணத்தில் நான்கு இடங்களிலும் நடைபெற்று வருகின்றன.

அதில் இந்தியாவில் இருந்து வருகை தந்த கோயம்புத்தூர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஸ்ணன் மற்றும் கனடாவில் இருந்து வந்த விரிவுரையாளர் பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டுள்ள னர்.

அந்த மாணவர்களின் மன நிலையில் மாற்றத்தை ஏற் படுத்தி அவர்களின் மகிழ்ச்சியான கல்வி கற்றல் செயல் பாட்டினை எவ்வாறு முன் னெடுக்க வேண்டும் என் பது தொடர்பில் விரிவாக பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எடுத்து ரைக்கப்பட்டது. (எ-ரி3)

ராமேஸ்வரம் மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல்

இலங்கை கடற்படையினரின் வெறிச் செயல் என தமிழக மீனவ அமைப்புகள் கடும் கண்டனம்

இராமேஸ்வரம்,ஜன.5

கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி மீன்பிடிச் சாதனங்களை சேதப்படுத்திய இலங்கை கடற்படையினர் நேற்று அதிகாலை மீனவர்களை படகுடன் கைது செய்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மீனவ அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள்

இது தொடர்பாக விசைப்படகு மீனவர் சங்கத் தலைவர் தெரிவித்ததாவது:

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் ராமேஸ்வரம் துறைமுகத்திலிருந்து சுமார் 600க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன் துறை அதிகாரிகளிடம் மீன்பிடி அனுமதி டோக்கன் பெற்று கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

அவர்களை இரவு முழுவதும் மீன்பிடிக்க விடாமல் அச்சுறுத்தியது இலங்கைக் கடற்படை. அதனால் மீனவர்கள் வேறு பகுதிகளுக்குச் சென்று மீன்பிடித்துள்ளனர்.

மீன்பிடித்துவிட்டு கச்சத்தீவுக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே திரும்பும் போது ராமேஸ்வரத்தைச் சேர்ந்த அருளானந்தம் மற்றும் கென்னடி ஆகியோர்களுக்குச் சொந்தமான படகில் சென்ற சேசு, மணி மூக்கையா எமர்சன், சேகர், வில்பர்ட்ட மேசஸ் உள்ளிட்ட 13 பேரை எல்லைதாண்டி சட்ட விரோத மீன்பிடிப்பில் ஈடுபட்டனர் எனக் கூறி கைது செய்து படகுகளையும் பறிமுதல் செய்தனர் இலங்கைக் கடற்படையினர்.

மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட படகுகளிலிருந்த பல லட்சம் மதிப்பிலான மீன்களையும் மீன்பிடி சாதனங்களையும் சேதப்படுத்தியதோடு கற்கள் மற்றும் உருட்டுக்கட்டைகளால் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். படகு ஒன்றுக்கு தலா ரூ 30 ஆயிரம் முதல் 75 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது-என்றார்.

இது தொடர்பான மீனவஅமைப்புக்கள் தெரிவித்ததாவது:

இலங்கை கடற்படையினரின் அச்சுறுத்தல் வாடிக்கையாகிவிட்டது. மத்தியில் பா.ஜ.ஆட்சிக்கு வந்த பின் கடலில் கூட கால்வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே 100 நாள்களுக்கு மேலாக இலங்கை சிறைகளில் தமிழக மீனவர்கள கடும் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டு தவித்து வருகின்றனர். இந்த நிலையில் இன்று (நேற்றுமுன்தினம்) வயிற்றுபிழைப்புக்காக மீன்பிடிக்கச் சென்ற ராமேஸ்வரம் மீனவர்கள் 13 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். மத்திய அரசு இலங்கை அரசுடன் பேசி மீனவர்களின் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்தி தரவேண்டும் இல்லையேல் தமிழகம் தழுவிய போராட்டங்களை நடத்தவதைத் தவிர வேறு வழியில்லை.

இன்றைய தேதி வரை இலங்கை சிறைகளில் 97 தமிழக மீனவர்கள் மீட்கப்படாமல் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது- என்றன. (எ-8-21)

அரச தலைவரின் கத்தி ரணிலை காப்பாற்றியுள்ளது

நாடாளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத் சாடல்

யாழ்ப்பாணம்.ஜன.5

அரசதலைவரின் கத்தி ரணிலைக் காப்பாற்றியுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பிரதேச சபைக்கு ஜே.வி.பி. சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகஞ் செய்யும் நிகழ்வு நாவற்குழி 300 வீட்டுத்திட்டப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது கத்தியில் யார் வெட்டுப்படுகிறார்களோ தெரியாது என அரசலைவர் கூறினார். ஆனால் அவரது கத்தியில் தலைமை அமைச்சர் ரணில் வெட்டுப்படவில்லை. அவர் காப்பாற்றப்பட்டுள்ளார். ஆனால் யார் இந்த கொள்ளையில் ஈடுபட்டார்கள் என்று மக்களுக்குத் தெரியும். முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மோசடி செய்துள்ளார் என ஆணைக்குழுவின் அறிக்கை சொல்கிறது. அதில் 11 கோடி ரூபா சூறையாடப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. தலைமை அமைச்சர் தொடர்பில் அவரை நியமித்தது தொடர்பாக மட்டுமே கூறப்பட்டுள்ளது-என்றார். (எ-32)

மிளகாய் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு

சொட்டு நீர்ப்பாசன கருவி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்.ஜன.5

வடக்கு மாகாணத்தில் உள்ள இளம் விவசாயிகளை மிளகாய் செய்கையில் ஈடுபட வைப்பதற்கு சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கப்படவுள்ளன எனவும் அது தொடர்பான ஆலோசனை வழங்கப்படும் எனவும் என மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எஸ்.சத்திய சீலன் தெரிவித்தார்.

இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண விவசாயிகளின் பயிர்ச்செய்கை முறையில் மிளகாய்ச் செய்கையும் முக்கியமானது. ஒரு கிலோ மிளகாய் 200 ரூபா முதல் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது.

ஆனால் வரட்சியான காலத்தில் மிளகாய் செய்கையை மேற்கொள்ள முடியாமல் உள்ளது. இதனால் மிளகாயின் விலை சந்தையில் கூடிக் குறைகின்றது.

ஆகவே இதனை ஊக்குவிப்பதற்கு முதற்கட்டமாக சொட்டு நீர்ப்பாசன கருவிகள் வழங்கப்படவுள்ளன.

கால் ஏக்கர் நிலப்பரப்பில் ஆயிரம் மிளகாய் செடிகளை பயிரிட முடியும்.

இதற்கான சொட்டு நீர்ப்பாசன உபகரணத் தொகுதியின் பெறுமதி 70ஆயிரம் ரூபா. இளம் விவசாயிகளுக்கு முதல் தடவையாக இந்த கருவிகளை வழங்க உள்ளோம்.

அதனைப் பயன்படுத்தி அவர்கள் வரட்சியான காலத்திலும் குறைந்தளவு நீரைப் பயன்படுத்தி மிளகாய் செய்கையை மேற்கொள்ள முடியும். இது அவர்களுக்கு வெற்றியளிக்கும் பட்சத்தில் மேலதிகமாக இந்த உபகரணத் தொகுதிகளை கொள்வனவு செய்து வழங்குவோம் -என்றார். (எ-ரி)

வீதியில் செல்பவர்களை

வளர்ப்பு நாய் கடித்தால் பொலிஸில் முறையிடலாம்

வவுனியா பொலிஸார் தெரிவிப்பு

வவுனியா.ஜன.5

வீட்டில் வளர்க்கும் நாய் ஒன்று வெளியே சென்று வீதியால் செல்பவரைக் கடித்து காயப்படுத்தியது என நாய் வளர்க்கும் உரிமையாளருக்கு எதிராக முறைப்பாடு மேற்கொண்டால்; உரிமையாளருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் மாலை தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற மாணவி ஒருவரை கித்துள் வீதியிலுள்ள வீட்டு நாய் ஒன்று நடுவீதியில் வைத்து கடித்துக் காயப்படுத்தியது. இதையடுத்து குறித்த மாணவிக்கு அந்தப்பகுதியிலுள்ளவர்களால் உடனடியாக முதலுதவிச் சிகிக்சையளிக்கப்பட்டது. மாணவி அங்கிருந்து வீடு சென்றுவிட்டார். இந்தச் சம்பவத்தையடுத்து குறித்த வீதியிலுள்ள வீட்டின் உரிமையாளரின் வளர்ப்பு நாய் ஒன்று அந்தப் பகுதியால் செல்பவர்களைக் கடிக்கின்றது என்றும் அதைக்கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வன்னிப்பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் தமிழ் மொழி சேவைப்பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டபோதே அங்கு கடமையிலிருந்த பொலிஸார் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளனர். இதற்கு நாய் கடிக்குள்ளானவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்படவேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெற்றால் வன்னிப்பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் செயற்படும் தமிழ்மொழி சேவைப்பிரிவான 076 6224949, 0766 226363 ஆகிய அலைபேசி இலக்கங்களுக்கு தமிழ் மொழி மூலம் தகவல்களை வழங்க முடியும்-என மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-21)

புலமை பரிசிலுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் ஜன 5

இந்திய அரசினால் வழங்கப்படும் உயர் படிப்புகளுக்கான புல மைப்பரிசிலுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கோரியுள்ளது.

நேரு ஞாபகார்த்த புல மைப்பரிசில் திட்டத்தின் கீழ் இளமாணிப்பட்டத்துக்கான 100 பேருக்கும், ராஜீவ் காந்தி புலமைப்பரிசில்திட்டத்தின் கீழ் தகவல் தொழில் நுட்ப பாடத்துக்கான புலமைப் பரிசில் 25 பேருக்கும், மௌலானா அஸாட் புல மைப்பரிசில்கள் திட்டத்தின் கீழ் தகவல் வழங்கப்படும் முதுமாணி பட்டத்துக்கான புலமைப்பரி சில்கள் 50 பேருக்கும் வழங்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி எதிர்வரும் 15ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் மற்றும் மேலதிக விவரங்களை செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் உயர்கல்விப் பிரிவிலும் அல்லது அமைச்சின் இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

சுகாதாரப் பழக்கமுறைகளே தொற்றா நோய்க்கு காரணம்

மருத்துவர் கே.எம்.அஸ்லம் சுட்டிக்காட்டு

அம்பாறை, ஜன.5

நீரிழிவு, இருதய நோய், சுவாசநோய் மற்றும் உயர் குருதி அமுக்கம் போன்ற நோய்களால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை 65 வீதத்தைத் தாண்டியுள்ளது.

அதற்குக் காரணம் சுகாதார பழக்கமுறை மற்றும் தவறான உணவுப் பழக்கங்களே.இவ்வாறு அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத மருத்துவமனையின் பொறுப்பதிகாரி மருத்துவர் கே.எம்.அஸ்லம் தெரிவித்தார்.

"ஆரோக்கியமான எதிர்கால சந்ததியினரை கட்டியெழுப்புவோம்" என்ற தொனிப்பொருளில் தொற்றா நோய்கள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் கருத்தரங்குடன்இலவச மருத்துவப் பரிசோதனையும் நேற்று அட்டாளைச்சேனையில் நடைபெற்றன. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

நீரிழிவு தொற்றா நோயால் பீடிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை தினசரி பன்னாட்டு ரீதியில் அதிகரிக்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரை சுமார் 20 வீதமானவர்கள் இந்த நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். 2020 ஆம் ஆண்டில் தற்போதுள்ள நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரிக்கும் நிலையே காணப்படுகின்றது.

தொற்றா நோய்கள் அதிகரிப்பதற்கு எங்களது உணவு உள்ளிட்ட அன்றாட பழக்க வழக்கங்களே காரணம். முறையான உணவுப் பழக்கம், உடற் பயிற்சி என்பனவற்றால் நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெற முடியும்.

எங்களை பாதுகாக்கும் விடயத்தில் நாங்கள் அதிகம் அக்கறை கவனம் செலுத்த வேண்டும். அதிகம் ஆபத்து, அவலங்களை ஏற்படுத்தும் தொற்றா நோய்கள் குறித்து சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும்அவதானமாகத்தொழிற்படவேண்டும். தொற்றா நோய்கள் தொடர்பில் தெளிவான விளக்கம் பெற்றவர்களாகவும், எமது சந்ததியினர்களுக்குவிழிப்புணர்வூட்டுகின்றவர்களாகவும் நாம் மிளிரவேண்டும். (ற-ரி4)

சிக்காத சிறுத்தையால் பன்மூரில் போராட்டம்

ஹற்றன், ஜன.5

சிறுத்தை அச்சுறுத்தல் தொடர்கின்றது. அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்து ஹற்றன், பன்மூர் தோட்ட மக்கள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டனர். கடந்த சில தினங்களாக தோட்ட மக்களை சிறுத்தை அச்சுறுத்தி வருகின்றது.

சிறுத்தையின் தாக்குதலில் 7 பேர் காயமடைந்துள்ளனர். இன்னமும் சிறுத்தை பிடிக்கப்படவில்லை.

சிறுத்தையைப் பிடிப்பதற்கு கூடு ஒன்று வைத்து முயற்சிக்கப்பட்டது.

எனினும் அது வெற்றியளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

மருத்துவர்களின் இடமாற்ற பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு,ஜன.5

மருத்துவர்களின் இடமாற்றம் தொடர்பில் நிலவும் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். கொழும்பு தேசிய குருதி வங்கியில் நேற்று நடந்த நிகழ்வென்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது தொடர்ச்சியாக நீண்ட காலமாக ஒரே பிரதேசத்தில் சேவை புரியும் மருத்துவர்கள் விரைவாக இடமாற்றம் செய்யப்படுவார்கள்.

மருத்துவர்களின் இடமாற்றம் தொடர்பில் மருத்துவ நியமன அதிகாரிகள் விரைவில் நியமனங்களை கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள்.என்றார். (ற-ரி5)

தவறு செய்தோருக்கு தண்டனை நிச்சயம்

அமைச்சர் ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜன.5

தவறு செய்தவர்களுக்கு நிச்சயம் தண்டனை கிடைக்கும் என்று தெரிவித்தார் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கொலன்னாவை எரிபொருள் கலஞ்சிய சாலை நிலையத்தில் நேற்று இடம்பெற்ற புத்தாண்டை வரவேற்கும் நிகழ்வில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

எமது அரசாக இருந்தாலும் தவறு செய்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்க அரச தலைவரும், தலைமை அமைச்சரும் தயாராகவுள்ளனர்.

நாங்கள் கட்சி என்ற வகையில் பிளவுபட்டு இருந்தோம். இலங்கை சுகந்திர கட்சி வெற்றி பெற்றால் ஐக்கிய தேசிய கட்சியை தாக்குவதும், ஐக்கிய தேசிய கட்சி வென்றால் இலங்கை சுகந்திர கட்சியை தாக்குவதுமான போக்கே எம்மிடையே காணப்பட்டது.

நாங்கள் தற்போது அந்த அரசியல் கலாசாரத்தை மாற்றியமைத்துள்ளோம். நாங்கள் நாட்டை முன்னிலைப்படுத்தி சிறந்த பயணத்தை மேற்கொண்டு வருகின்றோம். இந்த அரசில் சிலகுறைபாடுகள் காணப்படுகின்றன. எனக்கும் இது கவலை தருகின்றது. காரணம் திருடர்கள் இன்னும் பிடிபடாமல் உள்ளமையே.

இதுவே தற்போதிருக்கும் பெரிய பிரச்சினை. ஆனாலும் தவறிழைத்தவர்களுக்குத் தண்டனை உண்டு. என்றார். (ற-ரி5)

தேரருடைய தகனக் கிரியைகளை தடுக்க முயன்றோருக்கு தோல்வி

வடக்கு ஆளுநர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம் ஜன 5

யாழ்ப்பாணம் நாகவிகாராதிபதியாக இருந்து அண்மையில் மறைந்த விகாராதிபதி ஞானரத்ன தேரரின் வரலாறு இலங்கை வரலாற்றில் இடம்பிடிக்கும். அப்படிப்பட்டவரின் இறுதிக் கிரியைகளை குழப்ப வடக்கில் உள்ள சில கடும் போக்காளர்கள் முற்ப்பட்டபோதும் அது தோல்வியில் முடிந்துவிட்டது. இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார். அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது மிகச் சிரமமான நிலையில் யாழ்ப்பாணம் நாக விகாரரையின் மத குருவாக பணியாற்றிய ஞானரத்னதேரரின் சேவை இலங்கை வரலாற்றில் நிச்சயம் இடம்பிடிக்கும்.

வடக்கில் உள்ள கடும்போக்கு தரப்பினர் சுற்று சூழலுக்கு மாசு ஏற்படும் என தெரிவித்து யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் மரணச் சடங்கு இடம்பெற்ற தினத்தன்று தடை உத்தரவுக்கு விண்ணப்பித்திருந்தனர். இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் வட பிராந்திய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மூன்று மத்தியாலங்கள் வரை குறித்த நிகழ்வு தொடர்பாக நீதவான முன்னிலையில்

தெரிவித்த காரணங்கள் அடிப்படையில் தடை உத்தரவுக்கான விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டது.

நமக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சகல சவால்களையும் நடவடிக்கைகளையும் மலை அளவு வந்தாலும் சிறுதுளியாக்கி செயற்ப்பட்டவர் நாகவிகாரதிபதி ஞானரத்னதேரர் அவ்வாறான மனிதரின் சேவை அளப்பரியது.என்றார். யாழ்ப்பாணம் நாகவிகரையின் விகாராதிபதி ஞானரத்னதேரர் சுகயீனம் காரணமாக கடந்த மாதம் கொழும்பு சிறி ஜேவர்த்தனபுர மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரின் உடல் உலங்குவானூர்தி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்பட்டு இலங்கை இராணுவத்தினரின் உதவியுடன் யாழ்ப்பாணம் முற்றவெளியில் தகனம் செய்யப்பட்டது. இது தமிழ் மக்களிடையே பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. (ற-8)

ஆதன வரியை விரைந்து செலுத்த அறிவுறுத்து

மட்டக்களப்பு, ஜன.5

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் நகர சபைக் குட்பட்ட எல்லைக்குள் மிகக் கூடுதலான ஆதன வரி நிலுவைகளை செலுத்தாதவர்கள், தங்களது நிலுவைகளை மிக விரைவாக செலுத்தி முடிக்கவேண்டும்.

செலுத்தத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகர சபையின் செயலாளரும் சிறப்பு ஆணையாளருமான பிர்னாஸ் இஸ்மாயில் நேற்று தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

நகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் மிகக் கூடுதலான ஆதனவரி நிலுவைகள் செலுத்தாமல் இருப்பவர்களுக்கு பல தடவைகள் நகர சபை ஊழியர்களால்அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் இதுவரை தங்களின் ஆதன வரியை செலுத்தாதுள்ளனர். அவர்களின் நிலுவைகள் மிகக் கூடுதலாகக் கூடிக் காணப்பட்டு வருகின்றது.

இருப்பவர்கள் காரியாலயத்துக்கு சமூகம் தந்து அவற்றுக்கான வரிகளை செலுத்தி பணத்துக்கான பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

அதற்காக வாரத்தின் ஏழு நாள்களும் அலுவலகம் திறந்து இருக்கும்.என்றார். (ற-ரி5)

விவசாய விழிப்பூட்டல் நிகழ்வு

மட்டக்களப்பு, ஜன.5

மாமரங்களை நடுகை செய்தல், கத்தரித்தல், பழக்கப் படுத்தல், பழுக்க வைத்தல் உரம் இடல், மாவிலைத் தத்திகளைக் கட்டுப்படுத்தல் என்பவற்றுக்கான ஒருங்கிணைந்த தொழில்நுட்ப விழிப்பூட்டல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு போரதீவுப்பற்று பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட திக்கோடை விவசாயப் போதனாசிரியர் பிரிவின் தும்பங்கேணி இளைஞர் விவசாயத் திட்டம் எனும் கிராமத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன், போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி, மட்டக்களப்பு தெற்குவலய உதவி விவசாயப் பணிப்பாளர் எம்.சிவஞானம், கிராம சேவையாளர், பாடவிதான உத்தியோகத்தர்கள், மதகுரு, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், சமூர்த்தி உத்தியோகத்தர், பாடசாலை அதிபர் உட்பட 200க்கும் மேற்பட்ட விவசாயிகளும் கலந்து கொண்டனர். (ற-ரி5)

விபத்தில் 11 பேர் காயம்

அநுராதபுரம், ஜன.5

அநுராதபுரம், பதெனிய பிரதான சாலையில் நடந்த வாகன விபத்தில் 11 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கல்கமுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சிற்றூர்தி ஒன்று வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் காயமடைந்தவர்கள் ஜாஎலவைச் சேர்ந்தவர்கள் என்றும், நிகழ்வு ஒன்றுக்குச் சென்று திரும்பும் வழியில் விபத்தில் சிக்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. சாரதியின் தூக்கக கலக்கமே விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி5)

மோடி இஸ்ரேலுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பொழுது அவரை வரவேற்றுச் செல்கிறார் நெத்தன்யாகு. மோடியின் இந்தப் பயணத் தின்போதே குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ, ஜன. 5

ஜப்பானின் போனின் தீவில் நேற்று நில நடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுகம் ரிச்டா அளவுகோலில் 5.4 அலகுகளாகப் பதிவானது என்று அமெரிக்கப் புவியியல் சார் ஆய்வு மையம் தெரிவித்தது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து எந்தத் தகவலும் வெளிவரவில்லை. சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை. (ம)

இஸ்ரேலுடனான ஏவுகணை ஒப்பந்தத்தில்

இந்தியா விலகல்

டெல் அவிவ், ஜன. 5

இலங்கை மதிப்பில் சுமார் 7 ஆயிரத்து 750 கோடி ரூபாவுக்கு இஸ்ரேலிடமிருந்து ஏவுகணைகளை வாங்குவதற்காக செய்துகொண்ட ஒப்பந்தத்தை இந்தியா கைவிட்டுள்ளது. இந்தியாவின் இந்த நடவடிக்கைக்கு இஸ்ரேல் வருத்தம் தெரிவித்துள்ளது.

பீரங்கிகளை தகர்க்கவல்ல 'ஸ்பைக்ஸ்' ரக ஏவுகணைகளை இஸ்ரேலிடமிருந்து வாங்குவதற்காகவே இந்த ஒப்பந்தத்தை இந்தியா செய்து கொண்டது. ஒப்பந்தம் கைவிடப்பட்டமை குறித்து இஸ்ரேலின் ஏவுகணைத் தயாரிப்பு நிறுவனமான ரபேல் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் இசாய் டேவிட் கூறும்போது "ஸ்பைக்ஸ் ஏவுகணை வாங்குவதற்கான ஒப்பந்தத்தை இந்தியா கைவிட்டுள்ளது. இரு நாட்டு இராணுவ விதிமுறைகளுக்கு உட்பட்டே இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இஸ்ரேல் தலைமை அமைச்சர் நெத்தன்யாகுவின் இந்திய சுற்றுப்பயணம் நெருங்கி வரும் சூழலில், இந்தியாவின் இந்த அறிவிப்பு வருத்தமளிக்கிறது" என்று தெரிவித்துள்ளார். (ம)

எம்மிடமும் இருக்கின்றன வலிமையான 'ஸ்விட்ச்கள்'

கிம் ஜோங் உன்னுக்கு அதிபர் ட்ரம்ப் பதிலடி

"அணுகுண்டை இயக்குவதற்கான ஸ்விட்ச் எனது மேசையில் உள்ளது" என்று தனது புதுவருட உரையில் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் கருத்துத் தெரிவித்திருந்த நிலையில், "எம்மிடமும் சக்தி வாய்ந்த அணுகுண்டுகளின் ஸ்விட்ச்கள் உள்ளன" என்று தெரிவித்து பதிலடி கொடுத்துள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

"வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் அணுகுண்டுக்கான ஸ்விட்ச் அவரது மேசையில் எப்போதும் இருக்கிறது என குறிப்பிட்டுள்ளார். அவரின் செயற்பாடுகளால் அந்தப் பகுதியில் பதற்றத்துடன் இருக்கும் எவராவது அவரிடம் கூறுங்கள், எங்களிடமும் அணுகுண்டுகளுக்கான ஸ்விட்கள் உள்ளன. அவை மிகப்பெரிதாக, வலிமையானதாக இருக்கும். முக்கியமாக எங்களது ஸ்விட்ச்கள் செயல்படும் நிலையில் உள்ளன" என்று ட்ரம்ப் மேலும் தெரிவித்தார். (ம)

அரசுக்கு எதிரான கலவரம் விரைவில் முடிவுக்கு வரும்

ரவுகானி நம்பிக்கை

தெக்ரோன், ஜன. 5

ஈரானில் அரசுக்கு எதிராக நடைபெற்றுவரும் கலவரம் விரைவில் முடிவுக்கு வரும் என்று ஈரான் அதிபர் ரவுகானி நம்பிக்கை தெரிவித்தார்.

ஈரானில் அத்தியாவசியப் பொருள்களின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்து வருகிறது. இதையடுத்து ஈரான் அதிபர் ரவுகானி, மூத்த தலைவர் அயதுல்லா ஆகியோருக்கு எதிராக பெரும் கலவரம் அங்கு வெடித்துள்ளது. ஆர்ப்பாட்டக் காரர்களை அடக்குவதற்காக அங்கு துப்பாக்கிச் சூடும் நடத்தப்படுகிறது. இதுவரை 21 பேர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளனர். சுமார் 500 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நாளுக்குநாள் கலவரம் தீவிரமடைந்து வரும் நிலையில் இன்னும் சில தினங்களில் இந்தக் கலவரம் முடிவுக்கு வரும் என்று நம்பிக்கை தெரிவித்தார் ரவுகானி. (ம)

ஈரான் ஆர்ப்பாட்டத்தில் கூடு

குத்தேரஸ் அதிருப்தி

தெக்ரோன், ஜன. 5

ஈரான் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மக்கள் மீது நடத்தப்பட்டுள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கு ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் குத்தேரஸ் கடும் அதிருப்தி தெரிவித்தார்.

"போராட்டத்தின் போது உயிரிழந்தவர்கள் குறித்து ஆழ்ந்த கவலை அடைகிறோம். மேலும், இதுபோன்ற வன்முறைகள் மீண்டும் நடக்காமல் இருக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

சீனாவில் வருடாந்த பனிச்சிற்பக் கொண்டாட்டங்கள் தற்போது கோலாகமாக நடைபெற்று வருகின்றன. ஹலோஜிலாங் மாநிலத்தில் வைக்கப்பட்டுள்ள பனிச் சிற்ப மொன்றின் ஒளிப்படமே இது. (ம)



தாஜ்மஹாலைப் பார்வையிட விதிக்கப்பட்டது வரையறை

தாஜ் மஹாலை சுற்றிப் பார்க்க இனிவரும் காலங்களில் ஒரு நாளைக்கு 40 ஆயிரம் பேரை மட்டுமே அனுமதிக்கத் திட்டம் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் எதிர்வரும் 20ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளது.

உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் ஆக்ராவில் உள்ள தாஜ் மஹாலை பார்ப்பதற்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகம். தினமும் சராசரியாக 60 ஆயிரம் முதல் 70 ஆயிரம் பேர் வரை தாஜ் மஹாலைப் பார்த்துச் செல்கின்றனர். குறிப்பாக விடுமுறை நாள்களில் தாஜ் மஹாலை பார்க்க வருபவர்களின் எண்ணிக்கை லட்சக்கணக்கில் உயர்ந்துள்ளது. இதனால் நெருக்கடியும் ஏற்படுகிறது. இதையடுத்தே தாஜ் மஹாலைப் பார்வையிடுவதற்கு வருபவர்கள் எண்ணிக்கை தொடர்பில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படவுள்ளன. (ம)

மீண்டும் தேடப்படவுள்ளது மலேசியாவின் வானூர்தி

கோலாலம்பூர், ஜன. 5

கடந்த 2014ஆம் ஆண்டு காணாமல்போன மலேசிய வானூர்தி எம்.எச்.370, மீண்டும் தேடப்படவுள்ளதுஎன்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. மலேசியத்தலைநகர்கோலாலம்பூரில்இருந்துசீனாவில் உள்ள பீஜிங் நகருக்கு 2014ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி புறப்பட்ட வேளையில் எம்.எச்.370 வானூர்தி காணாமல் போனது.

குறித்த வானூர்தீக்கு என்ன நடந்ததுஎன்றுஇன்றுவரை அறிவிக்கப்படவில்லை.

விமானத்தை தேடும் பணியில் ஆஸ்திரேலிய நிறுவனமொன்று ஈடுபட்டது. இந்த முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

தற்போது அமெரிக்காவை சேர்ந்த ஓசியன் இன்பினிட்டி என்ற நிறுவனத்தின்மூலம்தேடுதல்பணிகளை செய்ய மலேசியா ஏற்பாடு செய்துள்ளது.

கடலில் தேடும் பணிகளை செய்வதற்காக சிறப்பு வசதிகளுடன் கூடிய கப்பலைஇந்தநிறுவனம்வைத்துள்ளது. அதிநவீனதொழில்நுட்பங்கள் இந்த கப்பலில் உள்ளன. இதனால் இன்னும் சில வாரங்களில் எம்.எச்.370 வானூர்தி தொடர்பில் ஒரு முடிவு எட்டப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

மலேசிய வானூர்தியைத் தேடவுள்ள கப்பல்

நைஜீரியாவில் தற்கொலை தாக்குதலில் 11 பேர் சாவு

அபுஜா, ஜன. 5

வடகீழக்கு நைஜீரியாவின் போர்னோ மாநிலத்தில் உள்ள மகூதியில் நேற்று நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 11 பேர் உயிரிழந்தனர்.

தொழுகையில் ஈடுபட்ட 11 பேர் உயிரிழந்தனர். அவர்களை விட மேலும் பலர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடம் என்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படவாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

எனினும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

ஐந்து தசாப்த காத்திருப்பு

ஒரு பரிசுப் பெட்டியை எவ்வளவு காலம் திறந்து பார்க்காமல் இருக்க முடியும்? கனடாவைச் சேர்ந்த அட்ரியன் பியர்ஸ், 47 ஆண்டுகளாக ஒரு பரிசுப்பெட்டியைத்திறக்காமல்வைத்திருக்கிறார்.

1970ஆம்ஆண்டுபள்ளியில்படித்துக் கொண்டிருந்தபோது அட்ரியனுக்கு 17 வயது. அவரது காதலி விக்கி முதல் முறையாகஒருபரிசைக்கொடுத்தார். அத்துடன் உறவு முறிந்துவிட்டதாகவும் அறிவித்தார். மனம் உடைந்து போன அட்ரியன், கோபத்தில் பரிசுப் பெட்டியைத் தூக்கி வீசினார். அது கிறிஸ்மஸ் மரத்துக்கு அடியில் போய் விழுந்தது. அந்த ஆண்டு கிறிஸ்மஸ் முடிந்தவுடன்எல்லாப்பரிசுகளையும் வீட்டில் உள்ளவர்கள் பிரித்துப் பார்த்தார்கள். கடைசியில் இந்தப் பரிசைப் பிரிக்கமுயன்றபோது, அதைப்பிரிக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

"என் முதல் காதல் முறிந்தபோது கொடுத்த இந்தப் பரிசைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குக் கோபமாக இருந்தது. சிலஆண்டுகளுக்குப்பிறகு என் குடும்பத்தினர் பிரித்துப் பார்க்கச் சொன்னார்கள். என் வாழ்நாள் முழுவதும் பிரிக்கப் போவதில்லை என்று சொல்லிவிட்டேன். பிறகு, விக்கியின் தங்கை என்னைத் தொடர்புகொண்டார். விக்கி என்னைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னார். இருவரும் சந்தித்தோம். ஆனால் இருவருக்குமே மீண்டும் காதலிக்கும் எண்ணம் தோன்றவில்லை. இனி சந்திக்க வேண்டாம்என்றுபிரிந்துசென்றோம். எனக்கும்திருமணமானது, குழந்தைகள்பிறந்தனர். ஒவ்வொருகிறிஸ்மஸ் பண்டிகையின்போதும்இதைப்பிரிக்கலாமா என்று மனைவியும் குழந்தைகளும்கேட்பார்கள். நான்வேண்டாம் என்று மறுத்துவிடுவேன். நான் பரிசைப் பிரிக்காததற்கு முக்கிய காரணம், என்றாவது ஒருநாள் விக்கி வருவார், அப்போது இருவரும் சேர்ந்துபிரிக்கலாம்என்றஎண்ணம் தான். அதோடுபிரித்துவிட்டால், அதில் உள்ள சுவாரசியம் போய்விடும். இந்தக் கிறிஸ்மஸின் போது விக்கியைத் தொடர்புகொள்ள வேண்டும் என்று தோன்றியது. ஆனால் எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை. அதனால்50ஆவதுஆண்டில்ஒருநிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப் போகிறேன். இந்தப் பரிசுப் பெட்டிக்குள் என்ன இருக்கிறதுஎன்பதைச்சரியாகச்சொல்பவர்களுக்குப்பரிசு கொடுக்கப் போகிறேன். இந்த நிகழ்ச்சி மூலம் கிடைக்கும் வருமானத்தை அறக்கட்டளைக்குவழங்கஇருக்கிறேன்"என்கிறார்அட்ரியன்பியர்ஸ். இந்தவிடயம் தான் சமூக வலைத் தளங்களில் தற்போதுட்ரெண்ட். (ம)

பெரு பஸ் விபத்தில் உயிரிழப்பு 40 ஆனது

லிமா, ஜன. 5

பெருநாட்டின்தலைநகர்லிமாவில்கடந்தசெவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 36ஆக அதிகரித்தது.

பசமாயோநகரில்இருந்துபுறப்பட்டபேருந்து57 பயணிகளுடன் லிமா நகரை நோக்கி சென்றுகொண்டிருந்தபோதே அவ்வாறு விபத்துக்கு உள்ளானது. சம்பவ இடத்திலேயே 36 பேர் உயிரிழந்தனர். மருத்துவமனையில்சிகிச்சைபெற்றவர்களில்நால்வர்உயிரிழந்ததைஅடுத்து சாவு எண்ணிக்கை 40ஆக உயர்ந்தது. (ம)

பயங்கரவாத ஒழிப்பில் பாக். இரட்டை வேடம்

நிக்கி ஹாலே காட்டம்

வொஷிங்டன், ஜன. 5

"பயங்கரவாத ஒழிப்பில் பாகிஸ்தான் இரட்டை வேடம் போடுகிறது" என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹாலே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பயங்கரவாத ஒழிப்புக்காக வருடந்தோறும் மில்லியன் கணக்கான டொலர்களைபாகிஸ்தானுக்குவழங்கி வந்தது அமெரிக்கா. ஆனால் பாகிஸ்தான் பயங்கரவாதத்தை ஒழிக்கத் தவறிவிட்டதுஎன்றுதெரிவித்துபாகிஸ்தானுக்கு கொடுத்துவந்த நிதியை அதிரடியாகநிறுத்தியது அமெரிக்கா. அத்துடன் நின்றுவிடாமல் பாகிஸ்தான் மீது ஏகப்பட்ட விமர்சனங்களை முன்வைத்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். தற்போது ஐ.நா. சபைக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹாலேயும் கடும் கருத்துக்களை வைத்துள்ளார்.

"பயங்கரவாத ஒழிப்பில் பாகிஸ்தான் இன்னும்அதிகமாகசெயல்படமுடியும் என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். பயங்கரவாத ஒழிப்பில் தனது கடமைகளை நிறைவேற்ற பாகிஸ்தான் தவறிவிட்டது. அது இரட்டை வேடம் போடுகிறது" என்று ஹாலே மேலும் குறிப்பிட்டார். (ம)

ரஜினி மன்றத்தில் 50 லட்சம் பேர்



சென்னை, ஜன. 5

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர் ரஜினி காந்த் கடந்த 31ஆம் திகதி தனது அரசியல் வரவை உறுதிப்படுத்தியுள்ள நிலையில், அவர் அறிவித்த ரஜினி மன்றத்தில் இதுவரை 50 லட்சம் பேர் தம்மைப் பதிவுசெய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஜினிக்கு தமிழகம் முழுவதும் 22ஆயிரம் ரசிகர் மன்றங்கள் பதிவுசெய்யப்பட்டநிலையில் உள்ளன. சுமார் 30 ஆயிரம் மன்றங்கள் பதிவுசெய்யப்படாத நிலையில் உள்ளன. இவை அனைத்தையும் ஒரு குடையில்கொண்டுவரவும்ரஜினிதிட்டமிட்டுள்ளார். ரசிகர் மன்றங்களை தனது அரசியல் வருகைக்கு பலமாக ரஜினி பயன்படுத்தவுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

புரிந்துகொள்ள வேண்டும் மைத்திரி - ரணில் அரசு

போர்க் குற்றம் தொடர்பான பொறுப்புக்கூறல் விவகாரத்திலும், தமிழ் மக்களின் ஏனைய விவகாரங்களிலும்கூட்டுஅரசும்சொல்லிக்கொள்ளும் படியானஅளவில்சாதிக்கவில்லைஎன்றுதெரிவித்துள் ளார்தமிழ்தேசியக்கூட்டமைப்பின்தலைவரும்எதிர்க் கட்சித் தலைவரும் நடாளுமன்ற உறுப்பினருமான சம்பந்தன்.

'த ஹிந்து' ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர்மைத்திரி – ரணில்கூட்டு அரசின்மீது தனது அதி ருப்தியைப்பதிவுசெய்துள்ளார். போர்க்குற்றம்தொடர் பான பொறுப்புக்கூறலில்தனது முழுமையான ஏமாற் றத்தையும், காணிவிடுவிப்பு, காணாமல்ஆக்கப்பட்ட வர்களின்நிலை தொடர்பிலான வெளிப்படுத்தல்கள், அரசியல் கைதிகளின் விடுதலை ஆகியவற்றில், 'நல் லாட்சி'என்றுதன்னைஅடையாளப்படுத்திக்கொண்டு ஆட்சி பீடம் ஏறிய கூட்டு அரசும், தனதும் தமிழ் மக்க ளினதும் எதிர்பார்ப்பை நிறைவுசெய்யவில்லை என் றும் அவர் சாடியுள்ளார்.

எனினும்2015ஆம்ஆண்டுஅப்போதையஅரசதலை வர்மகிந்தவை வீட்டுக்கு அனுப்பும் விதத்தில் மைத்தி ரிக்கு ஆதரவு தெரிவித்தமை தொடர்பில் தமக்கு எவ் வித வருத்தமும் கிடையாது என்றும் சம்பந்தன் அழுத் தம் திருத்தமாக வெளிப்படுத்தியுள்ளார். மைத்திரி – ரணில் அரசை அமைப்பதற்கு அன்று எடுத்த முடிவு சரியானது என்று இன்றும் சம்பந்தன் வெளிப்படுத்தி யுள்ள கருத்துக்கள், இந்தக் கூட்டு அரசில் அவர் தொடர்ந்தும் நம்பிக்கையுடனேயே உள்ளார் என்ப தையே புடம்போட்டுக் காட்டுகின்றன. பழுத்த அரசி யல்வாதியும், தமிழ்மக்களின்முக்கியபிரதிநிதியுமான சம்பந்தனின் கருத்துக்கு கூட்டு அரசு முழுமையாகச் செவிசாய்க்க வேண்டியது இன்றைய அவசர மற்றும் அவசியத் தேவையாகவுள்ளது.

2018ஆம் ஆண்டைநாம்வரவேற்றுள்ளோம். காணா மல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம், காணி விடு விப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, வடக்கில் உள்ள இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல் உள் ளிட்ட பலமுனைப் போராட்டங்களுடனேயே கடந்த வருடங்களைப் போன்று இந்த வருடத்தையும் நாம் ஆரம்பித்துள்ளோம். இவற்றுடன் புதிய அரசமைப்பு உருவாக்கம் என்ற ஒன்றும் இந்த வருடம் கூடுதலாக இணைந்துள்ளது.

புதிய அரசமைப்புத் தொடர்பில் தமிழர் தாயகத்தில் மிகப்பெரும் எதிர்பார்ப்புக்கள் நிலவுகின்றன. மைத் திரி – ரணில் கூட்டு அரசு தமிழர்களுக்கு போதிய அதி காரத்துடன் ஒரு அரசமைப்பை உருவாக்கும் என்றும் எம்மவர்கள் பலர் ஏங்கித் தவமிருக்கின்றனர். ஆனால் அரசமைப்பில்உள்ளது ஒற்றையாட்சியாஅல்லதுகூட் டாட்சியா?என்றசொற்பதங்களிலும், அதுதொடர்பான குழப்பநிலைகளிலும்இருந்துஇன்னும்முழுமையான தீர்வு, தெளிவுகிடைக்கவில்லை. இனவாதத்தைத்தமது வாக்கு வங்கியாகக் கொண்டிருக்கும் கொழும்பு அரசி யல் வாதிகள் பலரும், இடைக்கால அறிக்கையின்படி அரசமைப்பு உருவாக்கப்பட்டால் தமிழீழம் உருவாகி விடும், கொழும்பைவிடவும்மாகாணசபைகளுக்கான அதிகாரம் அதிகரிக்கும் என்று கருத்துத் தெரிவித்துள்ள னர். இவ்வாறான நிலையில் இத்தகைய இமாலயத் தடைகளைத்தகர்த்து எவ்வாறுஅரசமைப்புஉதயமாகப் போகிறதுஎன்பதேதற்போதுள்ளமிகப்பெரும்கேள்வி.

தன்னை ஆட்சிப்பீடம் ஏற்றிய சிறுபான்மை மக்கள் குறித்து கூட்டு அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண் டும். தனது நிலைப்பாட்டில் தமிழ் மக்களுக்குச் சாதக மானமாற்றங்களைகூட்டுஅரசுஏற்படுத்த வேண்டும்.

see more news in NEWUTHAYAN.COM

தமிழ்த் தேசியத்தை வெற்றிபெற வைக்க பெரும் பங்களிப்பு வழங்கிய குமார் பொன்னம்பலம்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயலதிபரும், மூத்த தமிழ்த் தலைவர்களில் ஒரு வருமாக விளங்கிய குமார் பொன்னம்பலம் 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் திகதியன்று கொழும்பில் வைத்துச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். அவரது 18ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். அவரது மறைவையடுத்து அருட்தந்தை கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் வெளிப்படுத்திய கருத்துக்களின் சில பகுதிகள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.

தொகுப்பு:
க.மு.தர்மராசா

குமாருக்கு வாழ்வதற்கென நீர் வழங்கிய அறுபதுஆண்டுகளுக்காகவும்நான் ஆண்டவராகிய உமக்கு நன்றி செலுத்துகின்றேன். எண்ணிக்கையில்அது, ஆக அறுபது ஆண்டுகளாக இருக்கின்றபோதிலும், குமாரினது பாச உணர்வு உலகளாவ அகன்று அமைய நீர் அவரை ஆசீர்வதித்திருக்கிறீர். குமார்தனதுஅன்பைஅனைத்துத் தமிழர்களாகிய எமக்காகவும் இடையறாது பரவச் செய்தார். உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஈழத்தில் வாழ்வோர், புலம்பெயர்ந்து வெளியே வாழ்வோர், இன்று ஈழத்தில் வாழ்வோர், இனிமேல் வாழப்போவோர் என எல்லோருக்குமே குமார் தனது அன்பைப் பிரவாகித்து ஓடச்செய்தார். குமாரினது வாழ்வு துணிகரமான ஓர் சேவையாகும். அது ஏழைகளின் மீதும், துன்பப்படுவோர் மீதும், நீண்ட அன்புக்கு ஒரு சான்றாக அமைந்தது. கொலை, பாலியல் வல்லுறவு, சித்திரவதை என்பவற்றுக்கு இரையாகும்ஆயிரக்கணக்கானோரைப் பாதுகாப்பதற்கான வாழ்வாக அது அமைந்தது.

உண்மைக்கும் நீதிக்குமாக துணிச்சலோடு செயற்பட்டவர்

குமார், மக்கள்சேவையேமகேசன்சேவைஎன்பதைஎந்தஅளவுக்கு நம்பினாரோ, அதையே செயற்படுத்தினார். குமாரினது வாழ்வின் நீளமும், அகலமும் அவரதுவாழ்வின்ஆழத்தைப் பிரதிபலிப்பவை அல்லவோ! உண்மைக்கும் நீதிக்குமாகச் சேவையாற்ற எத்தனை ஆழமான பற்றுறுதியை அவர் கொண்டிருந்தார். அநீதிக்கு இரையாகுபவர்களின் பாதுகாப்புக்காக குமார் தனது கல்விச் செல்வத்தையும், ஆளுமையையும், துணிவாகவும், புத்திசாதுரியமாகவும் பயன்படுத்தியதை வைத்து நான் நிச்சமாகச் சொல்கிறேன், ஆண்டவரேநீர்குமாருடன்இருந்திருக்கின்றீர்! குமார் உம்முடன் இருந்திருக்கின்றார்.

குமாரினது பற்றுறுதி அவரது வாழ்வின் உறுதிக்கான ஒவ்வொரு நார்களிலும் ஊடறுத்து வியாபித்து நின்றது. அவரது சொற்கள்உண்மைக்கும்நீதிக்குமான இமாலய உணர்ச்சிகளுக்கு பிறப்புக்கொடுத்தன. அந்தப் பற்றுறுதியுடனும், உணர்ச்சியுடனும்தான்குமார் தனது எதிரிகளுக்கு முகங்கொடுத்தார். அதிகாரபலத்துடனும், வல்லமையுடனும் இருந்தவர்களுக்குச் சவால் விடுத்தார். தமிழர்களாகிய எமக்கு நீதியைப் பெற்றுத் தரவேண்டும் என்ற குமாரினது வேணவாவும்,உணர்ச்சியுமன்றோஉலகெங்கும்பரந்துவாழும்தமிழர்களுடைய இதயங்களைத் தொட்டுச்சென்றது.

குமார் ஒருபோதும் எவருக்கும் வளைந்து கொடுத்ததில்லை

குமார் ஒரு நம்பிக்கையுள்ள மனிதர்! எந்தவொருசந்தர்ப்பத்திலும்குமார்முன்னோக்கியோ, பின்னோக்கியோவளைந்ததே கிடையாது. இங்கேதான்தனது உணர்வுகளுக்காக முதுகெலும்புடன் வாழ்ந்த ஒரு தமிழனைநாம்காண்கின்றோம்! விமர்சனங்களுக்குமுகம்கொடுக்க வேண்டிவரும் என்ற பயத்தினால், நீதியான ஒரு கிளர்ச்சியுடன் இணைந்து கொண்டுவிடுவோம்என்பதனால், சாதாரணமானவர்களுடன் இளையவர்களுடன் சேர்த்து அவர்களில்ஒருவராகநாமும்கணக்கிடப்பட்டுவிடுவோம்என்றபயத்தினால், எம்மில் பலர் இன்னமும் மௌனச் சுவரின் பின்னால் மறைந்து கொண்டிருக்கின்றார்கள்.

நீதிக்கும் உண்மைக்கும் விரும்பித் துரோகம் செய்யும் பல கோழைகளைத் தமிழினம்கொண்டிருப்பதற்குக்காரணம், உம்முடைய சாபமா, ஆண்டவரே, இல்லையென்றுதான்நான்நம்புகிறேன். ஏனெனில்நீர் எமக்குஒருகுமாரைத் தந்தீர்! தனது மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் துணிந்து நின்ற உண்மையின்புதல்வனைநீரேஎமக்குத் தந்தீர்! நிச்சயமாக நீர் எம்மை நட்டாற்றில் அநாதைகளாக விடப்போவதில்லை! குமார் பலியாகக்காரணமாய்இருந்தவர்களது கோழைத்தனத்தை அகற்றநீர்எமக்குஉதவுவீராக! ஒருவருடன் ஒருவர் நெருக்கமாகி நிமிர்ந்து நின்று, எழுந்து நின்று உண்மை நீதி சமாதானத்துக்கானதாகத்துடன்தவிக்கும்உமதுமக்களுக்குச்சேவையாற்றஎமக்கு உதவுவீராக!

> குமார் ஒரு நம்பிக்கையுள்ள மனிதர்! எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குமார் முன்னோக்கியோ, பின்னோக்கியோ வளைந்ததே கிடையாது. இங்கேதான் தனது உணர்வுகளுக்காக முதுகெலும்புடன் வாழ்ந்த ஒரு தமிழனை நாம் காண்கின்றோம்!

குமார் தனது இனத்துக்கான கடமையைச் செவ்வனே செய்துள்ளார்

உயர்ந்து எழுகின்ற ஒரு தீச்சுவாலைகுமாரினதுஉடலத்தை ஆட்கொள்கின்றது. அந்தச் சுவாலையின்தகிப்பும்ஒளியும் முழுத்தமிழர்தேசத்தின்மேலாகவும் பரவட்டும்.. எமது மக்களையும்,எமதுதாயகத்தையும் நேசிப்பதற்காகஒருஇதயத்தை எமக்கு மேலாக, தமிழர்களுடையகுறிக்கோள்களைத்தழுவிப் பின்பற்றக்கூடிய தெளிந்த மெய்யறிவை வழங்கும் ஒளியைக் காண்பிப்பீர். உண்மைக்கும் நீதிக்குமாகக் குரல் கொடுக்கவும், நாம் நம்புகின்ற ஏதுக்களுக்காக எழுந்து நிற்கவும்கூடியவகையில்அதனால் ஏற்படக்கூடியசெலவுகளையும் இழப்புக்களையும் கருத்தில் எடுக்காதவகையில்நாம்செயற்படுவதற்காக குமாருக்குள் இருந்த அந்த உன்னதமான துணிச்சலில் ஒரு துளியாவது எமக்குள் இருக்கட்டும்.

குமார்தனதுகடமையைச்செய்துள்ளார். ஒருவேளை தனது கடமைக்கும் மேலாகக் கூடச் செய்துள்ளார்எனலாம். உம்முடனான அவரது மோட்ச வாழ்வின்போதும் ஆண்டவரே குமார் எம்மிலும் வாழ்ந்து கொண்டிருக்கட்டும். எமது நினைவுகளில் மட்டுமன்றி, எமதுவரலாற்றில்மட்டுமன்றி, ஈழத்தின் ஆத்மாவிலும் ஒவ்வொருதமிழனதுஇதயத்திலும் எண்ணத்திலும்குமார்வாழ்ந்து கொண்டு இருப்பாராக!

அரசினால் கைவிடப்பட்ட நிலையில் இலங்கை தமிழர்கள்

சேரலாதன்

மலர்ந்துள்ள புதிய ஆண்டிலாவது தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு மக்களிடையே நிறையவே காணப்படுகின்றது. நீண்ட ஆயுதப்போராட்டமொன்று இடம்பெற்று முடிவடைந்த நிலையிலும், தமிழர்களின் அவல வாழ்வு தொடரவே செய்கின்றது. அரசு இவர்கள் மீது பாராமுகமாக இருக்கின்ற நிலையில் தமிழ்த் தலைமைகள் செய்வ தறியாது கைகளைப் பிசைந்து கொண்டிருப்பதையே காண முடிகின்றது.

இதே வேளை தெற்கில் இனவாதிகளின் இனவாதச் செயற்பாடுகள்முழுஅளவில்இடம்பெற்றுவருகின்றன. புலிகளை அழித்து நாட்டைக் காப்பாற்றியபோதிலும் தமிழ் ஈழம் உருவாகுவதற்கான செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஆட்சிக்கனவில் மூழ்கியுள்ள அவர் தனது அந்தக் கனவை நனவாக்க எதையும் செய்வதற்குத் தயாராக இருப்பவர் போன்று காணப்படுகின்றார். கடந்த அரச தலைவர் தேர்தலில் தமிழர்களின் புறக்கணிப்பால் தான் தம்மால் வெற்றி பெறமுடியவில்லை என்பதை அவரால் எளிதில் மறக்க முடியவில்லைஎன்பதுமிகத்தெளிவாகத்தெரிகின்றது. அவரால் உடனடியாக அரச தலைவர் பதவியில் அமர்ந்து கொள்ள முடியாது. ஆனால் தலைமை அமைச்சர் பதவியில் அமர்ந்து கொள்ள முடியும். இதற்குப் பெரும்பான்மையின மக்களின் ஆதரவு தமக்குக்கிடைத்தாலேபோதுமெனஅவர்நம்புகின்றார். இதனால் சிறு பான்மையினர் தொடர்பான கருத்துக்களை அவர் வாயில் வந்தவாறு தெரிவித்து வருகின்றார். பெரும்பான்மையின மக்களும் அதை நம்புவதாகத் தெரிகின்றது.

போர்க்குற்றங்களுக்கு
பொறுப்பேற்க வேண்டியவர் மகிந்தவே

முப்படைகளின் பிரதம தளகர்த்தர் என்ற வகையில் இறுதிப் போருக்கு அவரே பொறுப்பாக இருந்துள்ளார். போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப் பட்டமைக்கும்அவரேபொறுப்புக்கூறவேண்டும். அது மட்டுமல்லாதுபோரின்போதுஇடம்பெற்றபடையினரது போர்க்குற்றங்களுக்கும்மனிதஉரிமைமீறல்களுக்கும் அவரே பொறுப்பாக இருந்துள்ளார். ஆனால் இவை தொடர்பாக அவர் எதுவுமே தெரியாதவர் போன்று தம்மைப் புனிதராகக் காட்டும் விதத்தில் நடந்து கொள்கின்றார். போர்க் குற்றங்கள் எவையுமே இடம் பெறவில்லைஎன்பதேஇவரதுவாதமாகஉள்ளது. அரச தலைவரும்இந்தவிடயத்தில்மகிந்தவுடன்ஒத்துப்போவ தைக் காண முடிகின்றது. கூட்டு எதிரணியின் தலை வரும்,அரசதலைவரும்போர்க்குற்றங்கள்தொடர்பான விடயத்தில்ஒரேபாதையில்பயணிப்பதால்பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்குமா என்பதில் சந்தேகமே காணப்படுகின்றது.

உறுதியான முடிவெடுக்கத் தயக்கம்
காட்டும் இன்றைய அரச தலைவர்

அரசதலைவரைப்பொறுத்தவரையில்எந்தவிடயமாக இருந்தாலும் தீர்க்கமான முடிவை எடுப்பதில் தயக்கம் காட்டிவருகின்றார். இதற்குமகிந்தரப்பினரின்அழுத்த மும் ஒரு காரணமாக அமைந்துவிட்டது. இந்த அழுத் தங்களிலிருந்துவிடுபடுவதற்குஅவரால்முடியவில்லை. தமிழர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் மட்டுமேஅரசதலைவரிடம்இருப்பதால்பயனொன்றும் ஏற்படப் போவதில்லை. அதைச் செயல் வடிவில் காட்டும்போதுதான் தமிழர்கள் நன்மைகளைப் பெற முடியும். நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு ஊழலும் மோசடிகளுமே பிரதான காரணமாகும். கடந்த ஆட்சிக்காலத்தில் இவை மிகப் பெரிய அளவில் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. இதனால்அரசுக்குப்பெரும்நிதிஇழப்பீடுஏற்பட்டுள்ளது. இவை அரசுக்குத் திரும்பக் கிடைக்குமானால் பொரு ளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியுமெனக் கூறப்படுகின்றது. ஆனால் இவற்றுடன் தொடர்புடைய எவரும்இதுவரைகைதுசெய்யப்படவில்லை. அரசின் மிகப்பெரியபலவீனமாகஇதுகருதப்படுகின்றது. மத்திய வங்கியில்இடம்பெற்றபிணைமுறிமோசடிதொடர்பாக அரசதலைவரதுஉறுதியானநடவடிக்கையை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

நாட்டின் இனப்பிரச்சினைக்கான
தீர்வுக்கான வாய்ப்பு அருகி வருகின்றதா?

தமிழ் மக்களது இன்றைய வாழ்வியலுடன் தொடர்பு டைய,தமிழ்மக்கள்எதிர்கொள்கின்றசிறுசிறுபிரச்சினை களுக்கே தீர்வைக் காண முடியாதவர்கள் நாட்டில் நீண்டகாலமாகநீடித்துவருகின்றஇனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வைக் காண முடியும்? என்பதே இன்று எழுந்துள்ள மிகப்பெரிய கேள்வியாகும். பதிலை அரசுதான் வழுங்க வேண்டும். பலஸ்தீன மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமல் இழுபட்டுச் செல்வதற்குமேற்குலகவல்லரசுநாடுகளேகாரணமாக உள்ளன. இஸ்ரேல்என்றநாட்டைஉருவாக்கிஅதற்குப் பொருளாதார பலத்தையும் ஆயுதப்பலத்தையும் இந்த நாடுகளே வகைதொகையின்றி வழங்கி உதவி வருகின்றன. ஆனால் இஸ்ரேலுடன் பூகோள ரீதியில் நெருங்கி அமைந்திருக்கும் பலஸ் தீனம் தொடர்பாக இவை சிறிதும் அக்கறை கொள்வதில்லை. பலஸ் தீனியர்கள்இஸ்ரேலியர்களால்பல்வேறுவகையிலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இலங்கையிலும் தமிழர்கள் பலஸ் தீனர் போன்றே நீண்ட காலமாகப் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர். பலஸ் தீனங்களைச் சுற்றி முஸ்லிம் நாடுகள் பல இருந்தும் அவர்களால் இஸ்ரேலுக்கு எதிராக எதையும் செய்ய முடியவில்லை. அதேபோன்று இலங்கைத் தமி ழர்களைப்பொறுத்தவரையில் இன்று அவர்களுக்கு உதவுவதற்கு எவரும் இல்லாத நிலையே காணப்படு கின்றது. இலங்கை அரசு எதைச் செய்தாலும் அதைத் தட்டிக்கேட்பதற்கும் எவருமில்லை. இத்தகைய்தொரு பரிதாபகரமானநிலையில்தான்இலங்கைத்தமிழர்கள் உள்ளனர். அரசு இவர்களுக்கு விரும்பி எதையாவது செய்தால்தான்உண்டு.இல்லையென்றால்இலங்கைத் தமிழர்களுக்கு விடிவே கிட்டப்போவ தில்லை என்ற நிலையே தற்போது காணப்படுகின்றது.

கூடிப் பிரியேல்

சேர்வதும் பிரிவதும்
இலங்கையில் ஒரு பெரிய
விடயமல்ல. அரசியலில் இது
ஒரு சகஜமாக இருந்தாலும் கூட.
சாகசமான விளையாட்டும் கூட.
மக்கள் தெளிவாகவே
இருக்கிறார்கள். என்னதான்
கஷ்டம் வந்தாலும் மக்களுக்கு
அரசியல் அறிவும், ஆன்மிக
அறிவும், சமூக அறிவும், அனு
பவ அறிவும் அபாரம்.
டி.எஸ்.சேனநாயக்காவின்
ஆட்சிக் காலம் தொடக்கம்
மைத்திரி பால சிறிசேனவின்
ஆட்சிக் காலம் வரை நடை
பெற்ற அரசியல் மாற்றங்கள்
பெரும்பாலான தமிழ் மக்க
ளைக் காயப்படுத்தியே
வந்துள்ளன. தமிழ் மக்களும்
பல்வேறு வழிகள் மூலமாகப்
போராட்டம் நடத்தியும்
காயங்கள் மாற்றப்படவும்
இல்லை. ஆற்றப்படவும்
இல்லை. இந்த நிலையில் ஒன்று
சேர்ந்த கட்சிகள் பிரிவதற்கு
இடமளியாது, தமிழினம்
தனக்குள் ஒற்றுமையாகச்
செயற்பட ஒன்று சேர
வேண்டுமென இந்த மண் வரம்
கேட்கிறது. ஒவ்வொரு கட்சியும்
பெரிய அர்ப்பணிப்புக்களைச்
செய்து கொண்டு வருகின்றன.
பிரிவதும் பிரிக்க வைப்பதும்
மிகவும் இலகுவானதே. சேர
வைப்பதும் சேர்த்து வைப்பதும்
இலகுவான காரியமல்ல.
பல்கலைக்கழக
மாணவர்களின் குரல்
ஒலிக்கும்போது அதற்கென ஒரு
பெறுமதி நாட்டிலுண்டு.
அவர்களே நாளை ஆளவும்
போகிறார்கள். ஆதலால்
அவர்களோடு நாமும் ஒன்று
சேர்வது காலநியதியாகும்.
இவர்கள் அழைத்தபோது ஒரு
கூட்டுப் பொறுப்புநிகழ்ந்திருக்க
வாய்ப்பிருந்தது. ஆனால் அது
கைகூடவில்லை. இறைவனும்
தமிழினத்தை ஒன்றாக்க
விரும்பவில்லை என்று அவன்
மேல் பழியைப் போடாமல்
மனித பலம் மகத்தானது
என்பதற்காகவாவது
பிரிவதையோ உடைவதையோ
அங்கீகரிக்காது ஒன்றுபட
ஆவன புரிய வேண்டும். இதில்
கிறிஸ்தவ, இந்து ஆதீனங்கள்,
குருபீடங்கள், மூதவை,
பேரவை, வர்த்தக சங்கங்கள்
தத்தமது பொறுப்புக்களை
யுணர்ந்து தலையிட்டு ஒரே
குரலாக ஒலிக்கவும்
ஒரேயணியாக மிளிரவும்
ஆவன புரியுமாறு விநயமுடன்
கேட்டுக் கொள்கின்றேன்.

கே.எஸ்.சிவஞானராஜா.

'கஜேந்திர மோட்சம்'

விஸ்ணு பக்தியை மேம்பட உரைக்கும் அருளுரை

இரா. நிஷாந்தன்

காத்தல் தொழில் புரியும் கடவுளராக திருமால் விளங்குகின்றார். உலகில் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்காக யுகம் தோறும் அவதாரம் கொண்டு, தன் அடியவர்களை காத்தருள்கிறார். இத்தகைய ஸ்ரீமன் மகாவிஸ்ணு, கருணையின் திருவடிவம் உடையவராக தனை நாடி வருகின்ற பக்தர்கள் நலனை பாதுகாக்கின்றார்.

அவதாரச் சிறப்பு

அந்தவகையிலே, "மகாபாரதத்தில் கண்ணனாக பாஞ்சாலியின் பெண்மையைக் காத்தருளினான். தன் மீது தீராத பக்தியுடையவனாக விளங்கிய பிரகலாதனைக் காத்தருள நரசிம்ம அவதாரம் கொண்டு எழுந்தருளினார். துருவன் எனும் சிறுவனின் தவம் கண்டு அவனுக்கு காட்சி கொடுத்தருளினார்." என்ற கருத்தாடல்களை புராண இதிகாச கதைகளின் ஊடே அறிந்துகொள்ள முடிகிறது.

இவ்வாறே விஸ்ணு பகவான் தன் மீது தீராத பக்தி கொண்ட பக்த அடியவன் ஒருவரைக் காத்தருளிய காட்சி குறித்து இங்கு நோக்குவோம்.

கஜேந்திரன் எனும் யானை நீர்நிலையில் நீராடுதல்

கஜேந்திரன் எனும் பெயருடைய யானை தன் உறவினரான பல யானைகளுடன் தினமும் நீர் நிலைக்குச் சென்று நீராடி வருவதை வழக்கமாக கொண்டிருந்தது. விஸ்ணு மீது பக்திகொண்டு தினமும் பகவானுக்கு தாமரை மலர்களைச் சூடி வழிபாடு இயற்றியும் வந்தது. ஒரு நாள் வழக்கம் போலவே தான் நீராடச் செல்லும் நீர் நிலையை நாடிச் சென்றது. அங்கு நீண்ட நேரமாக நீரில் விளையாடிக் கொண்டிருந்தது.

முதலை நீர்நிலையில் இருந்து வெளிப்படுதல்

இந்தசந்தர்ப்பத்திலே நீர் நிலையில் இருந்து வெளிப்பட்ட முதலை ஒன்று கஜேந்திரனின் காலை பிடித்துக் கொண்டது. இங்கு அந்த முதலையும் சாபம் காரணமாக அத்தகு நிலையை அடைந்திருந்தமை நோக்குதற்குரியது. முதலையின் பிடியில் இருந்து தன் காலை விடுவித்துக் கொள்ள பலவாறாக முயற்சி செய்தது. ஆனாலும் முயற்சி பலன் தரவில்லை.

கஜேந்திரன் ' ஸ்ரீகிருஸ்ணரின் அருளை நாடுதல்

இவ்வாறு பல நாள்களாக முதலையின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள கஜேந்திரன் மேற் கொண்ட முயற்சிகள் தோல்வியிலேயே முடிவடைந்தன. தன் பலத்தினால் முதலையின் பிடியில் இருந்து விடுபட்டு தப்பிக்க முடியாது என்ற நிலையை உணர்ந்து கொண்டது. தன்னைக் காப்பாற்றக்கூடியவர் பகவான் ஸ்ரீ கிருஸ்ணனே என்பதை அறிந்தும் தெரிந்தும் கொண்டது. அதன்படியே தன் தும்பிக் கையை மேலே உயர்த்தியது. "ஆதி மூலமே சரணம்..! நாராயணா...! என்னைக் காப்பாற்றுவாயாக" என அலறியது.

ஸ்ரீ கிருஸ்ணர் கஜேந்திரனுக்கு மோட்சமளித்தல்

கஜேந்திரன் எழுப்பிய அவலக் குரல் வைகுண்டத்தில் வாசம் செய்யும் நாராயணனைச் சென்றடைந்தது. தன் பக்தனைக் காப்பற்ற திருவுளம் கனிந்தார். கருடன் மீது எழுந்தருளி அக்கணமே கஜேந்திரன் தத்தளித்திருந்த நீர் நிலையை நாடி வருகை தந்தார். தன் கையில் இருந்த சுதர்சனச் சக்கரத்தை ஏவி முதலையின் வாயைப் பிளந்து கஜேந்திரனைக் காப்பாற்றினார். உயிர்துறந்த முதலை கந்தர்வ வடிவம் பெற்று வானில் சென்று மறைந்தது. கஜேந்திரனும் தன் சாபம் நீங்கப்பெற்று பகவானின் கருணையால் மோட்சமடைந்து வைகுண்டத்தை சென்றடைந்தான். இத்தகு தன்மையின் சிறப்பை வெளிப்படுத்தும் விதமாகவே பகவான் ஸ்ரீ கிருஸ்ணன் கஜேந்திரனுக்கு அளித்த முக்திநிலையின் பேறு 'கஜேந்திர மோட்சம்' என்று அழைக்கப்படுகிறது.

இந்திரத்துய்மன் சாபம் பெறும் தன்மை

இங்கு கூறப்பட்ட கஜேந்திரன் எனும் நாமகரணமுடைய யானையானது முற்பிறவியில் 'இந்திரத்துய்மன்' எனும் பெயரோடு அரசனாக விளங்கியவன். விஸ்ணு பக்தனாக திகழ்ந்தான். ஒரு முறை அரசனான கஜேந்திரனை காண்பதற்கு துர்வாச முனிவர் வருகை தந்திருந்தார். அந்த சந்தர்ப்பத்திலே அரசனோ விஸ்ணுவை நினைந்தபடி ஆழ்ந்த தியானத்தில் இருந்தான். முனிவர் தன் இருப்பிடம் வந்திருப்பதை அறியாதிருந்தான். துர்வாச முனிவர் நீண்ட நேரம் காத்திருந்தார். ஆனால் அரசனோ தியானத்தில் இருந்து விழித்தெழாதிருந்தான். இந்தநிலையைக் கண்ணுற்று கடும் கோபமடைந்தார் துர்வாச முனிவர். தனை நாடி வந்துள்ளவரை அறியாது, வரவேற்று, உபசாரங்கள் செய்வதை விடுத்து கர்வ மனப்பாங்குடன் யானையைப் போல அசையாமல் கஜேந்திரன் இருந்தமையை கண்டு, யானையாக பிறவியெடுப்பாய் என மன்னனுக்கு சாபம் அளித்தார். பின் "பகவான் விஸ்ணுவின் வாயிலாக சாபவிமோசனம் பெறுவாய்" என்ற சாப விமோசன உபாயத்தையும் வெளிப்படுத்தி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார் துர்வாச முனிவர்.

கந்தர்வன் சாபம் பெறும் தன்மை

இது போலவே ஒரு முறை அகத்திய முனிவர் தன் சீடர்களுடன் ஓர் நீர் நிலையில் நீராடுவதற்காக சென்றிருந்தார். நீர் நிலையில் இறங்கி நீராடிக் கொண்டிருந்தபோது, கந்தர்வன் ஒருவன் விளையாட்டாக நீருக்கு அடியில் இருந்து அகத்தியரின் கால்களைப் பிடித்து இழுத்தான். இதனைக் கண்ட அகத்தியரும் முதலையைப் போல நடந்து கொண்டாய் என கந்தர்வனை விழித்தார். பின்பு "நீ முதலையாக மாறுவாய்" என சாபம் அளித்தார். கந்தர்வன் தான் செய்துகொண்ட தவறை உணர்ந்து கொண்டவனாக, தனக்கு சாபவிமோசனம் நல்குமாறு அகத்திய முனிவரிடம் வேண்டினான். அகத்தியரும் மனமிரங்கினார். "பகவான் விஸ்ணுவின் திவ்ய சக்கரத்தினால் விமோசனம் கிடைக்கும்" என மோட்ச உபாயத்தை வழங்கியருளினார்.

இவ்விதமாக இந்திரத்துய்மனும் கந்தர்வனும் யானையாகவும், முதலையாகவும் சாபம் பெற்று பிறவியெடுத்த கதையாடல் சிறப்புறுகிறது. இருவருக்கும் பகவான் நாராயணன் கருணை கொண்டு சாபவிமோசனம் கொடுத்தருளிய தன்மை மேன்மை பெறுகிறது. "ஸ்ரீமத் பாகவத" புராணத்தில் இந்தக் கதையாடல் சிறப்புற வெளிப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். இக் கதையை படிப்பவர்கள் அல்லது கேட்பவர்கள் பகவான் விஸ்ணுவின் அன்புக்குப் பாத்திரமானவர்களாக விளங்குவர் என்றும் பாகவத புராணம் குறிப்பிடுகிறது.

இறை அருளை நாடுவோம்

ஆக, இறைவன் மீது தீராத பக்தி கொண்டவர்களை அவர்கள் துன்பம் அடையும் வேளைகளில் எல்லாம் காத்து இரட்சிப்பார் என்ற உயரிய தத்துவம் இக்கதையூடு வெளிப்படுத்தப்படுகிறது. மனிதர்களாகிய எம் மீது அளவற்ற கருணையைப் பொழியும் திருவுள்ளம் கொண்டவன் இறைவன் என்பதையும் உணர்ந்துகொள்ள முடிகிறது. அவனிடத்தில் என்றும் நீக்கமற மாறாத பக்தியும், நம்பிக்கையும் கொண்டு அவன் அருளைப் பெறுவோமாக.

இறைவன் மீது தீராத பக்தி கொண்டவர்களை அவர்கள் துன்பம் அடையும் வேளைகளில் எல்லாம் காத்து இரட்சிப்பார் என்ற உயரிய தத்துவம் இக்கதையூடு வெளிப்படுத்தப்படுகிறது. மனிதர்களாகிய எம் மீது அளவற்ற கருணையைப் பொழியும் திருவுள்ளம் கொண்டவன் இறைவன் என்பதையும் உணர்ந்துகொள்ள முடிகிறது. அவனிடத்தில் என்றும் நீக்கமற மாறாத பக்தியும், நம்பிக்கையும் கொண்டு அவன் அருளைப் பெறுவோமாக.



மாறாத நினைவுகளுடன் மூன்றாண்டுகள்.....



அன்னை மடியில்
07 . 08 . 1943

ஆண்டவன் மடியில்
05 . 01 . 2015

அமரர் சிதம்பரப்பிள்ளை கனகசிங்கம்

ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் முகம் காணாது கதறுகின்றோம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மறவோம்

(ava 237) (13.7)

நொச்சிமோட்டை, ஓமந்தை.

மனைவி மலர்மாலை மற்றும் உறவினர்கள்.

காணி தேவை

வவுனியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் A9 வீதியில் 2 ஏக்கர் காணி தேவை.

தொடர்பு- 075 9360370

(CS 12559.16.17)

மணமகள் தேவை

யாழ் இந்து, கௌரவமான குடும்பம், 1978, குறுகிய காலத்தில் விவாகரத்து பெற்ற London PR உள்ள 7 இல் செவ்வாய், கிரக பாவம் 92, திருவாதிரை நட்சத்திரம், மிதுன இராசி, படித்த மணமகனுக்கு A/L படித்த மணமகள் தேவை, சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.(விவாகரத்தானவர்கள் வேண்டாம்.)

Gmail - nathansiva22@gmail.com
Viber :-0044744 036 6127

மணமக்கள் தேவை

ஐரோப்பியா, கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் மணமக்கள் உள்ளனர். படித்த ஆண் / பெண் மணமக்கள் தேவை

076 725 0144 - Viber
076 963 7237

(CS/12580(11))

வட மாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளில் ஒப்பந்த அடிப்படையிலான நியமனம்

13.10.2017 ஆம் திகதி வெளியிடப்பட்ட மேற்படி அறிவித்தலுக்கு மேலதிகமான அறிவித்தலொன்று வட மாகாண சுகாதார அமைச்சின் கீழ்வரும் வைத்தியசாலைகளில் நிலவும் பதவிகளுக்கான வெற்றிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன இதற்கமைவாக பின்வரும் பதவியணியினர் உடல் உள தகைமை உள்ளவர்கள் வயதெல்லை இன்றி விண்ணபிக்க முடியும் என்பதுடன் ஏனைய நிபந்தனைகள் வலுப்பெற்றிருக்கும் என்பதுடன் விண்ணப்பங்கள் 20.01.2018 ஆம் திகதிக்கு முன்னர் உரிய மாவட்டத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகள் மாவட்ட பொது வைத்தியசாலை களின் அவர்களினால் அறிவுறுத்தப்படும் ஆவணங்களுடன் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

1.வைத்தய நிபுணர்
2. வைத்திய / பதிவு வைத்திய உத்தியோகத்தர்கள்
3.துனை மருத்துவ சேவை / நிறைவு காண் மருத்துவ சேவை (Para Medical, PSM)

ஏனைய விவரங்கள் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் இடங் களில் அறிந்து கொள்ளமுடியும்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாணம்.

(c/5359)(8)

நினைவஞ்சலி

8 ஆம் ஆண்டு

அமரர் கணபதிப்பிள்ளை சபாரத்தினம்
மண்ணில் 03.05.1922
விண்ணில் 05.01.2010

43 ஆம் ஆண்டு

திருமதி கனகாம்பிகை சபாரத்தினம்
மண்ணில் 16.03.1927
விண்ணில் 22.12.1974

அன்பின் பப்பா! அம்மா!

ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் மறையாது
அன்பான உங்கள் பாசத்தின் நினைவுகள்!
கனிவான உங்கள் நேசத்தின் சிலிர்ப்புகள்!
நித்தமும் நினைக்கையில் விழிசிந்தும் துளிகளுடன்
இன்பத்திலும் துன்பத்திலும் உங்களைத் தேடுகின்றோம்!

(இல-5351) (13)

"திலக வாசம்"
தபாலக வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்
இல.5,கல்லடி வீதி, சாவகச்சேரி.

சாவகச்சேரி நகராட்சிமன்றம் 2018 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

01. கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி :-.11.01.2018 நண்பகல் 12.00 மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 18.01.2018 மு.ப. 10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி :- 18.01.2018 மு.ப. 11.00 மணி
04. குத்தகைக் காலம் :- 19.01.2018 தொடக்கம் 31.12.2018 வரை
05.கேள்வித் தொகையின் 2/3 பகுதியை செலுத்தி ஒப்பந்தம் செய்யவேண்டிய இறுதித்திகதி :- 24.01.2018

2018 ஆம் ஆண்டு கருவாட்டுக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை

இல	குத்தகை விவரம்	ஆகக்குறைந்த கேள்வித் தொகை (இதர வரிகள் தவிர)	கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது)	கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது)
01	கருவாட்டுக் கடை- இல-01	74,250.00	742.50	1,000.00
02	கருவாட்டுக் கடை- இல-02	74,250.00	742.50	1,000.00

குறிப்பு:- இந்நகராட்சிமன்றத்தின் கருவாட்டுக் கடைகளிலிருந்து 1Km சுற்று வட்டாரத்திற்குள் தனியார் எவரும் கருவாடு விற்பனை நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட மாட்டாது. கறுப்பப் பட்டியலில் உள்ளவர்கள் கேள்விகோரலில் பங்குபற்றமுடியாது. மேலதிகதகவல்களைஅலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

திரு.கா.சண்முகதாசன்,
செயலாளர்,
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.
04.01.2018

(IN/ 5345)(11)

விவசாய அமைச்சு கேள்வி அறிவித்தல்

வடமாகாண விவசாய நவீன மயமாக்கல் செயற்திட்ட அலுவலகத்துக்கு அலுவலக உபயோகத்துக்காக மாதாந்த வாடகை அடிப்படையில் வாகன சேவை மற்றும் அலுவலக கட்டடம் பெற்றுக்கொள்ளல்

வடக்கு மாகாண சபையின் விவசாய நவீன மயமாக்கல் செயற்திட்ட அலுவலகத்துக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வாகன சேவை மற்றும் அலுவலகக் கட்டடம் பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி அறிவித்தல் மாகாண பிரதி திட்ட பணிப்பாளர் அவர்களால் கோரப்படுகின்றது.

இவ்விரு கேள்வி ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 22.01.2018 ஆகும்.

இவ்விரு சேவைகளையும் தனித்தனியாக வழங்கவுள்ள வழங்குநர்கள் www.np.gov.lk → Notice → Tender/ Bid என்ற வடக்கு மாகாண சபையின் இணைய தளத்தில் மேலே குறிப்பிட்ட இரு சேவைகளுக்குமான வாடகை வாகனம் தொடர்பில் கேள்விப் படிவம் -1 இனையும், அலுவலகக் கட்டடம் தொடர்பில் கேள்விப் படிவம் -2 இனையும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து இரு சேவைகளுக்கும் தனத்தனியாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

மாகாண பிரதிதிட்டப் பணிப்பாளர்,
விவசாய நவீன மயமாக்கல் செயற்திட்டம்,
வடக்கு மாகாணம்.

(IN/5308)(11)

பேரவைச் செயலகம், வடக்குமாகாண சபை.

மதிய உணவு (Lunch),போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் (DrinkingBottle Water), காகிதாதிகள் (Stationery Items), சுத்திகரிப்புப் பொருள்கள் (Sanitary Items)மற்றும் பிரதியெடுக்கும் மை (Toners)விநியோகத்திற்கான கேள்விகோரல் - 2018

வடக்கு மாகாண பேரவைச் செயலக பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, மற்றும் தகைமை வாய்ந்த விநியோகஸ்தர்களிடம் இருந்து முத்திரை இடப்பட்ட பெறுகைகளை பின்வருமாறு கோருகின்றார்.

01. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விவரங் களையும் விலைக்கேள்விப் பத்திரங்களையும் 05.01.2018 தொடக்கம் 25.01.2018 வரை யான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணிதொடக்கம் பி.ப 3.00 மணி வரையான அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் (021-205 7081). பேரவைச் செயலகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

02. விலைக்கேள்விகள் 26.01.2018 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ இச் செயலகத்தில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைக்கேள்விகள் அனைத்தும் 26.01.2018 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்குத் திறக்கப்படும்.

03 **" மதியஉணவுவிநியோகம் 2018", " போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் விநியோ கம் 2018", "காகிதாதிகள், சுத்திகரிப்புப் பொருள்கள் விநியோகம் 2018", "பிரதி யெடுக்கும் மைவிநியோகம் 2018"** என்பவற்றில் பொருத்தமான விவரம் கடித உறை யின் இடதுபக்கமேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப் படாத விவரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

04 எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும் போது அனுமதிக்கப்படுவர்.

05 கிடைக்கப்பெற்றவிலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்குப் பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

க.தெய்வேந்திரம்.
தலைவர், பேரவைச் செயலகபெறுகைகள் குழு,
வடக்கு மாகாணசபை, A-9வீதி,
கைதடி,

(IN/ 5342)(11)

மரண அறிவித்தல்

கனகசபை இலங்கநாதன்

(ஓய்வுபெற்ற தெல்லிப்பழை, ப.நோ.கூ. சங்க கிளை முகாமையாளர்)

அன்னைமடியில் 17.04.1940 — இறைவன்அடியில் 04.01.2018

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் விழிசிட்டி, தெல்லிப்பழையை நிரந்தர வசிப்பிடமாகவும் சம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை இலங்கநாதன் நேற்று (04.01.2018) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - நல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான தியாகராஜா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயலட்சுமி (ஓய்வுபெற்ற பிரதம தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்திய சாலை) அன்புக் கணவரும் பரமநாதன் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், சோமசுந்தரம், வடிவுடையம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் குகநாதன் (லண்டன்), சுரேந்திரநாதன் (உதவி திட்டமிடல் பணிப்பாளர், விவசாய அமைச்சு, வடமாகாணம்), கஜேந்திரநாதன் (சிற்றூழியர், கொக்குவில் நாமகள் வித்தியாலயம்), மயூரநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் வர்ணரூபினி (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), ஜெயந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் லாவண்யன், ரஜெந்தன், சுலக் ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் மயூரகிரிநாதன் மஞ்சுளாதேவி (கொழும்பு), ரவீந்திரநாதன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாய்மாமனும் சகுந்தலாதேவி, காலஞ்சென்றவர்களான செல்வலக்சுமி, அன்னலக்சுமி, விமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஸ்ரீரங்கநாதன், காலஞ்சென்ற பகீரதநாதன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

103, சம்பியன் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்: மகன் - இ.சுரேந்திரநாதன்
077 484 0199

(12594/15)

வாடகைக்குண்டு

TaTa வடி வாகனம் நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.

T.P :- **076 660 1600**

அன்ரன் கட்டட ஒப்பந்தகாரர்

குறைந்த செலவில் அழகான வீடுகள், கட்டடங்கள் மற்றும் திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும்.

076 660 1600 (CS/12581(13))

அறிவித்தல்

18.12.2017 இல இருந்து எமது நிறுவனத்துக்கும் எமது நிறுவனத்தில் பணிபுரிந்த - **தவேந்திரன் ஜமுனா** (905793306V) என்பவருக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. அத்துடன் அவருடன் எந்தவித வியாபாரமும் செய்ய வேண்டாம். அவ்வாறு செய்தால் அதற்கு எமது ஸ்தாபனம் பொறுப்புக் கூறமாட்டாது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

All Ceylon Distributors
No.212 & 214, K.K.S.Road, Jaffna.
021 222 5542, 021 222 7983

(IN/35352(13))

பிறந்த நாள்

மலேசியாவில் இருந்தபோது தமிழ்த்தட்டச்சின் விசைப்பலகையை முதன்முதலாக வடிவமைத்துதட்டச்சை ஜோமனியில் உருவாக்கி மலேசியா, சிங்கப்பூர், தமிழ்நாடு, இலங்கை, பர்மா, பீஜித்தீவு, மொரிசியஸ்,தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் விநியோகித்த யாழ்ப்பாணம் சுண்டுக்குளியைச் சேர்ந்த

இராமலிங்கம் முத்தையா அவர்களின்

இரணைப்புதல்வியர் **திலகவதி - பத்மாவதி**

ஆகியோரின் பிறந்தநாள்.

ஆராதிப்பவர்கள்: யசோதினி Dr. கைலாசநாதன்
(ஆஸ்திரேலியா)
கா. மாணிக்கவாசகர்
(ஓய்வு நிலை நூலகர், யாழ். மத்திய கல்லூரி)

அன்பளிப்பு: விசாகப்பெருமாள் வசந்தன் (லண்டன்), வி. சந்திரகுமார் (நோர்வே).

(cs. 11932) (13)

177, முதாலம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்



ஐயம்பிள்ளை சிற்றம்பலம்

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் தண்ணீரூற்று, முள்ளிய வளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை சிற்றம்பலம் கடந்த (03.01.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளை மற்றும் தெய்வானைப்பிள்ளை, சண்முகம் (இளைப்பாறிய நில அளவை அத்தியட்சகர்), தங்கம்மா, கனகம்மா, தங்கமுத்து காலஞ்சென்ற தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் குகராசா, அரியமலர், பரஞ்சோதி, ஆனந்தராசா, செல்வமாணிக்கம் ஆகியோரின் மைத்துனரும் அனுசுயா (ஆசிரியர் - St. / John Bosco), அகலியா (முகாமைத்துவ உதவியாளர் - பருத்தித்துறை நகரசபை), இளங்கோவன் (ஊற்று Super Market Owner, தண்ணீரூற்று), ஆதிரை (அபிவிருத்தி உத்தியோகத்தர் - நல்லூர் பிரதேச செயலகம்), குமணன் (London), அகிலா (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயநாதன் (சிரேஷ்ட விரிவுரையாளர் - ATI, Jaffna), கிறிஷ்ணரூபன் (முகாமைத்துவ உதவியாளர் - வல்வெட்டித்துறை, நகரசபை), நர்மதா (ஆசிரியர் - முல்லைத்தீவு), கிறிஸ்ரி (Christy Enterprises), புவனேந்திரன் (Canada), சுதர்சினி (London) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 07.01.2018 ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக கற்பூரப்புல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

56, செருக்கப்புலம் ஒழுங்கை,
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
077 605 9586, 077 853 4381, 44 74 77 80770

"மாணிக்கபதி"
தண்ணீரூற்று மேற்கு, முள்ளியவளை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS12568/15/17)

பேசும் கலை

எந்த இடத்தில் எதைச் சொல்ல வேண்டும் என்பதில் உள்ள தெளிவு....!
எந்த இடத்தில் எதைச் சொல்லக் கூடாது என்பதில் இருக்க வேண்டும்...!

தெளிவாக/ புரியும்படி
சுருக்கமாக
தேவைப்படும் நேரங்களில் விளக்கமாக
தேவையான நேரத்தில்
வேறு சில சமயங்களில் கொஞ்சம் பொறுத்து
கவனமாக சொற்களால் சுடாமல்...

எனப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு விதமாகப் பேச வேண்டும்.

வேலைக்காரனுக்கு கொடுப்பதால் சம்பளம்
கடவுளுக்குக் கொடுப்பதால் காணிக்கை
தேவைக்குக் கொடுப்பதால் கடன்
கடனுக்காகக் கொடுப்பதால் வட்டி
செயலுக்காக கள்ளமாகக் கொடுப்பதால் லஞ்சம்
சில்லறையாகக் கொடுப்பதால் பிச்சை
பெரிதாகக் கொடுப்பதால் தானம்

பண்த்தால் மட்டுமே இவை போன்ற பற்பல வேடங்களில் நடிக்க முடியும்....

2.0 முன்னோட்டக் காணொலியை நாளை வெளியிட முடிவு

சங்கரின் இயக்கத்தில் ரஜினியின் நடிப்பில் உருவாகியுள்ள படமான 2.0 படத்தின் முன்னோட்டக் காணொலி நாளை வெளியிடப்படும் என்று படக்குழு அறிவித்துள்ளது.

'கபாலி' படத்தின் வெற்றிக்குப் பிறகு ரஜினி காந்த் நடித்துள்ள படம் '2.0'. 'எந்திரன்' படத்தின் இரண்டாம் பாகமான '2.0'வை சங்கர் இயக்கியுள்ளார். ரஜினிக்கு ஜோடியாக எமி ஜக்சன் நடித்துள்ளார். ஏ.ஆர். ரகுமான் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தின் முன்னோட்டக் காணொலி மலேசியாவில் நாளை வெளியிடப்படும் என்று படக்குழு அறிவித்துள்ளது.



எல்லா விடயத்துக்கும்
'விடாமுயற்சி' தேவை.

ஆனா சிகரெட்டுக்கும்
மதுவுக்கும் தான்
'விடும் முயற்சி' தேவை.

ஒரு கொட்டாவியால் ஐம்பது பேருக்கு சாவுப் பயத்தை உண்டாக்க..

பஸ் டிரைவரால் மட்டுமே முடியும்.

ருவிற்றர்

twitter.com/pcshubha

உண்ணும்போது
உறைத்தாலும், பிறகு
உடலுக்கு நன்மை தரும்
மிளகைப் போலத்தான்
அப்பாவின் அறிவுரைகளும்.

சுடோக்கு

எண் விளையாட்டு

	8	1		9				
9						3	8	
	4			8				9
		5	2					8
	9		7	5	4		2	
1					8	4		
6				3			5	
		9						
				7		8	3	

நேற்றைய விடை

5	3	6	7	1	2	8	9	4
9	1	7	5	4	8	2	3	6
2	4	8	3	6	9	1	5	7
3	5	9	1	8	4	6	7	2
4	8	2	6	5	7	9	1	3
6	7	1	2	9	3	4	8	5
1	2	3	9	7	6	5	4	8
8	6	5	4	3	1	7	2	9
7	9	4	8	2	5	3	6	1

மீண்டும்
புது வருடத்துக்கு...

வருடங்கள்
உருண்டோடின
நாள்கள்
புதுமையாக
வருகை
தருகின்றன!!
எண்ணங்கள்
புதுப்பிக்க
பழையவைகள்
மறக்கடிப்படுகின்றன!!
மனிதர்கள்
மாறி கொண்டே
இருக்க
அனுபவங்கள்
மனதில் பதிந்துவிட்டு
செல்கின்றன!!
உணவும்
ஆடைகளும்
ஆண்டாண்டு
எம்முடன்
இதயத்தை
தொட்ட
வலிகளால்
மனங்கள்
மட்டுமே
பல மாற்றங்கள்
பதித்து விட்டு
கடந்து விடுகிறது.
புதுமைக்காக
மீண்டும்
புது வருடத்துக்காக
காத்து
இருக்கின்றது!!

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

மேடம்: எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் செழிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும். லாபம் சீராக இருக்கும்.

இடபம்: பெருமித உணர்வுடன் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அபரிமிதமான வளர்ச்சி பெறும்.

மிதுனம்: பணிகள் நிறைவேற கூடுதல் உழைப்பு தேவை. தொழிலில் உருவாகிற இடையூறை நண்பரின் உதவியால் சரிசெய்வீர்கள். வருமானம் ஓரளவு கிடைக்கும்.

கடகம்: நண்பரால் உதவி எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். தாராள பணவரவு வரும். பணியாளர்களுக்கு பணிச்சுமை குறையும்.

சிங்கம்: உங்களிடம் உதவி பெற்றவர் நன்றி மறந்து செயல்படுவார். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும்.

கன்னி: உங்கள் வாழ்வில் கூடுதல் வளம் பெற புதிய வழி பிறக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை திருப்திகரமான அளவில் இருக்கும். உபரி பணவரவு கிடைக்கும்.

துலாம்: நண்பரிடம் மனம் விட்டு பேசுவீர்கள். மனதில் பெருமிதமும் எதிர்கால வாழ்வில் நம்பிக்கையும் ஏற்படும். ஆதாயம் அதிகரிக்கும்.

விருச்சிகம்: வீண்பேச்சு பேசுபவரிடம் விலகியிருப்பது நல்லது. தொழிலில் இடையூறு சரி செய்வதால் உற்பத்தி விற்பனை சீராக இருக்கும். சிறு அளவில் கடன் பெறுவீர்கள்.

தனுசு: மனதில் ஒருமுகத் தன்மையுடன் பணிபுரிவது அவசியம். சக தொழில் சார்ந்தவரிடம் தேவையற்ற விவாதம் பேசக் கூடாது. மிதமான பணவரவு கிடைக்கும்.

மகரம்: இஷ்ட தெய்வ அனுகிரகம் நன்மைகளைத் தரும். கடந்த காலத்தில் அவமதித்து பேசியவர் அன்பு பாராட்டுவர். தொழிலில் உருவான தாமத நிலை மாறும்.

கும்பம்: உங்கள் மனதில் அன்பு அதிகரிக்கும். உறவினருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில் வியாபாரம் சிறப்பான முறையில் இருக்கும்.

மீனம்: மற்றவர் குறைகளை பொருட்படுத்த வேண்டாம். கூடுதல் உழைப்பால் தொழில் வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். குடும்பத் தேவைக்கான செலவு அதிகரிக்கும்.

சோம்பியிருத்தல்

ஓய்வு எல்லோருக்கும் தேவையானதே. நாள் முழுவதும் வியர்வை சிந்த உழைக்கும் தொழிலாளிக்கும் மூளையை உபயோகித்துச் செயற்படும் புத்தி ஜீவிகளுக்கும் வீட்டு வேலை செய்யும் பெண்களுக்கும் சகல தொழிலாளர்களுக்கும் ஓய்வு தேவையானதே. ஓய்வுக்கும் வேலை ஒன்று செய்யாது சோம்பி இருப்பதற்கும் அனேக வேறுபாடுகளுண்டு.

இந்த உலகில் நேரமானது ஒரு விலை மதிப்பற்ற பொருளாகும். ஒரு நிமிடந்தானும் வீணாகி விடக் கூடாது. ஒன்றும் செய்யாதிருத்தல், சோம்பியிருத்தல் என்ற இரண்டுக்குமுள்ள முரண்பாடுகளை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். கூடுதலான ஓய்வென்பதை அனேகமாக வேலை மாற்றங்களினால் அடையக் கூடுமேயன்றி ஒரு வேலையும் செய்யாமல் சும்மா இருபதனாலன்று சோம்பியிருப்பதென்பது ஓய்வாயிருப்பதற்கு சொல்லப்படும் சமாதானமாகாது.

சிலர் உட்கார்ந்து சிந்திப்பார்கள். வேறு சிலர் சிந்தனை இன்றி சும்மா உட்கார்ந்திருப்பார்கள். தினந்தோறும் மனித இயந்திரம் ஆக்க பூர்வமான சக்தியை உண்டு பண்ணிக்கொண்டேயிருக்கும். இந்த சக்தியை உபயோகப்படுத்தாவிடில் நோய்கள் வந்தடையும். உடல் உழைப்பாளிக்குத் தகுந்த ஓய்வு மூளைக்கு வேலை கொடுப்பதாகும். உதாரணமாக பத்திரிகைகளைப் படிக்கலாம். நூல்களை வாசிக்கலாம். தினசரி மூளையைப் பிரயோகித்து வேலை செய்பவருக்கு உண்மையான ஓய்வு தோட்ட வேலை, தச்சுவேலை முதலான வேலைகளைச் செய்வதால் கிடைத்து விடுகிறது. எல்லோருமே தகுந்த சமயங்களில் சுமார் அரை மணி நேரம் இளைப்பாறி ஒய்வெடுப்பது நல்லது. ஆனால் அப்படி எடுக்கும் ஓய்வுக்கு நாளடைவில் அடிமையாகிவிடக்கூடாது உடல் தளர்ச்சிக்கு ஓய்வு தேவை என்பது கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும். கிடைக்கும் ஓய்வு நேரங்களைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்த வேண்டும். மகிழ்ச்சியோடு இருப்பவர்கள் தங்களுக்குள்ளேயிருந்து வெளிப்படும் நரம்பு சக்தியை நல்ல வழியில் பிரயோசனப்படத்தக்க முறையில் பயன்படுத்த வேண்டும். முற்றாக சோம்பியிருப்பதை மருந்துக்கு ஒப்பிடலாம் நல்ல ஆரோக்கியமான திடகாத்திரமான மக்களுக்கு அந்த மருந்து தேவைப்படாது.

எமது உடல் உறுப்புக்கள்

கண்களால் காட்சிகளைப் பார்க்கிறோம்.

காதுகளால் ஒலியைக் கேட்கிறோம்.

மூக்கினால் மணத்தை முகர்கிறோம்.

நாக்கால் சுவைகளை அறிகிறோம்.

வாயால் வார்த்தை பேசுகிறோம்.

பற்களால் உணவை மெல்லுகிறோம்.

கையால் மக்ஷ ஷ செய்கின்றோம்.

விரல்களால் எழுத்தை எழுதுகின்றோம்.

காலால் நடந்து செல்கிறோம்.

நாம் கடைபிடிக்க வேண்டியவை

1. ஒரு நாளில் ஒரு முறையாவது வாய் விட்டுச் சிரியுங்கள்.
2. நாள் ஒன்றுக்கு 8 குவளை நீர் அருந்துங்கள்.
3. விரும்பும் நல்ல புத்தகங்களைப் படியுங்கள்.
4. செய்ய நினைத்த நல்ல காரியத்தைத் தாமதியாது செய்யுங்கள்.
5. உடற்பயிற்சியை மேற்கொள்ளுங்கள்
6. பழைய நண்பர்களைச் சந்தியுங்கள்.
7. மனதில் உள்ள நல்லது கெட்டதுகளை நல்ல நண்பர்களிடம் பகிருங்கள்.
8. தினம் ஒரு விடயத்தை புதிதாய் அறிய முயலுங்கள்.
9. காய்கறி, பழங்களைத் தினமும் உண்ணுங்கள்.
10. பொறாமை, பேராசை, கோபம் விலக்குங்கள்.
11. பிறரிடம் நல்லதையே நோக்குங்கள்.
12. கடந்த காலத்தின் பாடம் உணருங்கள்.
13. நிகழ்காலங்களைப் பயன்படுத்துங்கள்.
14. எதிர்காலம் பற்றிச் சிந்தியுங்கள்.
15. இன்முகத்தோடு பழகுங்கள்.
16. பிறரை மனதாரப் பாராட்டி ஊக்குவியுங்கள்.
17. பிழைகளை மன்னித்து விடுங்கள்.
18. சிறு சிறு தோல்விகளை ஏற்றுக்கொள்ளுங்கள்.
19. எப்போதும் வெற்றி சாத்தியம் அல்ல என்பதை உணருங்கள்.
20. நல்ல நண்பர்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.
21. வெற்றி பணம், பொருள் பேணுங்கள்.
22. மகிழ்ச்சி மனதைப் பெறுத்தது என உணருங்கள்.
23. தீதும் நன்றும் பிறரால் வருவதல்ல என்றிருங்கள்.
24. அனைத்தையும் துணிவாக எதிர்கொள்ளுங்கள்.
25. எல்லாம் நன்மைக்கே என்றிருங்கள்.

நான் விரும்பும்தொழில்

- நாம் ஒவ்வொருவரும் ஏதாவதொரு தொழிலைச் செய்யவேண்டும்.
- தொழில் செய்வதால் எமக்கு வருமானம் கிடைக்கிறது. வருமானம் கிடைத்தால் எமது வயிற்றுக்கு சோறு கிடைக்கும்.
- வயிற்றுக்குச் சோறு கிடைத்தால் வாழ்க்கை இனிக்கிறது.
- வாழ்க்கை இனித்தால் பிறருக்கு உதவ மனம் வருகிறது.
- நாம் பிறருக்கு உதவக் கூடிய தொழிலைச் செய்வது சிறந்தது.
- தொழில்கள் யாவுமே சிறந்தவைதான்.
- ஆசிரியர் வாழ்க்கைக்கு வழிகாட்டுபவர்
- மருத்துவர் நோய்களில் இருந்து உயிர்களைக் காப்பவர்.
- இவ்வாறான தொழிலைகளைச் சேவை எனக் கூறுவார்கள்.
- நான் விரும்பும் தொழில் ஆசிரிய சேவைதான்.
- ஆசிரியர் மாணவர்களின் அக விழியைத் திறப்பவர்.
- சிந்தனையைத் தூண்டுபவர் ஆசிரியர்
- நற்பழக்க வழக்கங்களைச் சொல்லித் தருபவர்.
- வையத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுபவர்.
- குரு இல்லாத வித்தை பரிழ் என்பார்கள்.
- எழுத்தறிவித்தவனை இறைவன் என்பார்கள.
- அறிவைப் புகட்டி அன்பைப் பெருக்கும் ஆசிரிய சேவையையே நான் பெரிதும் விரும்புகிறேன்.

தாயின் தவறு

(கதைப்பாட்டு)

பள்ளி தன்னில் நண்பனின்
பாட புத்தகத்தினை
கள்ளத் தளமாய் எடுத்துமே
கறுப்பன் வீடு வந்தனன்

திருடி வந்த பையனைத்
திருத்தும் நோக்கம் இன்றியே
பெருமை கொள்ளலாயினள்
பெற்ற தாயும் மகிழ்வுடன்

எடுத்து வந்தான் மறுமுறை
இன்னும் ஒருவன் போர்வையை
தடுத்துத் திருத்திடாமலே
தாயார் என்றும் மெச்சின்ள்

திரும்பத் திரும்பக் கறுப்பனும்
திருடித் திருடி மெத்தவும்
பெரிய திருடன் ஆயினன்
பெயரைக் கேட்டே நடுங்கினர்

கொள்ளைக்காரக் கறுப்பனால்
கொடுமை பெருகலானது
கள்ளன் அவனைத் தேடியே
காவல் துறையார் பிடித்தனர்

பிடித்த அவனைத் தூக்கிலே
போட முடிவு செய்தனர்
துடித்து அன்னை அலறினள்
துக்கச் செய்தி கேட்டதும்

தூக்குப்போடும் தினத்திலே
சூழ்ந்து மக்கள் கூடினர்
ஏக்கம் கொண்ட தாயுமே
இதயம் துடிக்க வந்தனள்

அன்னையோடு பேசவே
ஐந்து நிமிடம் வேண்டுமே
என்று கறுப்பன் கெஞ்சவே
இசைந்தார் அங்கே உள்ளவர்

கறுப்பன் தாயை நெருங்கினான்
காதைக் கடித்து விட்டனன்
அறுந்த காதுத் தாயிடம்
அவன் உரைக்க லாயினன்

சின்னஞ் சிறு வயதிலே
திருடி வந்தேன் புத்தகம்
என்னை அன்று போற்றினாய்
இடித்துத் திருத்தவில்லை நீ

கெட்டது எனது செய்கையைக்
கேட்டாய் இந்தக் காதினால்
தட்டிச் சொல்ல வில்லை நீ
தவறைத் திருத்த வில்லை நீ

திருட்டுத் தொழிலை என்னுடன்
சேர்ந்து வளர விட்டதால்
அருமை மானம் போனதே
ஐயோ சாகப் போகிறேன்

புள்ளிகளை இணைத்து படத்தை முழுமை செய்வோம்



2018 புத்தாண்டு பலன்கள்

2017 முடிந்து 2018 பிறந்துள்ளது. இந்தாண்டு ஒவ்வொரு ராசிக்காரர்களுக்குமான பலன்கள் பற்றியும் பரிகாரத் தலங்கள் பற்றியும் விரிவாகப் பார்ப்போம்.

நீதி நியாயத்துக்குக் குரல் கொடுப்பவர்களே!

உங்கள் ராசிக்கு 10இல் சந்திரன் இருக்கும்போது புத்தாண்டு பிறக்கிறது. உங்களின் நிர்வாகத் திறன், ஆளுமைத் திறன் அதிகரிக்கும். இது வரை நீங்கள் உழைத்த உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடக்கும். புது பதவி, பொறுப்புகள் தேடி வரும்.

பார்வைப் பலன்கள்

உங்கள் யோகாதிபதியான செவ்வாய் 3இல் வலுவுடன் இருக்கும்போது புத்தாண்டு பிறப்பதால், சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பாதியில் நின்ற வேலைகள் ஒவ்வொன்றாக முடியும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். சொத்து வாங்க விரும்புவீர்கள். பூமி தொடர்பான பிரச்சினை முடிவுக்கு வரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தாயின் உடல்நலம் சீராகும். தாய்வழி உறவினர்களுடன் இருந்து வந்த மோதல்கள் விலகும்.

உங்கள் ராசிநாதன் சூரியன் சனியுடன் சேர்ந்திருக்கும்போது புத்தாண்டு பிறப்பதால், அரச காரியங்கள் தாமதமாகி முடியும். பிள்ளைகளிடம் உங்கள் எண்ணங்களைத் திணிக்க வேண்டாம்.

புத்தாண்டின் தொடக்கம் முதல் 2.10.2018 வரை உங்களின் பூர்வ புண்ணியாதிபதியும் அஷ்டமாதிபதியுமான குருபகவான் 3ஆம் வீட்டில் மறைந்திருப்பதால், புதிய முயற்சிகள் தாமதமாக முடியும். ஒரே நேரத்தில் பலவேலைகளைப் பார்க்க வேண்டிய சூழ்நிலையும் உருவாகும். எதிர்மறை எண்ணங்களுடன் பேசுபவர்களின் நட்பை விலக்குவது நல்லது. ஆனால், 14.2.2018 முதல் 10.4.2018 வரை விசாக நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் அதிசார வக்கிரத்திலும் மற்றும் 3.10.2018 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்கு 4ஆம் வீட்டில் அமர்வதால் இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவடையும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும். சொத்துக்கள் வாங்கும்போது தாய்ப் பத்திரத்தை சரிபார்த்து வாங்குவது நல்லது. சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும் என்பதால் வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கையாகச் செல்லவும்.

புத்தாண்டு பிறக்கும்போது சுக்கிரனும் புதனும் சாதகமாக இருப்பதால், சாதுர்யமாகப் பேசி காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். பிரபலங்களின் பட்டியலில் இடம் பிடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

வருடம் முடியும் வரை சனி பகவான் 5இல் இருப்பதால், முடிவு எடுப்பதில் குழப்பம் ஏற்படக்கூடும். பிள்ளைகள் பிடிவாதப் போக்கை பக்குவமாகப் பேசி மாற்றப் பார்க்கவும். மகளின் திருமணத்துக்காக கடன் வாங்க வேண்டி வரும். மகனின் உயர்கல்வி, உத்தியோகம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் தாமதமாக முடியும். பூர்வீகச் சொத்துகள் விடயத்தில் கூடுதல் கவனம் தேவை. கணவன் மனைவிக்குள் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், அனுசரித்துச் செல்வது நல்லது.

வாழ்க்கைத்துணைக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படக்கூடும். சொத்துப் பிரச்சினைகளை சுமுகமாகப் பேசித் தீர்த்துக்கொள்வது அவசியம்.

1.1.2018 முதல் 13.1.2018 வரை சூரியனுடன், சனி சேர்ந்திருப்பதால், செலவுகள் அதிகரிக்கும். வேலைச் சுமை அதிகரித்து சோர்வடையச் செய்யும்.

10.3.2018 முதல் 2.5.2018 வரை செவ்வாயும், சனியும் சேர்ந்திருப்பதால் தாயாரின் உடல் நிலை பாதிக்கும். தாய்வழி உறவினர்களுடன் மனத்தாங்கல் வரும். உங்கள் மீது சிலர் வீண்பழி சுமத்துவார்கள்.

3.5.2018 முதல் 30.10.2018 வரை செவ்வாயும், கேதுவும் சேர்ந்திருப்பதால் வி.ஐ.பி. களுக்கு நெருக்கமாவீர்கள். ஏமாற்றுக்காரர்களை இனம் கண்டு ஒதுக்குவீர்கள். அயல்நாட்டில் இருப்பவர்களால் ஆதாயம் உண்டு.

14.1.2018 முதல் 7.2.2018 வரை சுக்கிரன் 6இல் மறைவதால் சிறு சிறு விபத்துகள் வந்து போகும். மற்றவர்களுடன் பழகும்போது பக்குவமாகப் பழகுவது நல்லது. கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

ஆண்டு முழுவதும் கேது 6இல் இருப்பதால், லட்சியத்தை நோக்கி முன்னேறுவீர்கள். தாழ்வு மனப்பான்மை விலகும். தன்னம்பிக்கை துளிர்க்கும். புறநகர்ப் பகுதியில் வீடு அல்லது மனை வாங்கும் யோகம் உண்டாகும். வெளிநாடு மற்றும் வெளி மாநிலத்தில் இருக்கும் நண்பர்களால் திடீர் திருப்பம் உண்டாகும். பழைய கடன்களை வட்டியுடன் தந்து முடிப்பீர்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். அரசு காரியங்கள் நல்லவிதத்தில் முடியும். ஆனால், ராகு 12இல் தொடர்வதால், சுபச் செலவுகள் அதிகரிக்கும். மற்றவர்களுக்கு ஜாமீன் கொடுக்காதீர்கள். கனவுத் தொல்லையால் தூக்கம் குறையும். திடீர்ப் பயணங்கள் அதிகரிக்கும். சில வேலைகளை அலைந்து திரிந்துதான் முடிக்கவேண்டி இருக்கும். புண்ணியத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். தொலைந்து போன ஆவணம் ஒன்று திரும்பக் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு: போட்டிகளைச் சமாளித்து முன்னேறுவீர்கள். நவீன விளம்பர யுக்திகளைக் கையாண்டு விற்பனையைப் பெருக்குவீர்கள். கூடுதல் இலாபம் கிடைக்கும். வாடிக்கையாளர்களின் ரசனைக்கேற்ப பொருள்களைக் கொள்முதல் செய்வீர்கள்.

உத்தியோகத்தர்களுக்கு: உங்களைப் பற்றி அவதூறான விமர்சனங்கள் வரக்கூடும். உங்களுக்கு நெருக்கமாக இருந்த உயர் அதிகாரி மாற்றப்படுவார். புது அதிகாரியால் சில நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும்.

மாணவர்களுக்கு: படிப்பில் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. ஆசிரியர்கள் பக்கபலமாக இருப்பார்கள். உங்கள் தனித் திறமைகளை வெளிப்படுத்த முயற்சி செய்யுங்கள். விரும்பிய பாடப் பிரிவில் சேருவதற்கு சிலரின் சிபாரிசு தேவைப்படும்.

வரலாற்றில் இன்றைய தினம்
05.01.2018

1970 - சீனாவின் யுனான் மாகாணத்தில் 7.1 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து 10 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

1993 - கிளாலிப் படுகொலை தொடர்பில் விசாரணைக்குழு அமைக்க அப்போதைய அரச தலைவர் பிரேமதாஸவிடம் கோரிக்கை.

1994 - தாவடி சாவகச்சேரியில் புக்காரா தாக்குதல் 6 பேர் சாவு.

2000 - நோர்வேயில் ரயில்கள் நேருக்குநேர் மோதுண்டு விபத்து. 33 பேர் சாவு.

2009 - காசாவுக்குள் இஸ்ரேல் படைகளுக்கும் ஹமாஸ் அமைப்புக்கும் இடையே கடும் மோதல். 70 பேர் சாவு.



2000 - தமிழ் அரசியல் பிரமுகர் குமார் பொன்னம் பலம் கொழும்பில் சுட்டுக் கொல்லப் பட்டார்.

இஸ்லாம் சொல்லும் புன்சிரிப்பு

மனமகிழ்ச்சியின் மறுஅடையாளம் தான் எமது புன்சிரிப்பு. எப்போதுமே நாம் 'உர்' என்ற முகத்துடன் இருப்பதை எவர்தான் விரும்புவார்.? இதனால்தான் 'மலர்ந்த முகத்துடன் ஒருவரை நீங்கள் வரவேற்பது தர்மச் செயல்' என்று கூறுகிறது இஸ்லாம். எமது சிரிப்புகளில் ஆனந்தச் சிரிப்பு, ஆணவச் சிரிப்பு, அகங்காரச் சிரிப்பு, அநியாயச் சிரிப்பு, அட்டகாசச் சிரிப்பு, ஏளனச் சிரிப்பு, எகத்தாளச் சிரிப்பு, ஏமாளிச் சிரிப்பு, ஏமாற்றுச் சிரிப்பு, வஞ்சகச் சிரிப்பு, வைராக்கியச் சிரிப்பு என ஏகப்பட்ட வகைகள் உள்ளன. அத்தனையிலும் இந்த மென்சிரிப்பானபுன்சிரிப்புக்கு ஈடுஇணை எதுவுமில்லை.

இந்தப் பேருலகை ஆண்டஅரசர்களில், பேரறிவாளரான சுலைமான் நபியும் ஒருவர். ஒருமுறை அவர்தமதுபடைகளுடன்சென்றுகொண்டிருந்த போது, பாதையின் குறுக்கே ராணி எறும்பு பேசியதைக் குறித்துதிருக்குர்ஆன் கூறுகிறது இப்படி:

"இறுதியாக, எறும்புகள்நிறைந்தஇடத்திற்குஅவர்கள் வந்த போது ஓர் எறும்பு (மற்ற எறும்புகளை நோக்கி:) 'எறும்புகளே, நீங்கள் உங்கள் புற்றுகளுக்குள்நுழைந்துகொள்ளுங்கள்; சுலைமானும்அவருடைய படைகளும், அவர்கள் அறியாதிருக்கும்நிலையில்உங்களைநசுக்கிவிடாதிருக்கும்பொருட்டு(அவ்வாறுசெய்யுங்கள்)' என்று கூறிற்று. அப்போது அதன் சொல்லைக் கேட்டு, அவர் புன்னகை கொண்டு சிரித்தார். இன்னும், 'என்இறைவா! நீஎன்மீதும், என்பெற்றோர்மீதும் புரிந்துள்ள உன் அருட்கொடைகளுக்காக, நான் நன்றி செலுத்தவும், நீ பொருந்திக் கொள்ளும் விதத்தில் நான் நன்மைகள் செய்யவும், எனக்கு அருள்புரிவாயாக! இன்னும் உம் கிருபையைக் கொண்டு என்னை உன்னுடைய நல்லடியார்களில் சேர்த்தருள்வாயாக' என்று பிரார்த்தித்தார்'. (27:18,19) எறும்புகள் முன்னெச்சரிக்கை விடுத்ததை செவியுற்ற சுலைமான் நபி புன்னகைத்துச் சிரித்தார் என்றும், அந்நேரத்தில் நல்லதொரு பிரார்த்தனை ஒன்றையும் செவ்வனே செய்துகொண்டார் என்றும் குர்ஆன் கோடிட்டுக்காட்டிச் செல்கிறது.

எனவே, புன்முறுவல் என்பது எவருக்கும் விதிவிலக்கான ஒன்றல்ல. எந்தவொரு அற்புதங்களை காணும் போதும், அந்த இறைவனின் அற்புதப் படைப்புகளை அதன் ஆற்றல்களைக் கண்டுசற்று பிரமிக்கும்வேளையில்கொஞ்சம்புன்முறுவலை அங்கே சிந்தித்துச் சிந்துவதும் வரவேற்கத்தக்கதே. கூடவே மனமகிழ்ச்சியுடன் உள்ள அந்த ஒரு நல்ல நேரத்தை பெரும்வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு இறைவனிடத்தில்பிரார்த்தனையும்செய்துகொள்ளவும்வேண்டும். இறுக்கமான வறுவல் முகத்தை எமது புன்முறுவல் சிரிப்புத்தான் மென்மைப் படுத்தியும், மேன்மைப் படுத்தியும் வைக்கும் என்றால் அது மிகையல்ல.

நாளை
06.01.2018
சனிக்கிழமை

மார்கழி 22

திதி: பஞ்சமி மு.இ. 11.34 வரை
நட்சத்திரம்: மகம் மு.ப. 08.10 வரை
சுபநேரம்: 03.31–05.01 வரை
ராகுகாலம்: 09.31–11.01 வரை

விளம்பரம் தொடர்புகளுக்கு

advt@uthayan.com,

021 493 1111

SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் ▸ 750

சீட்டிழுப்பு திகதி ▸04.01.2018 வியாழக்கிழமை

B 33 42 58 71

அடுத்த சுப்பர் ஜக்பொட்

ரூ. 51,067, 420/-

தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

2018.01.06 ம் திகதி சனிக் கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 1430

சீட்டிழுப்பு திகதி 2018.01.04

வெற்றி இலக்கங்கள் 27 45 49 55 S

அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 14,601,600/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது தரித் அழைப்பு - 0114 824 824, 0112 333 778

2018.01.06 ம் திகதி சனிக் கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 127
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2018.01.04

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,670,090/-

வெற்றி இலக்கங்கள் 05 08 40 67 அடுத்த வாரம் A

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது தரித் அழைப்பு - 0114 824 824, 0112 333 778

கவர்தன வாசனாவ

Development Fortune

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் ▸ 106

சீட்டிழுப்பு திகதி ▸04.01.2018 வியாழக்கிழமை

வெற்றி இலக்கங்கள் 02 14 43 51 கப்பர் இலக்கம் 04 அதிர்ஷ்ட மாதம் ஜூன்

அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 7,815, 428/=

அடுத்த கப்பர் ஜக்பொட் ரூ. 2, 868, 029/=

அடுத்த ஜக்பொட் ரூ. 2, 265, 164/=

2018.01.06 ம் திகதி சனிக் கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 5464-67 தரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

கார் ஏல விற்பனைமுறையில்

05.01.2018 அன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஏலவிற்பனை முறையில் விற்கப்படும்.

தொடர்பு- 075 9360370

(CS 12560,16,17)

வேலை வாய்ப்பு

அசைவ உணவகம் ஒன்றுக்கு தங்கி நின்று பணி புரியக் கூடிய வேலை ஆள்கள் உடன் தேவை. உணவு பரிமாறுபவர்கள், சமயல் உதவியாளர் கள் முன்அனுபவம் விரும்பத்தக்கது.

தொடர்பு

077 270 9658

(CS 12595.16.)

திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்

ஆங்கில ஆசிரியர் தேவை
தகைமையுடையோர் விண்ணப்பிக்கவும்
சம்பளம் ரூபா 13500 இற்கு மேல்
நேர்முகதெரிவு :07.01.2018 ஞாயிறு
9.00 மணி

தொடர்பு:
0212216933
077 656 5258
077 386 7458

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி
(150 m திருநெல்வேலி சந்தி)

(CS 12599.16.)

சாரதி தேவை

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவ முள்ள, திறமையான நன்னடத்தை கொண்ட கொக்குவிலுக்கு அண்மையில் வசிக்கும் சாரதி தேவை. T.P:-076 316 5730 077 592 5371

(CS 12586.16.)

வேலையாள் தேவை

யாழ்.நகரிலுள்ள பிரபல உணவகத்திற்கு உதவியாள்கள் Kitchen helpers,Delivery boys,உணவு பரிமாறுபவர்கள் தேவை. பகுதிநேரமாகவோ, முழுமையாகவோ வேலைசெய்யும் வசதிஉண்டு.

T.P:- 077 201 7824

(CS 12591,16.)

வீடு வாடகைக்கு

யாழ். நகரில் கச்சேரிக்கு மிகஅருகில் ஐந்து (5) அறைகள் பெரியமேல் மாடிவீடு. நாள் ,கிழமை,மாத அடிப்படையில்வாடகைக்கு விடப்படும் .(Rooms & A/C Rooms for Rent) அறைகளும் வாடகைக்கு விடப்படும்.

T.P:- 077 2017824

(CS 12592.16.)

ஆட்டிறைச்சிக் கடை கிளை ஆரம்பம்

திருநெல்வேலி சந்தையில் அமைந்துள்ள ஆட்டிறைச்சிக் கடையின் இன்னொரு கிளை கோண்டாவில் ஸ்ரேசன் வீதியில் கடந்த 03.01.2018 புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டு ள்ளது. என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தொர்புகளுக்கு

077 113 7471

(CS 12589.16.)

ஓராண்டு நினைவஞ்சலி

கந்தர் குலோத்துங்கம்

(துரைசிங்கம் - கார்மெக்கானிக்)

மலர்வு 15.05.1937

உதிர்வு 17.12.2016

ஊரார் உடன் பிறப்பினர் உதவிய உத்தமரே!
உங்களை இழந்து ஓராண்டு நினைவு இத்தினத்தில்!
உங்கள் ஆத்மா சாந்தியுற கண்கலங்கி இத்தரணியில்!
உளமார அவன்தாள் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

(CS.12579) (13.7)

உமதருமை மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.

கண்ணீர் அஞ்சலி

இந்திரசித்து விக்கினேஸ்வரன்

(லலிதா ஜீவல்லறி உரிமையாளர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

ராஜா கிறீம் ஹவுஸ், 36 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(cs 12572)(12-17)

உரிமையாளரும், ஊழியர்களும்.

Institute of Junior - I.W.M.S.

[Spoken & Written Classes]

மாதாந்தம் பரீட்சைகள் நடைபெறும்.

☆Elocution Classes எலக்கியூசன் வகுப்புக்கள் (Spoken & Written) 4, வயதிலிருந்து 13 வயதுவரை
[Initial, Elementary, Gradeone, Transitional, Grade Two, Preliminary]

☆Normal English Classes → Gr-1 – Gr-6

☆தமிழ் வகுப்புக்கள் 5 வயதிலிருந்து 7 வயது வரை

15/01/2018 க்கு முன் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

926, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(சட்டநாதர் கோவில் முன்பு)

077 1999 630

18 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

நமசிவாயம் வாதவூரர்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மாவிலங்கை, அளவெட்டி.

அன்னை மடியில் 10.11.1924 ஆண்டவன் அடியில் 27.12.1999

அன்போடு அரவணைத்து ஆசையாய் அறிவுரைகள் கூறி
எமையெல்லாம் ஏற்றமுடன் வாழவைத்த அப்பா!
நீங்கள் எமை விட்டு சென்று பதினெட்டு ஆண்டுகள்
சென்றாலும் எம் இதயத்தில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

மாவிலங்கை, அளவெட்டி வடக்கு.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.

9 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 25 . 02 . 1947

மறைவு 16 . 12 . 2008

அமரர் நல்லையா தவகுலசிங்கம் (தவம்)

(முன்னாள் சமேந்து கட்டுத்தாபன உத்தியோகத்தர் தவம் அக்ரோ நிறுவன உரிமையாளர்)

திதி:-05.01.2018

அன்பின் திருவுருவே ஆசையின் உறைவிடமே
இனிமையாய்ப் பழகிய ஈகையில் வள்ளலே
உந்தமானாய் வாழ்ந்து ஊரறிய போற்றிய உத்தமரே
எமை விட்டுப் பிரிந்து 9 ஆண்டுகள் சென்றாலும்
மாறவில்லை தங்களது நினைவுகள் எம்மைவிட்டு

"மதுரை" நீதி மன்ற வீதி, மல்லாகம்.

குடும்பத்தினர். ஏழாலை வடக்கு, ஏழாலை.

(Cs/12593)(16)

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 . 06 . 1929

இறப்பு 05 . 01 . 2013

அமரர் வைத்தி. கணபதிப்பிள்ளை

மண்டைதீவு

மனவொளிகளில் உம்முகம்
இந் நினைவொளியில் தோன்றுதே...
காலங்கள் கடந்தும் – உம்
நினைவுகள் கண்ணுக்குள்ளே ஊடுருவுகிறது
இன்ப உணர்வுகளையும் உம்மால் கண்டு
கழித்த நாட்கள் கடந்து உமை நினைத்து
கண்ணீர் மல்கும் நாட்கள் வந்ததே...
எத்தனை ஆண்டுகள் மாறினாலும்
உம் நினைவு எம்முள் அகலாது – ஐயா
ஆற்பெரும் துயர் தந்து நீர் பிரிந்து ஐந்தாண்டு ஆகியும்
உம் ஒவ்வொரு அசைவும் எம்முடன் இருக்குமென மனசாந்தி
கொண்டு – உம் பாதத்திற்கு மலர் சாந்தி செலுத்துகின்றோம்.

இல.16 மடம் வீதி, யாழ்ப்பாணம்.

(cs 12561)(12-17)

என்றும் உலகின் நினைவுகளுடன் குடும்பத்தினர்.

குருதிச் சுற்றோட்டம் சீரின்மை

ஏற்படும் பாதிப்புகள்

எமது உடலில் உள்ள சுற்றோட்டத் தொகுதி அமைப்பு சிறிது நேரம் கூட ஓய்வு எடுப்பதில்லை. ஒவ்வொரு நொடியும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. உடலில் ஒரு அடிபடும் பொழுதோ குருதி வெளியேறும் பொழுதோ, குருதியேற்ற வேண்டிய நிலை ஏற்படும் இத்தகு நிலைமைகளின் போதுமாத்திரமே அல்லது அக்கறை காட்டப்படுகின்றது. 56 லீற்றர் குருதி எமது உடல் முழுவதும் சுற்றிக் கொண்டே இருக்கும். இந்தக் குருதி ஓட்டம் தான்.

- ஒட்சிசனை கலங்களுக்கும், சதைகளுக்கும் அளிக்கின்றது.
- கலங்களுக்கு அமினோ அமிலம், குளுக்கோஸ் மற்றும் பல சத்துகளை அளிக்கின்றது.
- கழிவு, காபன்டை ஒட்சிசனை, லக்டிக் ஆசிட், யூரியா இவற்றினை நீக்குகின்றது.
- உடலினை நோயிலிருந்து காக்கின்றது.
- ஓமோன்களை எடுத்துச் செல்கின்றது.
- அமிலத்தன்மையினையும், உடல் உஷ்ணத்தையும் சீராய் காக்கின்றது.
- ப்ளேட்லெட்ஸ் குருதி இறுக உதவும்.

சிவப்பு அணுக்கள் ஒட்சிசனை உள்ளெடுத்து காபனீர் ஒக்சைட்டை நீக்குகின்றது. ஐதரசன் மூலம் றிபி அளவினை சீராய் வைக்கின்றது.
வெள்ளை அணுக்கள்கிருமிகளுடன் போராடுகின்றன.



ப்ளாஸ்மாரத்தத்தின் 50 சதவீதம் இது. காபனீர் ஒக்சைட்க்ளுகோஸ், ஓமோன்கள், புரதம், கொழுப்பு, விற்றமின்கள், தாது உப்புகளை சுமந்து செல்வதே இதுதான்.
இப்படி ஒரு மாபெரும் வேலை எமது உடலினுள் இயங்கிக் கொண்டே இருக்கின்றது.
இந்தக் குருதி ஓட்டம் சீராக இல்லை என்றால் ஏற்படும் பாதிப்புகளைப் பார்ப்போம்.

◆ மூளையின் செயல் திறன் குறையும்: 15 தொடக்கம் 20 சதவீத குருதி ஓட்டம் மூளைக்கே தேவைப்படும். இது குறைந்தால் மறதி, ஒருங்கிணைப்பில் சிரமம் போன்றவை ஏற்படும். பேச்சில் தடுமாற்றம் இருக்கும்.

பொதுவில் முறையான உடற்பயிற்சி செய்யும் போது குருதி ஓட்டம் சீராக இருக்கின்றது.

கை கால்கள் சில்லிப்பு

உடலில் குருதி ஓட்டம் சீராக இல்லை என்றால் கை, கால்களில் சில்லிப்பு, மரத்து போதல் ஏற்படும். காயங்கள் ஆற கூடுதல் காலம் ஆகும். எளிதில் உடையும் நகம், நிறம் மாறிய சருமம் இவை அறிகுறிகளாக இருக்கும். நீரிழிவு நோயாளிகளுக்கு இவ்வாறு குறைந்த குருதி ஓட்டப் பாதிப்பு ஏற்படலாம்.

சோர்வு

நாம் எப்படிச் சாப்பிடாவிட்டால் சோர்ந்து விடுவோமோ அதே போன்று, உடலில் மிக நுண்ணிய அளவில் கலங்களுக்குத் தேவையான அளவு சத்தும், ஒட்சிசன் கிடைக்கவில்லை என்றால் அவைகளால் செயற்பட இயலாது. சோர்ந்த தசைகள், மூச்சு வாங்குதல், அதிக சோர்வு இவை அதன் அறிகுறிகளாகத் தெரியும்.

பசியின்மை

குருதி ஓட்டம் சீராய் இல்லையெனில் சீரண மண்டலம் பாதிக்கப்படும். கல்லீரல் குருதியைச் சுத்திகரிக்கும். குருதியில் உள்ள சக்தியினையும் எடுத்துக் கொள்ளும். நிறை குறைதல், பசியின்மை இவை சீரான குருதி ஓட்டமின்மையின் பாதிப்பாக இருக்கலாம்.

நரம்பு வீக்க நோய்

இந்தப் பாதிப்பு பொருத்தமற்ற குருதி ஓட்டத்தின் அறிகுறி. இந்தக் குருதி குழாய்களில் இருக்கும் வால்வுகள் வலுவிழக்கின்றன. இதனால் குருதி ஓட்டப் பாதிப்பு ஏற்படலாம். சரி இந்தப் பாதிப்புகளை எப்படித் தவிர்ப்பது. நல்ல உடற்பயிற்சியும், ஓர் இடத்திலேயே கொள்ளாது இல்லாமல் நடந்து கொண்டே இருப்பதும் முதல் தீர்வாக அமையும்.
தினமும் சிறிய அளவு சில பருப்புக்களைச் சாப்பிடுவது ஆரோக்கியம் தரும். ஆயுளை நீட்டிக்கும். இது இன்று அதிகமாக பேசப்படும் வார்த்தைகள். இந்தச் சிறிய பருப்பு வகைகளுக்கு அப்படி என்னதான் முக்கியத்துவம் உள்ளது. இவற்றில் அதிக அளவு 'ஆன்டி ஆக்ஸிடன்ட்ஸ்' உள்ளது. இவை கெட்ட கொழுப்பினை குறைப்பது மட்டுமல்ல. புற்றுநோய், சர்க்கரை நோய், இருதய நோய் இவற்றின் பாதிப்பினை குறைக்கின்றன. பல கொட்டைகள் பூரித கொழுப்பு உடையதாக இருந்தாலும் கீழ் கூறப்படும் கொட்டைகள் நல்ல ஒற்றை அதிக மிதமான கொழுப்பு உடையதாகவும், நல்ல விற்றமின்கள், தாது உப்புக்கள் கொண்டதாகவும் உள்ளது.

பாதாம்

பாதாம் பருப்புக்கு எப்பொழுதும் மிக உயர்ந்த இடம் உண்டு. இதில் உள்ள அபரிமிதமான விற்றமின் ஈ, கல்சியம், மக்னீசியம், நார்சத்து, ரிபோப்ளேவின், இரும்புச் சத்து என்பன அதிகம் உள்ளன. இவை எண்ணற்ற நன்மைகளை உடலுக்குத் தருகின்றன. இவை நீரிழிவு நோயினால் ஏற்படும் வீக்கத்தினை குறைக்கின்றன.

பிஸ்தா

இது உடலுக்கு நல்ல கொழுப்பினைத் தருகின்றன. உயர் குருதி அழுத்தத்தினை குறைக்கின்றது. இருதய நோய் ஏற்படும் வாய்ப்பினை அதிகம் குறைக்கின்றது.
இதில் மக்னீசியம், காப்பர், விற்றமின் பி6 என்பன இருக்கின்றன. குருதியில்தில் என உணவுக்குப்பின்சர்க்கரையின் அளவு உயர்வதை இது தடுக்கின்றது.
வால்நட்: வாதுமை கொட்டை என தமிழில் கூறப்படுகின்றது. இதில் ஓமேகா 3, ஏ.எல்.ஏ. போன்றவை கெட்ட கொழுப்பினை குறைக்கின்றது. உயர் குருதி அழுத்தத்தினை குறைக்கின்றது. இருதயப் பாதிப்பினை குறைக்கின்றது. உடலில் வீக்கத்தினை குறைக்கின்றது. மூளையின் செயல் திறன் கூடுகின்றது.

முந்திரி

முந்திரிப் பருப்பில் ஆன்ட்டி ஆக்ஸிடன்ட், இரும்பு, காப்பர், மக்னீசிய சத்து இருக்கின்றது. சிறு அளவில் எடுத்துக் கொள்வது பல நோய்களை தவிர்ப்பதாக இருக்கும். மற்றும் குளிர்ந்த நீரில் குளித்தல், சிறிதளவு அடர்ந்த சொக்லேட் எடுத்துக் கொள்ளுதல், *நல்ல அளவான எடை பராமரித்தல், மசாஜ், புகைப்பிடிப்பதை தவிர்த்தல்.
போன்ற நல்ல சீரான குருதி ஓட்டத்தினை அளிக்கும்.

கண்ணீர் அஞ்சலி

எமது அமைச்சின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் **திரு. இ.சுரேந்திரநாதன்** அவர்களுடைய பாசமிகு தந்தையார்.

அமரர் கனகசபை இலங்கநாதன்

அவர்கள் 04.01.2018 வியாழக்கிழமை இறைபதம் டைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளரும் உத்தியோகத்தர்களும்.
விவசாய அமைச்சு, வடமாகாணம். (CS 12598,16)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
முத்துத்தம்பி ஆனந்தராஜா
மண்ணில் 15.01.1939
விண்ணில் 06.12.2017

எமது குடும்பத்தின் தலைவராய் வாழ்ந்து வழிகாட்டி எம்மையெல்லாம் அரவணைத்து அன்பு காட்டி வாழ்ந்த அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி வாயிலாகவும், துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும், மலர் வளையங்கள் மூலமாகவும் துயர்பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மற்றும் நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள், உத்தியோகத்தர்கள், நேரில்வந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

இல.29, சந்தனமாதா ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (CS/12551)(11)
மனைவி, மக்கள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்.

தசாக கிரஹயக்ஞ அறிவித்தல்

நிகழும் ஹேவிளிம்பி வருடம் மார்கழி மாதம் 13 ஆம் நாள் (28.12.2017) வியாழக்கிழமை சூர்யோதத்தில் ஸ்ரீ கைலாச நாதரின் பாதார விந்தங்களில் என்றும் நிலையான கைலாச பிராப்தி அடைந்த

சாவித்திரிஅம்மா குமாரசாமிசர்மா

அவர்களின் ஆத்மா சாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

மார்கழி 22 (06.01.2018) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு தசாகம்
மார்கழி 23 (07.01.2018) ஞாயிற்றுக்கிழமை ஏகோதிட்டம் மாசிகம்
மார்கழி 24 (08.01.2018) திங்கட்கிழமை சபிண்டீகரணம்
மார்கழி 25 (09.01.2018) செவ்வாய்க்கிழமை கிருகயக்ஞம்

மேற்படி ஆத்ம சாந்தி கிரியைகளிலும் 09.01.2018 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு இல்லத்தில் நடைபெறவுள்ள சமாராதனையிலும் கலந்து கைலாச பிராப்தி பெற்ற எங்களின் தாயாரின் ஆத்ம சாந்திக்காக ஸ்ரீ கைலாசநாதரை பிரார்த்திப்போமாக.

343, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம். 021 222 2656 (cs/12584)(8)
குடும்பத்தினர்.

இது புதுசு

பெண்களுக்கான மாலை வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

ஏ.பி.சி. அணி அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 5
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 23ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஏ.பி.சி. அணி வெற்றிபெற்றது.
யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஏ.பி.சி. அணியை எதிர்த்து யுனிபைட் அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் ஏ.பி.சி. அணி வெற்றி பெற்றது. (ம-23)

ஸ்பைடர் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 5
அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் தனது 90ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய மனோ பிறீமியர் லீக் கிண்ணத்திற்கான கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் மனோ ஸ்பைடர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. மனோ ஸ்பைடர் அணியை எதிர்த்து மனோ வாரியஸ் அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியிலும் கோல்கள் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது ஸ்பைடர் அணி. (ம-422)

கலைமதி, டயமன்ஸ் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், ஜன. 5
நாச்சிமார் கோயிலடி சிறி அம்பாள் விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் கலைமதி, டயமன்ஸ் அணிகள் வெற்றி பெற்றன.
சிறிஅம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம் பெற்றுவருகின்றன. நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலை மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் கலைமதி அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

மனோ குயின்ஸ் அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜன. 5
மனோகரா விளையாட்டு கழகம் தனது 90ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய மனோ பிறீமியர் லீக் கிண்ணத்துக்கான வலைப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் மனோ குயின்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. மனோ குயின்ஸ் அணியை எதிர்த்து மனோ சின்றல்லாஸ் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய குயின்ஸ் அணி 15:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது. (ம-422)

நல்லூர் செயலக சதுரங்கத் தொடர் நாளைமறுதினம்

யாழ்ப்பாணம், ஜன. 5
நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான சதுரங்கத் தொடர் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி உள்ளரங்கில் காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-23)

இன்றைய மோதல்கள்

மாவத்தை வி.க. கால்பந்தாட்டம்
அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மகாத்மா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

நியூட்டன் வி.கழக கால்பந்துத் தொடர்
சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணா சிலையடி விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி தோவுள்ளது.

சிறிஅம்பாள் வி.க. கால்பந்துத் தொடர்
நாச்சிமார் கோயிலடி சிறிஅம்பாள் விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 23ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு இடம்பெறும் ஆட்டத்தில் ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்மதீனா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

உடுவில் பிரதேச செயலக விளையாட்டுக்கள் நாளை

யாழ்ப்பாணம், ஜன. 5
உடுவில் பிரதேச செயலக கிராம சேவையாளர் பிரிவுக் குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்டம், கபடி மற்றும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள்நாளைசனிக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-23)



லா லிகா தொடரில் இன்று நடைபெறவுள்ள செல்டா விகோ அணிக்கெதிரான ஆட்டத்துக்காக நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது ரியல் மட்ரிட். ரியல் மட்ரிட் கடந்த ஆட்டத்தில் பார்சிலோனாவுடன் தோல்வியடைந்த காரணத்தால் இன்றைய ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணியின் மீது பெரியளவில் எதிர்பார்ப்பு நிலவுகிறது. (ம)

இங்கிலாந்துக்கு எதிராக

நீக்கப்பட்டார் மக்ஸ்வெல்

இங்கிலாந்துக்கு எதிராக நடைபெறவுள்ள ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் இருந்து ஆஸ்திரேலிய வீரர் மக்ஸ்வெல் நீக்கப் பட்டுள்ளார்.

ஆஷஸ் தொடர் முடிந்த பின்னர் ஐந்து ஆட்டங் களைக் கொண்ட ஒருநாள் தொடர் நடை பெறவுள்ளது. இந்தத் தொடருக்கான ஆஸ்திரே லிய அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட் டது. மக்ஸ்வெல் நீக்கப்பட்டுள்ள அதேநேரம் பதில் வீரராக லின் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய அணி விவரம்: சிமித் (தலைவர்), வோர்ணர், பின்ஞ், மிச்செல் மார்ஷ், ஸ்ரொய் னிஸ், ஹெட், கிறிஸ் லின், பெய்ன், கம்மின்ஸ், ஸ்ராக், ஹசில்வுட், டை, சம்பா, ரிச்சட்சன்.

(ம)

முர்ரே விலகல்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் இருந்து காயம் காரணமாக விலகினார் பிரிட்டன் வீரரான அன்டி முர்ரே.

கடந்த ஆறு மாதங்களாக ஓய்வில் இருந்து வருகிறார் முர்ரே. அண்மையில் இவர் அபுதாபியில் இடம்பெற்ற காட்சி ஆட்டமொன்றில் கலந்துகொண்டார். இத னால் இந்த மாதத்தின் பிற் பகுதியில் ஆரம்பமாகவுள்ள பன்னாட்டு அந்தஸ்துபெற்ற தொடரான ஆஸ்திரேலியத் தொடரில் கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் மீண்டும் காயமடைந்துள்ளதை அடுத்து ஆஸ்திரேலியத் தொடரில் இருந்து அவர் விலகியுள்ளார். (ம)

இங்கிலாந்து அணி சிறப்பான ஆரம்பம்

ஆஷஸ் தொடரின் ஐந்தாவது ஆட் டத்தில் நேற்றைய முதல் நாளில் இங்கிலாந்து அணி சிறந்த ஆரம்பம் கண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது. இங்கி லாந்து அணியின் ஆரம்ப வீரர்களாக அலிஸ்டர் குக் மற்றும் ஸ்ரோன்மன். ஆரம்பத்தில் சிறிது அடித்தாட எத்தனித் தார் ஸ்ரோன்மன். அவர் 24 பந்துக ளில் 24 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் கம்மின்ஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். கடந்த ஆட்டத்தில் இரட்டைச் சதம் விளாசியிருந்த அலிஸ் டர் குக் 39 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். வீழ்த்தியவர் ஹசில்வூட். வின்ஸால் முடிந்தது 25 ஓட்டங்கள். அணித்தலைவர் ரூட்டுடன் இணைந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார் மலன். இருவரும் அரைச்சதம் கடந்த னர். 83 ஓட்டங்களுடன் ஆட்டமிழந் தார் ரூட்.

நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 233 ஓட்டங்களைப் பெற்றுள்ளது இங் கிலாந்து அணி. மலன் 55 ஓட்டங்களு டன் களத்தில் உள்ளார்.

(ம)

தவான் தயார்

காயத்தால் அவதிப்பட்டுவந்த இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தவான், காயத் தில் இருந்து தற்போது மீண்டுள்ளார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்தது.

தென்னாபிரிக்கத் தொடருக்கான இந் திய அணியில் இடம்பிடித்திருந்தார் தவான். இந்திய அணி இந்தியாவில் இருந்து புறப்படும் போது தவானின் காலில் காயம் ஏற்பட் டிருந்தது. காயத்துட னேயே அவர் தென்னாபிரிக்கா வுக்குச் சென்றார். இதனால் இன்று நடைபெறவுள்ள முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் தவான் விளையாடுவாரா என்பது தொடர்பில் சந்தேகம் நில வியது. இந்த நிலையில் காயத்தில் இருந்து தவான் முழுமையாகக் குணமடைந் துள்ளார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நேற்று அறி வித்தது.

தென்னாபிரிக்க ஆடு களங்களில் பவுன்ஸ் தன்மை இயல் பாகவே இருக்கும். பவுன்ஸ் ஆடுகளங் களில் தவான் சிறப் பாக விளையாட வல்லவர். இதனால் அவர் விலகியிருந் தால் அல்லது இன்று விலக்கப்பட்டால் அது இந்திய அணிக்கு பின்னடைவாகவே அமையும்.

தவான் இன்று களமிறங்கினால் அவருடன் முரளி விஜய்யா அல்லது லோகேஸ் ராகுலா ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்குவது என்ற கேள்வி எழும். முரளி விஜய் தென்னாபிரிக்க ஆடுகளங்களில் விளையாடிப் பழக்கமுடையவர். இதனால் அவர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்க அதிக வாய்ப்பு உள்ளது என்று கருதப்படுகிறது.

(ம)

இந்தியா – தென்னாபிரிக்கா ஆட்டம் இன்று

இந்தியா - தென்னாபிரிக்கா அணிக ளுக்கு இடையிலான மூன்று ஆட்டங் களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

இந்திய அணி தென்னாபிரிக்காவுக் குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள் ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் மூவகைத் தொடர்களும் நடைபெறவுள்ளது. முதலாவதாக டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமா கிறது.

தென்னாபிரிக்க ஆடுகளங்கள் வேகப் பந்து வீச்சுக்குச் சாதகமானவை. இத னால் தென்னாபிரிக்காவில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய வகையில் இந்தியா வும் தனது வேகப்பந்துவீச்சு வரிசை யைப் பலப்படுத்தியுள்ளது. இந்திய அணி இதற்கு முன்னர் தென்னாபிரிக் காவில் வைத்து டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியதில்லை. ஆனால் இம் முறை அது சாத்தியப்படும் நம்பிக் கையை இந்திய அணியின் தற்போ தைய வீரர்களும் முன்னாள் வீரர்கள் சிலரும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்திய அணியின் விவரம்: கோக்லி (தலைவர்), ரகானே, அஸ்வின், பும்ரா, தவான், ஜடேயா, புவனேஸ் வர் குமார், சமி, பாண்டியா, பார்திவ் பட்டேல், புஜாரா, ராகுல், சகா, இசாந் சர்மா, ரோகித் சர்மா, முரளி விஜய்.

தென்னாபிரிக்க அணி விவரம்: பிளாசிஸ் (தலைவர்), அம்லா, பவுமா, பேர்ண், குயின்டன், வில்லியர்ஸ், எல்கர், மகாராஜ், மார்க்ரம், மோர்கல், மொறிஸ், பிளுக்வையோ, பிளன்டர், ரபாடா, ஸ்ரெய்ன். (ம)

தேவை
கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டவுள்ள
குளிர் களி
(Ice - cream)
தயாரிப்பு நிறுவனத்துக்கு குறித்த துறையில் குறைந்தது 05 வருட அனுபவம் இருப்பதுடன், G.C.E. (O/L) அல்லது G.C.E (A/L) தகுதியுடைய முகாமையாளர் தேவை.
தொடர்புகளுக்கு: உஷாந் - 077 153 3796
மின்னஞ்சல்: ancheneye@live.co.uk

சதாபொன்ஸ்
Sathapons - அல்வாய்
A/L 2020, A/L
மீட்டல் வகுப்புக்கள்
கலை, வர்த்தகம்
ஆரம்பம் – 06.01.2018
மாலை 3.00

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம் (இரு இடத்திலும்) கே. கே. எஸ் றோட், இணுவில்
A/L 2020
தொழில் நுட்பப் பிரிவு
ஆரம்பம்:- 06.01.2018 சனிக்கிழமை
தொழில்நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்களும் யாழ்நகர் பிரபல பாடசாலை ஆசிரியர்களும் இணைந்து கற்பிக்கின்றனர்.
Engineering Technology
Mr.ஜெயக்குமார். Mr.காந்தரூபன். Mr.விஜயபாலா.
Science for Technology
Mr.ரவீந்திரன். Mr.செந்தூரன்.
Bio System Technology
Mr.நிரோஜன். Mr.அருள்நேசன்.
Ict - Mr.ஆயவன். Media - Mr.கஜிதரன்.
Agriculture - Mr.சஜீவன்.
Geography - Mr.குமரன்.
ஏனையபாடங்களும்நடைபெறுகின்றன
புதிய பிரிவு ஆரம்பம்
யாழ்.நகர்: 8.00 Am. இணுவில்: 11.30 Am
நீங்கள் விரும்பிய இடங்களில் உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்
A/L 2018, 2019 சனி.ஞாயிறு பிரிவுகள் நடை பெறுகின்றன.

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | கே.கே.எஸ். வீதி, இணுவில்.
(இரு இடங்களிலும்)
A/L 2020
கலை, வர்த்தகப் பிரிவு.
ஆரம்பம்: 06.01.2018 சனிக்கிழமை
யாழ். மாவட்டத்தின் பிரபல முன்னணி ஆசிரியர்கள் ஒன்றிணைந்து கற்பிக்கின்றார்கள்.

பொருளியல்	S.மகேந்திரன், R.தர்ஷன்
கணக்கீடு	B.முகுந்தன்
வணிகக்கல்வி	S.பிரதிபன்
தமிழ்	N.சத்தியவேந்தன்
இந்து நாகரீகம்	P.ஜோதீஸ்வரன், A.A. மேனன்
புவியியல்	P.S.குமரன்
வரலாறு	K.சுதன்
அரசியல்	S.கோகுலன்
நாடகம்	T.ஜெயசுதன்
அளவையியல்	N.ஜெயசுரேஸ், S.சயந்தன்
கிறிஸ்தவம், கிறி.நா	A.யுபின்ஷன்
ICT	T.ஆயவன்
ஊடகவியல்	N.கஜிதரன்
இந்து சமயம்	T.மனோஜ்
விவசாயம்	S.சஜீபன்
ஆங்கிலம்	N.நிஷாந்தன்
சங்கீதம்	S.குமுதினி
சித்திரம்	S.சிறீஸ்
மனைப்பொருளியல்	S.றஜிதா

	கலைப் பிரிவு	வர்த்தகப் பிரிவு
யாழ்.நகர்	8.00am	8.00am
இணுவில்	8.00am	2.00pm

A/L Day Class ஆரம்பமாகி நடைபெறுகின்றன. நீங்கள் விரும்பிய இடங்களில் உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

இதயன் விளம்பர தொடர்புகளுக்கு 021 493 1111

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L 2020
ஆரம்பம்: 06-01-2018 சனி காலை 9.00மணி
வர்த்தகப் பிரிவு
கணக்கீடு: K.பாகைஜன் | பொருளியல்: NB.கஜீதரன்
வணிகக்கல்வி: S.K.பாசைபேஷ்
கலைப் பிரிவு

பாடம்	ஆனைப்பந்தி	யாழ்நகர்
தமிழ்	A.K.கீர்த்திராஜன்	T.S.குகன்
இந்துநாகரிகம்	T.ஸ்ரீஸ்	T.ஸ்ரீஸ்
அளவையியல்	P.கமல்	S.பவன்
அரசியல்	T.தாரகன்	G.ஸ்ரீரஞ்சித்
புவியியல்	S.P.கரன்	S.சபரிதன்
நாடகம்	S.சுகந்தன்	S.சுகந்தன்
வரலாறு	S.S.தாஸ்	S.S.தாஸ்
ஊடகக்கல்வி	V.நவநீதன்	V.நவநீதன்
ICT	T.தேவதர்ஷன்	T.தேவதர்ஷன்
விவசாயம்	R.விக்கி	K.ஜெயந்தன்

கணித, உயிரியல் பிரிவு

பாடம்	ஆனைப்பந்தி	யாழ்நகர்
இரசாயனவியல்	S.வாசு	V.K.நந்தா
பௌதிகவியல்	N.எடிசன்	A.கபில்தாஸ்
கணிதம்	S.விமலநாதன்	S.விமலநாதன்
உயிரியல்	S.சுதா	R.நிருஜன்

தொழில்நுட்பப் பிரிவு

பாடம்	ஆனைப்பந்தி	யாழ்நகர்
Science for Tech	S.வாசு	A.அருண்ராஜ்
Engineering Tec	S.உதிஸ்	K.திவாகரன்
Bio Tech	S.சுதா	S.சிவரங்கன்

கடந்த A/L 2017 பரீட்சையில் அதிகளவு 3A வெறுபேற்றினை பெற்றுக் கொண்ட ஓரே ஒரு கல்வி நிறுவனம்...
வர்த்தகப் பிரிவு: 3A – 22 பேர், 2AB – 17 பேர்
கலைப் பிரிவு: 3A – 4 பேர், 2AB – 6 பேர்

FALC FRENCH LANGUAGE CENTRE
FRENCH வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France- 2007)
Diploma Classes : DELF A1, A2, B1, B2.
40, பலாலி வீதி, இலுப்பையடி. 0779 789 456 / 021 221 7781. ஆரம்பம்: 06.01.18 சனி காலை 10மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973. ஆரம்பம்: 08.01.18 மாலை 3.30மணி
திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடை பெறுகின்றன.

Beacon
வெலிங்டன் சந்தி (லிங்கம் கூல்பார் அருகாமை), யாழ்ப்பாணம்.
பௌதிகவியல்: திரு.P.ராகவா (B.Sc) பிரபல ஆசிரியர் (M.Sc, Physics)
இரசாயனவியல்: திரு.S.ஸ்ரீதரன் (M.Sc) திரு.S.ஏகன் (B.Sc Spl.che)
உயிரியல்: திரு.P.ஸ்ரீதரன் (M.Sc) திரு.கௌதமன் (B.Sc.Spl.Bio)
இணை.கணிதம்: திரு.T.S.தனீதரன் (B.Sc) திரு.T.சுகந்தன் (B.Sc)
A/L கணித, உயிரியல் பிரிவு - 2020
Day Class ஆரம்பம்: 06.01.2018 077 069 0654

A/L தொழில்நுட்பப் பிரிவிற்கு தனித்துவமான ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்
விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தொடர்ந்து மூன்றாவது வருடமாகவும் A/L தொழில் நுட்பப் பிரிவு பெறுபேறுகளில் தேசிய நிலையிலும், மாவட்ட நிலையிலும் இலங்கையில் அதிகளவான பெறுபேறுகளைப் பெற்ற பெருமையுடன்
புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புக்கு 077 248 7774
தரம், தனித்துவம், உயர்ந்தபெறுபேறு இதுவே எமது இலக்கு

F.S Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

பல்கலைக் கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவம்
பல்கலைக்கழக அனுமதிக்கான முதல் விண்ணப்பப் படிவம் இன்று (05.01.2018) வெள்ளிக்கிழமையில் இருந்து விற்பனையாகிறது.
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
021 222 6693

BARATHY
சித்தன்கேணி
A/L 2020
கலை, வர்த்தகப்பிரிவு
யாழ். நகரில் பிரபல ஆசிரியர்கள் ஒன்றிணைந்து கற்பிக்கின்றார்கள்.
ஆரம்பம் - 05.10.2018
வெள்ளிக்கிழமை நேரம் - 3.00 pm
உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளுங்கள்.

பொருளியில்	திரு K. பிரதீபன்
கணக்கீடு	திரு V. திருக்குமரன்
வணிகக்கல்வி	திரு S.K.B.பாலசபேஷ்
ICT	திரு T.தேவதர்ஷன்
தமிழ்	திரு N.பாலா
இந்து நாகரீகம்	திரு A.மேனன்
இந்து சமயம்	திரு T.மனோஜ்
புவியியல்	திரு P.S. குமரன்
வரலாறு	திரு K.சுதன்
அரசியல்	திரு S.கோகுலன்
நாடா அரங்கியல்	திரு T.ஜெயசுதன்
ஊடகவியல்	திரு N.கஜிதரன்
அளவையியல்	திரு E.S பவன்
கிறிஸ்தவம்	திரு A.யுபின்ஷன்
விவசாயம்	திரு S.சஜீபன்
சித்திரம்	S.சிறில்
ஆங்கிலம்	N.நிஷாந்தன்

A/L Day Class கலை, வர்த்தகப்பிரிவு உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.

இறுதி கருத்தரங்குகள்
இம்மாதம் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கு
கணக்காளர் போட்டிப்பரீட்சை
சனி.ஞாயிறு 9.00-4.00
சுங்க பரிசோதகர்
சனி.ஞாயிறு 9.00-3.00
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு யாழ்.நகர்

DCM
யாழ்.நகர்.
A/L 2020
கலை, வர்த்தக தொழில்நுட்பப் பிரிவுகள் ஆரம்பம்
ஜனவரி 06
8.00 am

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
SLPS Ltd
பிரதி ஞாயிறு 9.30 → 2.00
திறந்த பல்கலைக்கழக சட்டமாணி நுழைவு
சனி, ஞாயிறு 1.00 → 5.00
பல்கலைக்கழக உதவி பதிவாளர் போன்ற பரீட்சைகள்
சனி, ஞாயிறு 2.00 → 5.00
பொது உளச்சார்பு
சனி, ஞாயிறு 3.00 → 5.00
தொடர்புகளுக்கு. 076 688 3394
D.M.I
வெலிங்டன் சந்தி

விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com

புத்தாண்டுச் சலுகை
பனர் பிரதியாக்கம் 25.00
மூர்த்தி டிஜிற்றல்
62/20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.